ரிஷப விஜயம்.

K. V. பஞ்சநத ஐயர்,
(*Of the Accountant General's Office, Madras,*)
அவர்களால் இயற்றப்பட்டது.

சென்னை, மயிலாப்பூர்:
மதராஸ் லா ஜர்னல் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

 1930 [விலை 12 அணா

ஆக்கியோன் முன்னுரை.

வடமொழியின்கண் விளங்கிவரும் பதினெண் புராணங்களுள் ஒன்றும் ஸ்காந்தத்தின் ப்ரஹ்மோத்தர கண்டத்திற் குறிப்பிட்டுள்ள விச்சரிதை பற்பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுளதேனும், ப்ரக்ருதியிடத்துள்ள பற்றுதலே கர்மாவுக்கேற்ற தூண்டுதலாக அக்கர்மவசத்தாலேற்படும் பற்பல ஜன்மாக்களுள் ஜீவன் ஆத்மிக தைவிக பௌதிகமாம் தாபத்ரயங்களை மேன்மேலு மநுபவித்துப் பிரவ்ருத்தியின் ச்ரமத்தினிறுதி கண்டு, அந்நிலையின்கண் நிவ்ருத்தி நெறியின் இரகசியம் விளங்க அம்மார்க்கத்தைப் பின்பற்றி, அதுகாறுந் தானடைந்துள்ள ப்ரக்ருதியின் பந்தம் அநாதி அவித்யாவாஸனையாய்த் தன்னுள்ளே நின்று நிவ்ருத்தி நெறியின் இடையிடையே தடை செய்துவர, ஆங்காங்கு ஆன்மாவின் முதிர்ச்சிகொடடைந்த அறிவின் வலிமை கொண்டதைச் சிறிதுசிறிதே பலகாலும் நசிக்கச்செய்து, இறுதியில் ப்ரக்ருதியின் பந்தம்முற்றும் அற்றுப் பரமனே யாவும் எனக் கண்டு, அவனருள்கொடவனைப்பன்முறையுந் தொழுது, தன்னைப் பலகாலுந் தடைசெய்து வந்த ப்ரக்ருதியு மாங்கே தனைத் தொழு நிலையில் ச்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் எனுமுத் தொழிலுங் கைக்கொண்டு, லோக ஸம்ரக்ஷணத்தைத்தானே நிர்வஹித்துவரும் தந்தையின் மைந்தனும் தந்தையாய் இறுதியில் விளங்கும் அத்வைத நிலையின் பரமரஹஸ்யத்தைச்

சுருங்கச்சொல்லி விளங்கவைத்த நிச்சரிதையெனக் காணு மாறு மொழிபெயர்க்கப்பட்டிலதாதலின், என் சிற்றறிவிற் கெட்டியவித மதை யவ்வாறு விளக்கிக்காட்டவென்றே இச்சரிதையை நாடகரூபமாக வியற்றத்துணிந்தேன்.

அத்தகைய நிலையையடைந்துள்ள பரமசிவத் திருத் தொண்டருளொருவரே நானியற்றிய இந்நாடகத்தின் ஸூத்ரதாரராய் விளங்கும் ரிஷபயோகியராவர். இவரைச் சிலர் பரமசிவத்தின் திரு அவதாரங்களுளொன்றெனவே கருதுவர். இச்சரிதையின்கண் ஆங்காங்கு இவர் ஈசன் திருவருள் கொடியற்றிவருவன யாவும் ஊன்றிப்பார்த்திடு மளவில்,

"அணோரணீயான் மஹதோ மஹீயான்
ஆத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம்"
என்ற உபநிஷத் வாக்யத்தை யநுஸரித்தும்
"யச்ச கிஞ்சித் ஜகத்ஸர்வம் த்ருச்யதே ச்ரூயதேபிவா
அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:"

என்ற புருஷஸூக்த வாசகத்தை யநுஸரித்தும், விளக் கின் ஜ்வாலையுட்டோன்றும் ஜ்யோதியே அந்த ஜ்வாலையின் புறம்பேயும் ஒளியாய் வ்யாபித்து நிற்குந்தன்மை யொத்து, ஆதியந்தமற்று எதுவுந்தானாய் விளங்கிவருமீசன் காமக்ரோ தாதி அரிஷட்வர்க்கங்களின் பிறப்பிடமாம் அஹங்கார மமகாரங்கள் முற்றும் நசிக்கப்பெற்றுத் தமக்கென்றியக்க மொன்றிலதெனு நிலையில் ஸஞ்சரித்துவரும் ஸாதுக்களின் மஹாஸ்மசானமாம் நிர்மல ஹ்ருதயத்தே ப்ரஸன்னனாய்ப் பரமகாருண்ய மூர்த்தியாய்த் திருக்கோயில் கொண்டெழுந் தருள்வனாதலின் அத்தகைய ஸாதுக்களே லோகோத்தாரண நிமித்தம் அரூபியாமீசன் உபாஸகரின் பொருட்டு மூர்த்தீ

கரித்து ஸஞ்சரித்து வருவதாமென்பதும், அத்தகையாரை ஆச்ரயிப்பதே ஈசனை யாச்ரயிப்பதாமென்பதும், அன்னாரின் இயக்கம் முற்றும் ஈசனதியக்கமாமென்பதும், அத்தகை யாரே ஆதியில் ஆசானெனு நிலையிலமர்ந்து தம்மை யண்டினார்க்குத் தத்வோபதேசம் செய்து, ப்ராரப்தமாய் அவர்க ளடைந்துள்ள கர்மாவின் பலனைத் தம் ஆத்மசக்தி கொடவர்களை எளிதிலநுபவிக்கச் செய்து 'இறுதியில் "ஆசானே இவன், ஆண்டானு மிவனேயலனோ" என்றைய முறுவண்ணம் அவர்களைத் தயிருடன் கலந்த பால் தயிராகு முறையின் தம் நிலையையடையச் செய்பவராவரென்பதுமாம் அரிய தத்வத்தை யுலகத்தார்க்குப் புகட்டவென்றே

"விசித்ரம் சிவநிர்மாணம் விசித்ரம் சிவசேஷ்டிதம்
விசித்ரம் சிவபக்தானும் சரிதம் பாபநாசனம்"

என்று ஸூதபுராணிகர் சௌனகாதி முனிவர்கட்கிச் சரிதையை யாரம்பித்துக் கூறிவந்ததாகும். அத்தகைய நிலையையடைந்த ஸாதுக்கள் செய்தற்கரிதாம் கருமமொன்றிலதென்பதை

"பிந்தந்தி சைலான் உததீன் பிபந்தி
வ்யத்யாஸயந்தி க்ஷிதிமந்தரிக்ஷம்
த்ருணீக்ருத ப்ரஹ்ம புரந்தராணும்
கிம் ந:க்ருதம் சங்கரகிங்கராணும்"

என்ற மார்க்கண்டேயன் கூற்றினின்றும் கவனிக்கத் தக்கதே.

இந்நாடகத்தின் ஸூத்ரதாரரேயன்றி நாடகபாத்ரருட் சிரேஷ்டராக விளங்குபவரும் ரிஷபயோகியரே யாதலின் இதற்கு "ரிஷபவிஜயம்" என்றே பெயரளித்ததாகும்.

இந்நாடகபாத்ரர்களின் மனோநிலையுமவர்களின் குணாதிசயங்களும் ஆங்காங்கு இந்நாடகத்தின் கண்ணேவிவரிக்கப்பட்டு விளங்குவனவால், அவற்றைப்பற்றி யானிங்கு கூறலவச்யமன்று. ஆயினும், நம் ரிஷபயோகியர் அதுவரையுந் தேவாஹஸ்யமாயிருந்த சிவகவசமந்த்ரத்தை இப்புவியின்கணூன்றுவிக்கு நிமித்தம் தமக்கோ ருத்தமசிடனை மந்தரனிடத்திலேன் காணல்வேண்டுமென்பது மூலக்ரந்தத்தில் ஸூதபுராணிகர்விளக்கிக்கூறுவிடினும்,

"குஸ்த்ரீஸக்த: குமார்க்கஸ்தோ யதா பூர்வமஜாமிள:"

எனஸூசிப் பித்ததினின்று பூர்வ ஜன்மாக்களிலும் அந்த ஜன்மாவினுதி பாகத்திலும் அம்மந்தானியற்றி வந்த புண்ய கர்மாக்களின் பலம் அப்பதித நிலையிலுமவன் முகத்தே ஜ்வலித்து நிற்கக்கண்டாராதலின், அவனைப் புனிதனுக்கிச் சிடனாய்க்கொள முயன்றனரென்றே நாம் கொள்ளல்வேண்டும். அவ்வாறு புனிதனுக்கப்பட்ட மந்தரனே பிற்பிறப்பின்கண் சிவகவசத்துக்கிவ்வுலகில் பிரதமசிடனாய்த் தோன்றிய பத்ராயுவாவன். அவனுக்குரிய மனையாளாயும் ஸுமதி தேவிக்கேற்ற மருகளாயும், உத்தமி ஸீமந்தினிக்கேற்ற புதல்வியாயுந் தோன்றிய கீர்த்திமாலினி, தன் முற்பிறப்பில், மந்தானின் அபிமான களத்ரமாம் பிங்களையாயிருந்த நிலையில், எத்தகைய சிறப்புவாய்ந்தவளா யிருந்திருத்தல்வேண்டுமென்பதை நன்கறிவிக்கவென்று அவளது சரிதையுமிந்நாடகத்தின்கண் விளக்கிக்காட்டப்பட்டுளது.

மற்று இந்நாடகத்தில் ஸம்பந்தப்பட்ட ஏனையோர்களும் மேற்கூறப்பட்ட விருமுக்ய பாத்ரர்களின் கர்மாநுபவத்தை யநுஸரித்தும், தங்களுடைய கர்மாநுபவத்தை யநுஸரித்தும் அவர்களின் பந்துக்களாகவோ மித்ர-சத்ருக்களாகவோ தோன்றியவர்களாவர்.

இச்சரிதையுட்டோன்றும் ஸ்த்ரீ ரத்னங்கள் தங்கள் கற்பின் கைப்பிடிப்பாலும் உன்னத மனோபாவத்தாலும் ஐஹிக ஸுகத்தைத் த்ருணமென மதித்துவந்த தன்மையாலும் தாங்கள் சிறப்படைந்தது மட்டுமேயன்றித் தங்கள் கணவன்மார்கள் நிவ்ருத்தி நெறி செல்வானவர்கட் கெவ்வாறு அநுகூலரா யிருந்தனரென்பதை யூன்றிப் பார்க்கின், அது நம்பாரத பெரும்பூமியின் முற்காலத்திய இல்வாழ்க்கையின் சிறப்பு எத்தகையதா யிருந்ததென்றும், அவ்வாழ்க்கையுட்டம்பதிகள் தர்ம சாஸ்த்ராதிகளிற்றோன்றும் நல்லொழுக்க முறைகளை எவ்வாறு கைப்பற்றி யொழுகி வந்தனரென்றும் நன்கு விளக்கிக் காட்டுவதேயாகும்.

இந்நாடகத்தினின்றும் யாமறியக் கூடிய அரியபெரிய விஷயங்கள் யாவும் பற்பலவிடங்களிற் பல்லோர் கூற்றாலும் விளக்கிக் காட்டப்பட்டுளவாதலின் அவற்றைப்பற்றிச் சிறிதேனும் யானிங்கு கூற வேண்டுவதில்லை.

இந்நாடகத்தின் பாஷாநடை சிறிது கடினமாக வமைக்கப்பட்டுளதெனத் தோன்றுமாயினும், தமிழ்ப்பாஷையின் நடை நாளுக்குநாள் சிறிதுசிறிதாய் மலினமடைந்துவரக் காண்கின்றோமாதலாலும், கடின பாஷாநடையை நாடகத்தின் கண்ணே நடிப்பவர்கள் தமது பாவனைகளால் ஏனையோர்க்கு நன்கறிவிக்க வியலுமெனுங் கொள்கையாலுமே அதை யானவ்வாறமைக்கத் துணிந்ததாகும். வசன நடையை யநுஸரித்தே பாடல்களின் நடையும் பொருந்தியிருத்த லவச்யமாதலின், அவையு மாங்காங்கு அவ்வாறே இயற்றப்பட்டுளவென்பது மறியலாகும். தமிழ்ப்பாஷாபிமான மேலீட்டால் யான் மேற்கொண்ட விச்சிறு குற்றத்தை என்னிடம் நண்பர்கள் மன்னிப்பார்களென நம்புகின்றேன்.

தைப்போன் தைத்துணி தரிப்போன் சரீரவளவு கருதியும், அத்துணியின் தன்மை கருதியும், பார்ப்போர்க்குச் சிறப்புடைத்தாக் காணப்படவேண்டுவது கருதியும் சிற்சில விடங்களில் வெட்டப்பட்டும் ஒட்டப்பட்டும் சேர்க்கைத் துணியினுதவிகொண்டும் அங்கி யென்றாக்கப் படுவதுலகம் வெறுக்காதாதலின், மூலக்ரந்தத்திற் கூறப்பட்ட விச்சரிதையுடன் யானியற்றிய நாடகம் சிற்சில விடங்களில் பேதப் படக்காண்பது நடிப்பவர்களை யுத்தேசித்தும், நாடகவியலை யுத்தேசித்தும், இச்சரிதை யுட்டோன்றும் ரஸபாவங்களை யுத்தேசித்தும், நடிக்கக்காண்போர் மனம் அவற்றுள் முற்று மீடுமெட்டு நன்னெறியிற் செலுத்தப்படவேண்டுவதை யுத்தேசித்தும், அவ்வா றமைக்கப்பட்டுளதென நண்பர்கள் கருத வென்றே.

நாடககால முறையை யநுஸரித்து இந்நாடகம் சிரம மின்றி ஓரிரவில் நடிக்கப்பட வியலுமாயினும், சிற்சில ஸமயங்களில் ஒருவாறு சுருக்கிய நிலையில், சரித்திரம் சிறிதும் பின்னப்படாத தன்மையில், நாடகங்கள் நடிக்கப்படப் பலரும் கோருவதை யுத்தேசித்தும் இந்நாடக மமைக்கப் பட்டுளது. இந்நாடகத்தின் முதலாம் அங்க சரித்திரம் கதாநாயகர்களாம் பத்ராயு, கீர்த்திமாலினி இவ்விருவரின் முற்பிறப்பின் இல்வாழ்க்கையைப்பற்றியதே. அச்சரிதை முற்றும் சுருக்கமாக மூன்றும் அங்கம் முதலாம் களத்தில் பிங்களையால் ஸுமதிதேவிக்குக் கூறப்படுகிறது. இந்நாடக நான்காம் அங்கத்தின் இறுதியில் கதாநாயர்கள் ரிஷபயோகிய ரருள்கொடு க்ஷேமலாபங்கள் முற்றுமடைந்தவர்களாகின்றனர். மற்று, இந்நாடகத்தின் ஐந்தாம் அங்கம் முற்றும் பரமசிவன் பார்வதிதேவியாருடன் மாறுவேடம் பூண்டு கதாநாயகர்களைப் பரீக்ஷித்து ஆட்கொள்வதைப் பற்றியதே.

மேற்கூறிய வற்றினிற்று இந்நாடகம், குறைவு சிறிதேனும் கருதப்படாதவாறு, முதலாம் அங்கம் ஐந்தாம் அங்கம் இவ் விரண்டு நீத்த நிலையிலும் நடிக்கப்படலாகும்.

இச்சரிதையுட் காணும் அறநெறிகள் யாவர் மனத்தே யும் ஊன்றி நின்பான் இதை நாடகரூபமாய் இயற்றிடல் வேண்டுமென எனைத் தூண்டியதன்றி, இடையிடையே எனக் கூக்கமூட்டித் தமது கொள்கையையுமாங்காங்கெடுத்துக் காட்டி, இந்நாடகம் குறைவு சிறிதுமின்றி எழுத்துப் பிரதி யின் இறுதி காணுமட்டும் பேருதவிபுரிந்து வந்த ஸ்ரீமான் பீ. கே. ஜானகிராமையர், பீ. ஏ., பீ. எல்., அவர்கட்கென் மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறேன்.

எழுத்துப் பிரதியில் அநேக நாட்களாய் என்வசமிருந்த இந்நாடகம் செவ்வனே யச்சிடப்பட்டுப் பல்லோரிடத்தும் மெய்ப்பொருளாய் நிரந்தரம் தங்கி நிற்பானுதவிபுரிந்து வரும் மதராஸ் லா ஜர்னல் ப்ரொப்ரைடர் ஸ்ரீமான் ஆர். நாராயணஸாமி ஐயர், பீ. ஏ., பீ. எல்., அவர்கட்கும், அவர் ஸகோதரர் ஸ்ரீமான் ஆர். மஹாலிங்கையர், பீ. ஏ., அவர்கட்கும் யான் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஈசனருள்வாழி! அவனடியார் வாழி!

இங்ஙனம்,

கே. வி. பஞ்சநதன்.

இந்நாடகம் யாவர்க்காக வெழுதியதெனல்.

தனித்திடு நிலைதனிற் சனித்திடு காமம்
தணித்திட தன்முக நோக்கிடு தன்பதி
நோக்கமதறிந்து நுதிமதி ஸதிதன்
ஆக்கை யுடன்மனமாவியவன்வசம்
அளித்திடவாண்டவன் ஆண்டு ஸுகித்திட
களிப்பெனு மாழ்கடற் கடைந்ததோ ரமிர்தத்
தொருதுளி பனியினும் சிறுதுளி கருவினுள்
ஒளித்தவ ளுளம்களித்திருந்திட
களவாடிய ஓர் கனபெரு குற்றம்
இவளிடமுளதென வேணையோர் கூறிப்
பரிஹஸித்திடப் பலபல சின்னம்
தோன்றிடவவள் கருவூன்றிய ஒள் பொருள்
எந்தையினம்சம்யான் என் தந்தைக்
குவந்தளித்ததாமென் தாயுடலமு
மெனதேயாதலிலெனக் கோருடலை யிவ்
யாக்கையினின்றே இனி தியற்றிடுவன்
என்றுரைப்பது போலிளங் குழவியதும்
தாயவளுடல்கொடுதன்னுடலடைந்து
வளர்பிறைமதியம் வளர்ந்திடுவதுபோல்
ஐயிரு திங்கள் வளர்ந்திடவப்பால்
ஐயன்றிருவருள் சுரப்பவாங்கே
தாய்வேருகத்தான் வேருகித்

தாய்தருவமுதம் தன்பசியுணவாய்த்
தாய்முகமொன்றே தானறி முகமாய்த்
தாயடித்திடத்தடுத் தணைப்பான்
தாயைக் கோரும் தன்மைப் பருவம்
கடந்த பின்னர்க் காரிகை தன்சிறு
குழவியதற்கே குறித்துப் பலகால்
தன்பதி தன்னையன் பின் காட்டிட
அச்சிறுமகவும் அக்கால் தொட்டுத்
தாயுந்தந்தையுந் தன்னவரெனவே
கருதியிருந்திடு காலத்தாங்கே
தாய் கடுத்திடத் தந்தைபாற்சென்றும்
தந்தை கடுக்கத்தாய்பாற் சென்றுபின்
தாய் தந்தையரொடு தமரும் பிறரும்
அறிந்து அவரிடையிருந்து அவருடன்
கலந்து அவர்மனம் களிப்பிலாழ்ந்திட
மழலையு நீங்கியே மதியாங்கோங்கிடு
பருவத்ததனைப் பள்ளி விடுத்திட
அறிந்து அறிந்து அறிவனவறிந்து
சிறந்து சிறந்து ஆண்மையிற் சிறந்து
வளர்ந்து வளர்ந்து வனப்பினில் வளர்ந்து
இடையிடையியற்றிடு சடங்குகள் யாவும்
குறைவற விருமுதுகுரவரியற்றிட
அதுவும் அவனுய் அவனும் அவராய்
மாறிடமாறிய மாண்புடைப்பருவத்து
அவனுள முவப்ப அரிவையை மணக்க
வழிவழி வந்திடு தொழில் கைக்கொண்டே
தன்னுயிரளித்தோன் தந்தையேயாவன்
தன்னுடையுடலும் தாய்க்குரியதுதான்

பிறக்கக்காரணம் பிறந்து அவனிகண்
இருக்கக்காரண முருக்கொடு தோன்றிய
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"
என்றிடு முன்மையை நின்றறிந்தவர்
வலிமை குன்றிய கலிப்பருவத்தே
ஊனுடை கொடுத்து ஒப்பி யுபசரித்
திட்டமுடன் அவர் கட்டமு நீக்கி பின்
இம்மை மறுமைக் கிடைநிலை இம்மைக்
கிறுதி குறித்திடு பிறப்பெனு நிலைகண்
இருவருமிரண்டறப் பொருந்துவரையவர்க்
குற்ற பணிவிடை யியற்றிடு மகனென
கூறிடு வேதத் தூறிடு கொள்கை
பாருளோர் பலரும் பரிவுடன் பற்றிப்
பாமனருட்கே பாத்திரராவான்
தன்னரு குலமே தானே சான்றாய்
நின்றிடு நிறைமகன் ஷண்முகனவன் புகழ்
ஓங்கிடவவன் குல மோங்கிடவவனிகண்
ஓங்கிட குடமுனியொரு தமிழென்றே
நச்சியியற்றின மிச்சிறு நாடகம்.

THIS HUMBLE WORK OF MINE IS DEDICATED

TO

RAO BAHADUR

VENGAIVAYAL THIAGA SUBRAMANIA

SHUNMUGA MUDALIAR,

Dubash, The South Indian Export Company, Limited,

Madras.

கணபதி துதி

இராகம், கல்யாணி: தாளம், ரூபகம்.

பல்லவி

வல்லபா மனோஹரா
வரமருள் க்ருபாகரா (வல்)

அநுபல்லவி

வல்லமை யிலாதார்கட்கும்
வல்லமை யளிக்கவல்ல (வல்)

சரணம்

எல்லையில்லா தருள்புரியும்
இயல்புடையாய் எந்தன்தேவே
இல்லை யில்லை யுன்னில் மிக்கார்
தில்லையில்வாழ் செல்வர்ச் செல்வ (வல்)

நாடக பாத்ரர்கள்

ரிஷபயோகி :—ஒரு சிவயோகியர்

மந்தரன் :—அவந்தியில் ஓர் அந்தணன்

பிங்களை :—அவந்தியில் கணிகையர் மரபிற்றோன்றிய ஓர் வனிதை.

வஜ்ரபாஹு :—தசார்ஹதேயத்து மன்னன்

ஸுமதி :—
சித்ரரேகை :—
ப்ரேமாவதி :—
} வஜ்ரபாஹுவின் மனைவியர்

பத்ராயு :—வஜ்ரபாஹுவின் புதல்வன்—ஸுமதியிடம் தோன்றியவன்

உக்ரஸேனன் :—வஜ்ரபாஹுவின் ஸேனாபதி—ஸுமதியால் வளர்க்கப்பட்டவன்

காலநேமி :—வஜ்ரபாஹுவின் அமைச்சன்

தாத்ரி :—ஸுமதியின் பணிப்பெண்

ஹேமரதன் :—மகத தேயத்தரசன்—ப்ரேமாவதியின் தந்தை

பத்மாகரன் :—ஸ்வர்ணபுரியில் ஓர் வைச்யப்ரபு—தர்மிஷ்டன்

மந்தகாமினி :—பத்மாகரனின் மனைவி

ஸுநயன் :—பத்மாகரன் புதல்வன்—பத்ராயுவின் நண்பன்

சந்த்ராங்கதன் :—நிஷததேசாதிபதி—நளச்சக்கிரவர்த்தியின் பௌத்ரன்

ஸீமந்தினி :—சந்த்ராங்கதனின் மனைவி.

கீர்த்திமாலினி :—சந்த்ராங்கதனின் புதல்வி—பத்ராயுவின் மனைவி.

அங்கம் 1.

களம் 1.

இடம்—அவந்திமாநகரம்—பிங்களையின் இல்லம்.

காலம்—மாலை.

பிங்களை :—(பூஜாக்கிரஹத்தில் தன் னிஷ்டதேவதை யைத் தொழுத வண்ணம்) ஹே ஜகத் ஜனனீ ! திக்கற்றவர் களுக்குத் துணை நீயல்லால் வேறுண்டோ ! மூன்று தலைமுறையாக என் முன்னோர்கள் என்னனுபவத்திற்கென சேமித்து வைத்துள்ள திரண்டதோர் செல்வம் எளிதி லெனக்கோர் அரசையு மளிக்கவல்ல தெனினும், அதைப் பின்பற்றிய வசைச்சொல் என்னை முற்றிலுமதை வெறுக்கச் செய்கின்றதே ! கன்னிப்பருவங் கடந்ததாயுள்ள இந்நிகழ் காலத்தின்கண் என் தற்காப்பின் நிலை என்னை மிகவும் திகிலடையச் செய்கின்றதே ! அந்தோ ! யான் என் கணி கையர் குலத்துதித்தேன்! என் வனப்பில் மயங்கிய கோடிக் கணக்கினரா மாடவர்கள் என் கடாக்ஷத்திற் கிலக்கா தலினிமித்தம் தங்கள் திரவிய முழுவதையுந் தங்களுட னெனக்காட்படுத்துவதாகக் கூறுகின்றனரே! என் செய்வே னென்னுய் ! யானுமென் குலத்தையலார்போல் இன்புறு நிமித்தம் என் பெறல்கோரும் புல்லராம்பல்லோர்க்கு மென் புணர்ச்சியின்பம் பகுந்தீந்து, இம்மையிற் கைவிடு பொரு ளும் கைவிடாப் பழியும் இருமையிலும் பற்றித் தொடரும் பாவமும் பண்டமாற்றுக் கொள்ளவோ ! ஹா ! என்

மனம் எள்ளளவேனு மதற்கிசையவில்லையே! என்செய் வேன்! பேதை யானெங்ஙனம் தற்காத்துக் கொள்ளவல் லேன்! எ தேவி!

இராகம், வஸிந்துபைரவி : தாளம், ஆதி.

பல்லவி.

துணை நீயல்லால் வேறுண்டோ—அம்ப (துணை)

அநுபல்லவி.

(உனக்)கிணையார் புவியதனில்—
மானிடராய்ப் பிறந்தார்க்கம்ப (துணை)

சரணம்.

1. அணைத்திடுந்தாயு நீ—குணிக்கிலாச் செல்வ நீ
பணிப்புனல் மதிப்புனை—சடைச்சிவ காமியே (துணை)

2. சங்கரன் றேவி நீ—ஐங்கரன் ரூயு நீ
பொங்கர வந்தியில்—கங்குல்மா றங்கையே (துணை)

என்ன! யான் ஏன் வருந்தல் வேண்டும்! செல்வத்தைத் திருணமாய் மதிக்கும் என் மனோநிலையை யாவர் கலைக்க வல்லார்! அருட்பெருந்தேவி! உலகம் வெறுக்கு மான் மகனொருவற் கென்னையு மென் பொருளையு மடிமைப் படுத்தி, அச்செல்வத்தைப் பின்பற்றிய பாவமே யுருவெனத் தோன்றியுள்ள என்னை நசிக்கச் செய்வேன்! புல்லியர் குலத்துதித்தும் புல்லா விரதம் பூண்டொழுகுஞ் சிந்தை என் மனத்தேதோன்றச் செய்தது நின்னருளே யாதலின், அத்திருவருளே எனை முற்றிலுங் கைவிடாது காப்பதாக!

சேவகன் :—அம்ம! நம் தெருவாயிலின்கண் ஓர் மனி தன் மூர்ச்சா நிலையில் வீழ்ந்துளன். பசியின் கொடுமை

யோ பிணியின் பீடையோ, அன்றி மதுவின் மயக்கமோ அறியோம்.

பிங்களை :—யாதாயினுமென்? தாமதியாதீர்; அவனை மெல்லெனத் தூக்கி நம்மகத்துட் கொணர்மின். இதோ, யானும் வருகிறேன்.

———

அங்கம் 1.

களம் 2.

இடம்—பிங்களையின் மனை—உட்புறம்.

காலம்—இரவின் முதல் யாமம்.

பிங்களை :—(மந்தரனுக்குச் சிகிச்சை செய்த வண்ணம் அவனை யுற்றுநோக்கி) கற்றரையே பஞ்சணையாய்க் கைப் புறமே தலையணையாய் உற்றதோரம்பரமே போர்வையாய்ப் பொருந்த வீழ்ந்துகிடந்த இவர் நிலையை என்னெனக் கூறுவது! ஆ! என்ன பரிதாபம்! ஸுஷுப்தியிலும் விசனக்குறி இவர் முகத்தே தோன்றுவதாயின், இம்மண்ணுலகி லிவர் எத்துணை கஷ்டப்படுபவரா யிருத்தல் வேண்டும்!

மந்தரன் :—(மூர்ச்சா நிலையினின்றும் தெளிந்து நாற் புறமும் சுற்று நோக்கி) என்ன வாச்சரியம்! இது மர்த்திய லோகந்தானு! என் முன் நிற்கும் மெல்லியல் யாவள்! யான் காண்பது கனவா! ஏ ஸ்திரீ ரத்தினமே! யான் எவ் வாறு ஈங்கு வந்துளேன்? யாவர்மாட்டு இத்தெளிவடைந்த நிலைமைக்குக் கடமைப்பட்டுளேன்? கூறுவையோ?

பிங்களை :—ஐய! முற்றுந் துறந்த முனிவர் போன்று என் தெருவாயிலின் சார்பு கிடக்கக் கண்ட உம்மைப் பணியாளர்களை விடுத்து யானிங்கு கொணர்வித்தேன். இதோ, சிறிது நேரத்தில், நீரும் மூர்ச்சையிற் றெளிந்தீர். உமது முகப் பொலிவினுலும் முப்புரி நாலானும் மதுரச் சொற்களாலும் நீவிர் அந்தணர் குலத் துதித்தவரென நன்கு

மதிப்பேனுயினும், எச்சந்ததியாரைப் பெருமைப்படுத்த வந்துளீரென்பதும், எத்திருநாம முமைப் பிறர்க்கு ஞாபக மூட்டுமென்பதும், தற்காலம் உம் நிலை எவ்வாறுள தென் பதும் யானறிய விரும்புகிறேன்.

மங்தரன் :—நேரிழாய்! உன்மதிக்கு மிகவும் மெச்சினேன். நீ கூறியவாறு யான் அந்தணனே. என்னை மந்தர னெனக் கூறுவர். தங்க பருவத்தில் கற்பனயாவும் கசடறக் கற்று, பலரும் கல்வியின் கரைகடந்தோ னிவனெனப் புகழு மாறும், நல்லொழுக்கத்திற்கோர் சுட்டுப் பொருளாய்க் கூறு மாறும் சிறிது காலம் வாழ்ந்து, என் பந்து மித்திரர்களை மகிழ்வித்தும் பெருமைப்படுத்தியும் வந்தேன். பிறகு, என் துர்ப்பாக்கிய மென்னைப் புன்வழிப்படுத்த, சில வாத்மத் துரோகிகளையும் பாத்துரோகிகளையும் மித்திரர்களாகக் கொண்டேன். அதன்பலனுக என் நன்னடக்கை நாளடை வில் குறைவுபட்டு வந்ததன்றி, துர்நடத்தைகளென்னை முற்றி லுமடிமைப்படுத்தின. (கழிவிரக்கமும் லஜ்ஜையும் மனத்தை வாட்ட துன்புறல்.) அகத்தில் விளங்கும் கருணையே புறத் திலுருவாயொளிரு முன் முன்னிலையில் என் துர்க்குணங்கள் யாவையும் புகல்வது என்னை லஜ்ஜைக்குட்படுத்துமாயினும், நீ விரும்பிக் கேட்டமையின் யான் விளம்பக் கடமைப்பட் டுளேன். மதுபானத்திற் றேர்ந்தேன்; புலாலுண்பதில் மிகுந்தேன்; வேசையர் மாட்டடிமைப்பட்டேன்; இவை களுக்கென பொருளீட்டு நிமித்தம் களவும் கவருடலுங் கைக்கொண்டேன். கொலையொன்றே யான் இதுகாறுங் கைப்பற்றுதது!

பிங்களை :—அந்தோ! என்ன கொடிய ஸம்பவம்! அந்தணேத்தம! இவைகளை யும்முறவினரறியார் போலும். அறிந்தனராயி னெங்ஙனம் வருந்துவரோ!

மந்தரன் :—மின்னனையாய்! யானிவ்வாறிருக்கு நிலையறிந்து, என் இருமுதுகுரவரும் எனை நஞ்செனமதித்து முற்றிலும் விலக்கித் தீர்த்தயாத்திரை சென்றனர். அழலின் முன்னிலையி லெனைக் கணவனுய்க் கைப்பிடித்த உத்தமியாம் பத்மினி யொருத்தியே எனை வெறுக்காதவள். ஆயினுமென்! பாவியேனியற்றிய கொடுவினை பிணியாய்ப் பற்றச் சின்னுட்கழிந் தவளும் பிரியா விடைபெற்றுப் பொன்னுலகேகினள்! அக்காலமாதியாக இப்பதினறு வருடங்களாய் யான் விதிவழியே சென்றுகொண் டிருக்கின்றேன். ஏ புண்யவதி! யானேர் பெரும்பாவி. பாம்பிற்குப் பால்வார்த்ததுபோன்று எனக்கு நீயுபகாரஞ் செய்தனையேயன்றி யாவர் கருணைக்கும் யான் சற்றும் அர்ஹனல்லேன்.

பிங்களை :—(தனக்குள்) என்மனம் என் இவரைப் பற்றி மிகவும் வருந்துகிறது! இவர் படுந்துயரம் என் என்றல் ஸஹிக்கக் கூடவில்லை! இவரிடம் யான் பற்றுதலடையக் காரணமென்ன! இவரை யான் காதலிக்கின்றேனு! (மந்தரன் பெருமூச்செறிந்து கண்ணீர்ப் பெருக்க) ஹா! ஆர்யபுத்ர! கண்ணீர்ப்பெருக்காதீர். ஜகதீசன் திருவுளத்தை யாரே யறியவல்லார்! அகதிக்குத் தெய்வமே துணையன்ருே! நாம் யாவருமவர்தம் விளையாட்டுப் பதுமைகளேயாவோம். உமது தற்கால நிலை......என்றல் பொறுக்க முடியவில்லை. (கண்ணீர் விடுகிருள்.)

மந்தரன் :—குயிலனையாய்! உன் கருணையே யுன்வனப்பினைப் பன்முறையு மதிகரிக்கச் செய்வது. அறிவிலியான் என் துச்சரிதையை யுனக்கு முற்றிலு மியம்பியதாலன்ருே கொழுந்தனைய உந்தனுளம், கனிந்துருகிக் கருணையாறுய்க் கண்களினின்று பெருகியுன் முகவிலாஸத்தை வாட்டமடைய்ச்செய்தது! இனி, யான் சற்றேனு மிங்கு தாமதி

யேன். என்னை மன்னிப்பாய். ஈசனர் உன்னை மாயையினின் றும் விலக்கியருள்வாராக! (எழுந்து செல்ல முயலுகிறான்)

பிங்களை :—ஹா! தேவீ! செல்கின்றனரே! அந்தண சிரேஷ்ட! என்னைத் தனியளாக்காதீர்.

மந்தரன் :—அந்தண சிரேஷ்டனு! அந்தணருள தமாதமன் யான். என் விருத்தாந்த முற்றினு மென் வாய்வழி கேட்டும், யாதுகாரணம்பற்றி என்னை யுன்னிடமிருக்கக் கோருகிறாய்? என்னீன்ற தாயு மெனை வெறுத்திட்டாள்; தாயர்களனைவோர்க்குந் தாயாம் இப்புவியு மெனை வெறுக்கிறது. (செல்கிறான்)

பிங்களை :—ஹா! என் செய்வேன்! கருணமயீ! (வாசற்படி தடுக்க, மந்தரன் வீழ்கிறான். பிங்களை யவனை வாரியெடுத்து) ஹா! பிராணபதீ! இனியேனுந் தாங்களென் மனோநிலையை யறியீரோ? என்னைத் தனிவிடுத்துச் செல்லாதீர். உலகம் முற்றினுந் தங்களை வெறுப்பதன்று. நீரே யுலகத்தை வெறுக்கிறீர்.

இராகம், ஹரிகாம்போதி : தாளம், சாபு.

பல்லவி.

அவனி வெறுத்ததோ உமை யந்தணோத்தம (அ)

அநுபல்லவி.

அவனி வெறுத்ததும்மை—இவண் நீரடைய வென்றே (அ)

சரணம்.

1. அவனி வெறுத்திட்டேன்யா னவனி வெறுத்திட்டீர் நீர்.
இவணீ ரிருப்பீராயி னவனி வெறுப்போ மொன்றாய் (அ)
2. தீண்டாத யாக்கையும் தீண்டாதார் செல்வமும்
ஆண் டனுபவித்தும்மால் மாண்டிடல் வேண்டியே (அ)

பிராணகாந்தா! நீர் இவ்விடமடைதலின் பொருட்டே உலகுமும்மை வெறுத்தது.

மந்தரன் :—மாயையே! நீ வேண்டுவது யாது?

பிங்களை :—யான் வேண்டுவது என்னுருயிர்த் தலைவராம் உங்களையே.

மந்தரன் :—ஆச்சரியமே! நீ யாது காரணம் பற்றியோ என்னை வேண்டுவது?

பிங்களை :—தங்களை யாவரும் வேண்டாமை பற்றியே.

மந்தரன்:—(தனக்குள்) இவள் மனோநிலையை யாதெனக் கூறுவது! மனித வர்க்கமாதியாம் பற்பல ஜீவராசிகளுள் விரும்புவனவும் வெறுப்பனவும் வேறுபடக் காண்பது அவைகளின் படைப்பு வித்தியாஸத்தாலெனக் கொள்ளலாகும். மற்று, படைப் பொருமைப்பட்டுப் பகுத்தறி, சக்தியைப் பிரதானமாயுடைய மனிதவர்க்க மொன்றினுள் அவ் விபரீதங் காண்பது அதிசயிக்கத் தக்கதே; அங்ஙனம் மடவார்களுட் காண்பதெனின், அது வியப்பினும் வியப்பேயாகும். (விளித்து) நங்காய்! அரிவையர் வெறுப்பனவற்றை விரும்புகின்ற நீ மாயையின் சிருஷ்டியோ?

பிங்களை:—தலைவ! யானும் மலரவன் சிருஷ்டியே. கணிகையர் குலத்துதித்தவள். என்னைப் பிங்களை யென்பர். மான மழிதலின் உயிர் விடுதலை மேலதாய்க் கொள்ளும் இந்நிலவுலகில் உயிர் வாழ்க்கையின் பொருட்டு மானத்தை விற்றுண்ணும் போக்கினராம் என்குலத் தையலார் நடத்தைகளை முற்றிலும் வெறுத்து, உலகம் உண்டுமிழ்ந்த ஓராண்மகனைத் துணைவனாகக் கொண்டு, இல்லறமவனுடன் நடாத்தி, இப் புன்புலால் யாக்கையை மேன்மைப்படுத்தும் பேரவாவுடை

யேன். தங்களைக் கணவனுய் வரித்தேன். இதுகாறு மான் மகற்றீண்டாத எந்தனுடல் பொருளாவி யனைத்தையுந் தங்கள் திருவடித் தாமரையின்கண் மனமுவந்து ஸமர்ப்பிக்கின்றேன். தயைகூர்ந் தங்கீகரித்தருளல் வேண்டும்.

மந்தரன் :—மாண்புடையாய்! அந்தணர் குலத்துதித்தேனேனும், கூடுெறுணுக் கொடு நடத்தைகளைக் கைக்கொண்டமைபற்றி யான் இழிகுலத்தாரினு மிழிந்தவனுவேன். கணிகையர் மரபிற் றோன்றினுயேனும், கற்பைக் கைப்பற்ற வுன்னும் நீ யந்தணரினு மேம்படுவாய். ஆதலின், நாமிருவரு மொருங்கே யில்லற நடாத்துத லீசன்றிருவுளச் சம்மதமாமோ?

பிங்களை:—இறைவ! மாயையெனுங் கான்யாற் றோடையிடைப்பட்டார் யாரே எதிர் நீந்திக் கரை சேரவல்லார்? நீவிர் மாயையின் வசந்தராயது ஆண்மகன் றுணிபாலன்றி வேறன்று. தற்காலம் தாங்கள் கழிவிரக்கம் பெற்றது அவ்வோடையி னிடைப்பட்டுப் பற்பல கற்பாறைகளில் மொற்றுண்டு பின்னர்க் கைவலிவால் நீந்திக் கரைசேர்ந்த தொக்கும். ஆதலின் தாங்கள் காதலிக்கத் தகுந்தவரே யாவீர்.

மந்தரன் :—பொற்பாவாய்! கவண் விடுபட்ட கல் சிறிது நேரம் மேனோக்கிச் சென்று, மீண்டு கீழிறங்கி புவியடைதற் போன்று, மாயை விட்டெறியும் பாஞ்ச பௌதிகமாம் இச்சேக்கை சிறிது சிறிதாய் வலிவடைந்து, பின்னர் சிறிது சிறிதாய் வலிவிழந் திறுதியில் பஞ்சீகரிக்கப் படுகிறது. யான் தற்காலம் கௌமாரத்தின் பிற்பகுதியிலுள்ளேன். இறப்பின் வாய்ப்பட கீழ்நோக்கி வருகிறேன். ஆதலின், யௌவனத்தின் முற்பகுதியில் மேனோக்கிச் செல்லும் உன்னுட னில்வாழ்க்கையிற் பொருந்துத லெவ்விதமெனக்கியலும்?

பிங்களை :—நாத! தாங்களியம்புமாறு கவண்டெறி கற்களுள் மேனோக்கிச் செல்வவுங் கீழ்நோக்கி வருவவு மிடையே தாக்கிப் பொருந்துழி, மேனோக்கிச் செல்வன தம் சக்தியை மற்றவைகளுக்கும் பகுந்தளித்து, அவைகளையுந் தம் முடன் சிறிது தூரம் சேர்த்துச் சென்று, பின்ன ரவை களுடன் றாமும் கீழிறங்கு மன்றோ? நாமிருவரு மவ்வாறே யொன்று சேர்ந்தோமாதலின், என்னாற் றாமுமிளமை மீண் டும் வாய்ப்பெற்று வாழ்வீர். இன்புற சிறிது காலம் நாமில் வாழ்க்கையிற் பொருந்தி, பிறகிருவரு மொருங்கே இறப் பினிற்றுயில்வம்.

மங்கரன் :—(தனக்குள்) யோகியரின் சித்தத்தையும் எளிதிலபகரிக்கக் கூடிய இப்பிழம்பனையாள் என்னிட முண்மைக் காதல் கொண்டுள்ளாதலின், யான் எனிவளை மனையாளாயடைதலிற் றயங்கிடல் வேண்டும்! இவள் உண்ணிர்மை என் மனத்தையுந் தூய்மைப்படுத்து மென்ப தில் சற்று மையமில்லை. (விளித்து) பொற்பாவாய்! உனக்கு மணாளனாயிருக்கு நிலை சற்றேனு மெனக்குப் பொருந்தா தெனினும், உன் விருப்ப மவ்விதமிருத்தலி னதற்கிசைவேன். (பிங்களையை மார்புற வணைத்தல்) இவ்விபரீத நிலையில் நம் மிருவரையு மில்லறத்திற் பொருந்தவைக்கு மீசன் திருவுளம் யாதோ; அறியேன்.

அங்கம் 1.

களம் 3.

இடம்—அவந்திமாநகர்—ஓர் வீதி.

காலம்—பிற்பகல்.

(ரிஷபரின் பிரவேசம்).

இராகம், யதுகுல காம்போதி : தாளம், சாபு.

பல்லவி.

பிறவா திருக்க பிறந் திறவா திருக்க வேண்டின்
மறவா திருப்பாய் மனமே அராவா பரணன் தாள்.

அநுபல்லவி.

மருவார் குழலாட் பங்கன் காவா தருளுங் கங்கன்
திறவோர் போற்றிடு மங்கன் திருவே றேறிடுந் துகங்ன்.

சரணங்கள்.

1. மருவே செறித்த குழல் மடவார் கண் கணைப்பட்டு
உருவே குலைந்து உள்ளம் உருகிக் கரைந்தி டாதே
திருவே யென் செல்வமே தேனே எனப் பாடுவார்
கருவே யுதிக்க வாரார் வெருவாங் கூற்றுக்கா ளாகார்.

2. மன்றலங் கோதையர் மாய வலைக்குட் சிக்கி
நின்றல மென்கோயில் என்றே புகன்றிடாதே
நின்றே மறைமுதல்வா நீயே புரத்தி யென்று
கன்று மனத்தா ரெல்லாம் கருவே யுதிக்க வாரார்.

3. வண்டார் மலர்க் குழலார் திண்டோள் வலித் தணைந்து
கண்டோ வுந்தன் மழலை கரும்போ வெனக் கூறுதே
தண்டார்க் கொன்றை யணிவேள் தாளை நினைந்து ளாரை
அண்டார் யமனுதவர் விண்டார் விண்டா ரவரே.

4. காய்ந்து நமன்று தவர் கனன் றுறுத்துத் தண்டிக்கில்
ஆய்ந்த தவமில் லோரே யஞ்சன் மின்றீ ரொன்றே
வாய்ந்த நிரயத் தழல் வாடி வருத்திட நீர்
ஓய்ந்தழுது மாழ்கையி லார்வந்தே யுமைக்காப்பார்.

ஈசனருள் வாழி! யவனடியார் வாழி!

நகரவாஸி :—முதியோய் வருக! உம் வரவு இந்நகர்க்கு நல்வரவேயாகுக!

ரிஷபர் :—ஆயுளு மின்பமும் பெருகுக வுனக்கு! அன்ப! இந்நகரில் யாதேனும் புதுமையுண்டோ?

நகரவாஸி :—புதுமையுண்டே. பெரியோய்! இவ்வீதியின்கண் விலைமாதர் குலத்துதித்த பிங்களை என்பாள், கற்பு கைப்பற்றி, மந்தரனெனு மந்தனன் ஒருவனை மணாளனுக் கொண்டு, அவனுடன் செவ்வனே இல்லறம் நடாத்தி வருகிறுள். அம்மந்தான் தற்காலம் கொடு நோய் பற்றி எழவும் சக்தியற்றுப் படுக்கையே பிரபஞ்சமாய்க் கிடக்கின்றமையின், தன் திரண்ட செல்வத்தின் பெரும் பாகத்தையும் அறத்திற் செலவிடுத்து, அவனுடனிறக்குந் தீர்மானத்துடன் ஊனுறக்கமுந் துறந்திருக்கின்றனள். நடைப்பிணமாகவே காணப்படுமவ் வுத்தமியின் பொருட்டழுங்கா நெஞ்சமிவ் வவந்தியிலிருப்பதரிது. இப்பிராயோபவேச நிலையில், புண்ய மூர்த்தியாம் தங்கள் தரிசனத்தை யவள் தன் நல்வினைப் பயனெனவே கருதுவள்.

ரிஷபர் :—ஈததிசயமே! நண்ப! அவ்வரிவையை யான் நேரிற் சென்று காண்பேன். ஈசனருள் வாழி! யவனடியார் வாழி!

அங்கம் 1.

களம் 4.

இடம்—பிங்கிளயின் வீடு. காலம்—நள்ளிருள்.

(ரிஷபரைப் பஞ்சணையிட்டுப் பிங்களையும் மந்தரனு மவர்க்கிருபுறமு முட்கார்ந்து கால் வருடிக்கொண்டிருத்தல்)

மந்தரன் :—பிங்களே! இதுகாறும் நமக்கு அரனின் திருவருட்டன்மையை விளக்கிவந்த நம் சிவயோகியர் இப்பொழுதுதான் துயில் கொண்டார். என்னே அவர் மஹிமை! அவர் சக்தியை நாம் என்னெனக் கூற வியலும்! பரமசிவமே இத்திருவுரு வெடுத்து நம் கலி நீக்க இவ்விடத் துதித்தாரென யான் திண்மையாய்க் கூறு வன். அன்றேல், எழுவதற்கும் சக்தி யற்றிருந்த என்னை நீங்கா நோயினின்றும் ஒரு நொடிப் போழ்தில் எம்மா னிடன் விலக்கவல்லான்! இனி யவர் நம்மில்லமே தம் திருக்கோயிலாக் கொண்டு வஸித்துவர நாம் அவர்க்குரிய பணிகளைச் செவ்வனே புரிந்துகொண்டு நம் வாணாளைக் கழித்தலே நலமாமென நினைக்கின்றேன். உன்னுள்ளத்தை யானறியற் பாலனோ?

பிங்களை :—காதல! என் மனத்திலுதித்ததே தங்கள் சித்தத்திலுந் தோன்றவைத்த ஈசனுர்க்கு யான் வந்தனம் புரிகின்றேன்.

(இருவரும் கால் வருடிக்கொண்டிருந்த நிலையில் கண் வளரல்).

ரிஷபர் :—(தம்மிருக்கையினின்றிழிந்து உட்கண்ணுற நோக்கி) அந்தணர் குலத்துதித்துக் கற்பனயாவுங் குறைவறக் கற்று நல்லொழுக்கம் முற்றிலும் பொருந்தி ஈசனருளுக்குப் பாத்திரனாயிருந்த இம் மந்தரன் சேர்க்கை தோஷத்தால் குடி, புலாலுண்கை, களவு, கவருடல் முதலியன கைக்கொண்டு, வேசையரிடத் துறவுபூண்டு தன் வாணாளையவமே கழித்தனன். ஆயினும், தான் முன் கைப்பற்றிய நல்வினையின் பயனாக, முற்பிறப்பிற் பத்மினி யெனு நாமதேயத்துடன் தன் இல்வாழ்க்கைத் துணைவியாயிருந்து இறந்த கற்பரசி இப்பிறப்பிற் பிங்கலையாய்த் தோன்றி வசிகரித்திட அவள் வசத்தனாய்த் தற்கால மவளுடன் செவ்வனே இல்லற நடாத்தி வருகின்றான். ஏ உத்தமி! பத்மினீ! கனப்பொழுதேனுங் கணவனை மறந்திடாத் தன்மையன்றோ இறந்த கொடிப்போழ்தி னுனக் கிப்பிறப்பளித்தது! உன் ஆருத்துயரை நீக்கவன்றோ யானிம்மந்தரன் கொடுநோயைத் தற்கால மென்னாத்ம சக்தியாற் கிரஹித்துள்ளேன்! (மீட்டும் உட்கண்ணுற நோக்கி) ஆ! என்ன பரிதாபம்! இனி எழு நாட்களில் இம்மந்தரன் தன் பிராரப்தம் முற்றப் பெற்றிட இறத்தல் வேண்டுமே! அவனிவ்விடமிருந்திறப்பி னிப்பொற்கொடியாளு மவனுடனிறப்பள். ஈதுண்மை. இருக்கப் பிறந்தனை அந்தோ! இளங்குயிலே! இறக்கப் பிறந்தனை யென்றறிந்திலை நீ! என் செய்வல்! (மௌனம்) இம்மந்தரன் மனத்தின்கண் கழிவிராக்கக்கிளர்ச்சியை மிகவே யுண்டாக்கி இவளிடமிருந்து பிரிந்து செல்லச் செய்வேன். (பிங்கலையை நோக்கி) கற்பினுருவே! பொறையைக் கைக்கொள். (மந்தரனை நோக்கி) கற்பின் காப்படைந்தோய்! கடிதினிற் றொடர்ந்துவா. (இருவர்மீதும் விபூதியைத் தூவி மறைதல்).

(பொழுது புலர பிங்கலையும் மந்தரனும் துயிலெழல்).

மந்தரன் :—காந்தே! நம் யோகிச்வரர் எங்கே?

பிங்களை :—யானறியேனே !

மந்தரன் :—ஆ ! எங்கு சென்றாவர் ?

(இருவரும் சுற்றுப்புறங்களிற் றேடி காணாது மீளல்).

ஹா ! எங்கோ மறைந்தனரே ! நம்மை ஏனோ அவர் நீத்துச் சென்றது ? ஆ! யான் ஏன் கண்ணுறக்கங் கொண்டேன் ! ஹா ! (மௌனம்) பிங்களே ! என்மனம் யாது காரணம் பற்றியோ அதிக சஞ்சலத்தை யடைகின்றது. வயிற்றில் ஏதோ எரிச்சல் காண்கின்றது. யான் பிறந்த காலந் தொட்டு இதுகாறும் நடந்துள்ளன யாவும் ஒவ்வொன்றாய்த் தாமே என்னுளத்திலுதித்துக்கொண்டு வருகின்றன. கெடுமதியே னந்தோ ! முன் எந்நிலையிலிருந்தேன் ! தற்கால மெந்நிலையிலுளேன் ! தர்மமார்க்கத்தினின்று முற்றிலுமிழிந்து புன்னடத்தைகளைக் கைக்கொண்டு என் வாணாளை வீணாளாக்கி வந்தேனே ! ஹா ! தெய்வமே! எத்தகைய கொடிய பாப கருமங்களைப் புரிந்துளேன் ! எனக்கும் உய்யும்வகை யினி யுளதோ ! (பாடுதல்)

இராகம், யதுகுல காம்போதி : தாளம், ரூபகம்.

1. மாதவமே என்னைவிட்டு மறைந்தனையே என்செய்வேன்
ஏதலனுயிவ் வுலகில் (யான்) என்பிறந்தேன் எங்கிடவே

2. அன்னைவிட்டேன் தந்தைவிட்டே னன்புடையா டன்னை
[விட்டேன்
உன்னைவிட்டே னென்னைவிட்டே னானடைந்த பயனும்
[விட்டேன்

3. என்னசெய்வே னெங்குசெல்வேன் எவ்வாறுய்வே னென்
[னாசே
பன்னகா பரணனருள் பாவியா மெனக்கிலதோ.

பிங்கலே! யான் சிவயோகியாரைத் தேடிச் செல்கிறேன். அவரை எவ்விதத்திலாயினுஞ் சந்தித்தாலன்றி என் மனம் சற்றும் சாந்தியடையாது.

பிங்கலை:—ஆ! பிராணகாந்தா! வேதத்துருவே! தங்கள் நிலை ஏன் இவ்வாறு மாறுதலடைந்திருக்கிறது! என்னுருயிரே! (முழங்காற்படியிட்டு) இதோ என் முகத்தைச் சற்றே யுற்று நோக்குங்கள்! என் செய்வேன்! தங்கள் சரீரம் மெலிவடைந்த இந்நிலையில் தாங்கள் வெளிச் செல்வது தகுதியோ!

மந்தரன் :—காரிகையாய்! என் சரீரம் மெலிவடைந்திருப்பதாய்க் கூறுவையாயின் சிவனடியாரின் அபாரசக்தியை யவமதிக்குங் குற்றத்துக் காளாவாய். யான் என்று மடைந்திராத திடகாத்திரத்தை இப்போ தடைந்துளேன்.

பிங்கலை :—(தனக்குள்) என்ன செய்வேன்! இதுகாறு மில்லறத்திற் செவ்வனே பொருந்தியிருந்த இவர் மனம் தற்காலம் திடீரென கழிவிரக்கங் கொண்டது விபரீதமாக வன்றோ காணப்படுகின்றது. (மந்தரனை நோக்கி) பிராணகாந்தா! என் மனம் யாதுகாரணம்பற்றியோ திகிலடைகின்றது.

இராகம், சங்கராபரணம் : தாளம், ஆதி.

1. என்நிதியே என்பதியே என்னறிவே என்பொறியே
என்னிதயத் தேயமர்ந்தாய் என்னுயிரே என்தேவே.

2. புன்னுனியின் நீர்துவாய்ப் புகலுவரோ யாக்கைதன்னை
என்னையிங்கே தனிவிடுத்து ஏகிடுதல் ஏற்குமோதான்

3. உம்முடன்யான் ஒத்திறக்க வுளுறக்கந் தானடக்கி
செம்மையுடன்(யான்) இருந்ததுவும் சீருளந்தா னறியாதோ.

என் தெய்வமே! எனை விடுத்துச்செல்வது தங்களுக்குத் தர்மமாகுமா! உயிருடன் பொருந்திய யாக்கை உயிர் பிரிந்திடின் எவ்வாறியக்கங் கொள்ளும்! தாங்கள் பிரிந்திடின் யான் எவ்வாறுய்வேன்! தங்களுடன் யானும் வருகிறேன். நாமிருவருமே சிவயோகியரைத் தேடிச்செல்வோம். இந்நிலையில் தங்களை வெளிச்செல்லவிடுத்து யான் தனித்திரேன். (முழங்காற் படியிட்டு) பிராணகாந்தா! என்னை விட்டுச் செல்லத் தங்கள் மனம் எவ்வாறு துணியும்! (கண்ணீர்ப் பெருக்கல்).

மந்தரன் :—பேதாய்! என்ன கண்ணீரும் கம்பலையும்! யான் இவ்விடம் விட்டுச் செல்வதை உந்தனையே முற்றிலும் நீத்து செல்வதாக எண்ணுகின்றனைபோலும்! என்ன அறிவீனமிது! குழப்பங் கொண்டிருக்கும் என் மனவமைதியின் பொருட்டன்றோ யான் சிவனடியாரைத் தேடிச் செல்வது? அவரருள்பெற்று அவருடன் யான் மீண்டு முனைச் சேர்வேன். சிறிதுகாலம் பொறுத்திருப்பாய். கவலையுறேல். இதுவே என் மனோநிலையன்றாயின் அவரருளை யானடையாதிருக்கக்கடவேன். நில். (செல்லல்)

பிங்களை :—ஹா! நாத! செல்கின்றீரே!

மந்தரன் :—கடிதினில் மீள்வன். கண்மணி! பின் தொடரேல். நிற்பாய். (மறைதல்)

பிங்களை :—ஹா! காந்தா! பிராணபதி! ஹா! ஹா! (புவியிற் சாய்தல்)

அங்கம் 1.

களம் 5.

இடம்—மங்களாபுரி(தசார்ஹ தேசம்)யில் ஒரு மடம்.

காலம்—பிற்பகல்.

ஸுமதி:—(பால் பழவர்க்கங்களுடன் ரிஷபரை யணுகி) இந்நகரின் கலிநீக்கவந்த ஈசனார்தம் கருணையே உருவாம் தங்களைத் தமது அடியார்க் கடியாராம் இந்நாட்டரசரின் பொருட்டு அவரடியாள் ஸுமதி நமஸ்கரிக்கின்றேன். என் நாதர் வேட்டைக்குக் கானகம் சென்றுளராதலின் தங்கள் வரவை யறியார். (நமஸ்கரித்தல்)

ரிஷபர் :—உன் மாங்கல்யம் நீடூழிகாலம் வளர்வதாக! குழந்தாய்! கடவுளின் அருள் கடலினும் பெரிதே. ஆயினும் உனைப்போன்ற உத்தமியர்தம் கற்பினுக்கு அது மிகவும் சிறியதேயாகும். உனக்கு யாதேனும் குறையுளதோ ?

ஸுமதி :—கருணைக்கடலே! உத்தமகுலத்திற் பிறந்து உத்தம குலத்திற் புகுந்து உத்தமோத்தமர்களாம் தங்களைப் போன்ற சிவனடியார்களது அருள் நிரம்பப் பெற்ற எம் போல்வார்க்குக் குறை எங்ஙனமிருக்கும்? கருணாமூர்த்தி யாம் தாங்கள் தற்காலம் என்னுபசரணைகளை யேற்றுக் கொள்ளவேண்டுமென்பதே யான் வேண்டுவது.

(ஸுமதி பால் பழவர்க்கங்களை யோகியார்க்குதவுங் கால்)

ரிஷபர் :—குழந்தாய்! உன் நாதன் மநுமுறை வழு வாது செவ்வனே யரசு புரிந்து வருகின்றனனா ?

ஸுமதி :—தந்தையே! என் நாதர் ப்ரஜைகள் கொண்டாட மநு முறையிற் சிறிதேனும் வழுவாது அரசு புரிந்து வருகின்றனர்.

ரிஷபர் :—ஆயின் இந்நாட்டினர் பாக்யவந்தர்களே! பிரஜைகள் பல்லோரும் புகழ அரசு புரிதல் அரசர்க்கு மிக்க சிரமத்தையே கொடுக்கும். ஆயினும், ஆதவன் வெப்பத் துழல்வார்க்குப் பாதப நீழல் இன்பம் பயக்குமேபோல் உனைப்போன்ற இல்லத் துணைவியரையும், உத்தம குணங்களிற் சிறந்த புத்ரர்களையுமாசாரடைவாராயின் அச்சிரமத்தைச் சிறிதும் பொருட்படுத்தார். அஃது அவர் இன்புறற்கேயாதாரமாகும். அத்தகைய வரசருள் உன் நாதனுமொருவனெனவே யுன்னுகின்றேன். (ஸுமதியின் முகத்தை யேறிட்டுப் பார்த்து) குழந்தாய்! உன் முகத்தில் வாட்டக்குறி தோன்றுதலேன் ?

ஸுமதி :—அருளுடையோய்! அரசர்க்கு என்னுதியராம் பத்தினியர் மூவருளமேனும் அவர் குடியோங்கவும், அவரை மகிழ்விக்கவும் ஒருவராயினு மவர்க்கு மகப்பேறளித்தோமல்லேம். காயாமரமாய் விளங்குகின்றோம்.

ரிஷபர் :—நீ கூறு முன்னரே யானதை யறிந்துளேன். ஆயினும் உன் வாய்வழி கேட்க வென்றே இதுவரையும் வாளா விருந்தேன். (மௌனம்) குழந்தாய்! உன் நாதரின் பூர்வஜன்மவினை யவர் மகப்பேறடைதலைத் தடுத்து வருகின்றது. அவ்வினை தீரின் மகப் பேறுண்டாம்.

ஸுமதி :—அவ்வினை தீருவதற்கு மார்க்க மிலதோ ?

ரிஷபர் :—வினைகளனுபவிக்கப்பட்டே தீர்தல் வேண்டும்.

ஸுமதி :—அவ்விதமாயின் அவரது இல்வாழ்க்கைத் துணைவியாம் யான் அவ்வினைப்பயனை எற்றனுபவித்தலிய லாதோ? யோகிராஜ! (பாடுதல்)

இராகம், பியாக் : தாளம், ஆதி.

பல்லவி.

மக்கட் பேறுண்டாக வரந்தாரும்
என்பதிக்கே ஐயா—(மக்கட்)

அநு பல்லவி.

திங்கட் பிறையணிசடையோ னருளென
எங்கட் குறைதனைத் தீர்க்க வந்த வள்ளலே—(மக்கட்)

சரணம்.

திங்கட் பிறைநுதல் மங்கைய ரிருவரர்
அங்கட் பெருமையர் அடியவள் பின்னவர்
தங்கட் குறையினி தீருமோ வென்றவர்
இங்கட்டனை யெனிதுயருறு மவரிடமே—(மக்கட்)

தந்தையரே! என் நாதரது பூர்வ ஜன்ம வினைப் பயனை யான் எற்றனுபவிக்கின்றேன். அவர்க்கு ஏனைய பத்னிமார் களிடத்தில் மகப்பேறுண்டாகத் தாங்க ளாசீர்வதித்தல் வேண்டும்.

ரிஷபர் :—மாண்புடையாய்! ஈசனருளுக்கு முற்றிலும் பாத்ரையாயிருக்கும் உனக்கு எம்போன்ருரது அனுக்ரஹ மும் வேண்டுமோ? உன் வேண்டுகோளை எங்ஙனம் நிறை வேற்றவேண்டுமென்பதை அவனறிவானே யன்றி ஏனையோ ரறியார். நீ யாதொன்றுக்கும் கவலையுறல் வேண்டாம். இவ்விபூதியை எடுத்துச் சென்று உன் நாதனுக்களிப்பாய். உனக்குமுன் வந்தோர் எனக்குச் சமர்ப்பித்த இவ்வாடையா

பாணங்களே உன் நாதனிடம் என்னுலாசி கூறி யளிக்கப்பட்டவைகளாகச் சேர்ப்பாய். அவைகளேத் தரித்தற்குரியார் அரசரேயாதலின் அவரே யவைகளே யடையற்பாலர்.

ஸுமதி :—முனிபுங்கவ! தாங்கள் இவ்விடமே சில காலம் வதிந்துவரத் தங்களுக்கு ஸேவை செய்யும் பாக்யத்தை நாங்களடைய வனுக்ரஹித்தல் வேண்டும்.

ரிஷபர் :—வத்ஸே! உன் மன விருப்பத்தைத் திருப்தி செய்விக்கப் பலமுறையும் யானுன்னேக் காண்பேன். (ஸுமதி, யோகியாரை நமஸ்கரித்து அவாளித்த பிரஸாதங்களுடன் மீள) பரம தார்மிகனும் வஜ்ரபாஹுவின் ஊழ்வினைப் பயன் தீரவும், என்னேச் சரணடைந்த இறந்த மந்தரன தாவிக்கு ஒரு பிறப்பிட மமைத்திடல் கோரியும் இன்று இச்சுமதியி னுகமனம் ஈசனருளால் நேர்ந்ததெனக் காண்கிறேன். ஏ ப்ரபஞ்ச நாடக ஸூத்ரதார! உன் ஆற்றலே யாற்றல்! உன் திருவருள்வாழி!! உன்னடியாரும் வாழி!!!

அங்கம் 2.

களம் 1.

இடம்—மங்களாபுரி—அரண்மனையின் நந்தவனம்.

காலம்— பொழுது சாயுங்காலம்.

சித்ரரேகை :—ப்ரேமாவதி! இதோ நம் பிராணபதியும் வந்து விட்டார்.

(வேட்டையினின்றும் மீண்ட வஜ்ரபாஹுவின் பிரவேசம்)

வஜ்ரபாஹு :—சித்ரரேகா ! ப்ரேமாவதி ! நீங்கள் வாடின முகக்குறியுடன் என்னை இன்று வரவேற்பதின் காரண மென்ன ? யாதேனும் விசேஷ முண்டோ ?

சித்ரரேகை :—நாத ! நம் நாட்டிற்கின்று சிவயோகிய ரொருவர் வந்துளர்.

வஜ்ரபாஹு :—மிகவும் நலமே. அது நம் நாடு செய்த புண்யமாகும். அவர்க்குரிய பணிவிடைகள் புரிவான் தக்க ஏற்பாடுகள் செய்தீர்களா ? அவர் என்னைப் பற்றி யாதேனும் விசாரித்தனரா ? எத்தனை நாட்களிங் கிருப்பரெனத் தெரிகிறது ? நம்மிடமவர் கோருவது யாதேனு முளதோ ?

சித்ரரேகை :—அவை யாதொன்று மெனக்குத் தெரியாது. யான் அவர்க்குரிய காணிக்கைகளுடன் சென்று என்னைத் தெரிவித்துக் கொண்டேன்......

வஜ்ரபாஹு :—பிறகு?

சித்ரரேகை :—எனக்கு யாதேனுங் குறையுண்டோ வென வினவினர்......

வஜ்ரபாஹு :—அதன் பிறகு?

சித்ரரேகை :—அதன் பிறகு என் குறையை யவரிடம் தெரிவித்துக்கொண்டேன்.

வஜரபாஹு :—என்ன குறையென தெரிவித்துக் கொண்டாய்?

சித்ரரேகை :—உம்......மகப்பேறின்மையைப் பற்றி.

வஜ்ரபாஹு :—(மௌனம்) அதற்கவர் யாதுகூறினர்?

சித்ரரேகை :—தங்களுடைய பூர்வ ஜன்ம வினைகள் பிரதிகூலமாக விருக்கின்றன வென்றும், அவைகளனுபவிக்கப்பட்டுத் தீர்ந்தாலன்றி கான்முளை தோன்றாதென்றுங் கூறினர்.

வஜ்ரபாஹு :— ஓ! அதுவே யுங்கள் முகவாட்டத்திற்குக் காரணம் போலும்—சிவனடியார் கூறியதுண்மையே—ஹும்......பிறகு நீ என்ன கூறினை?

ப்ரேமாவதி :—(குறுக்கிட்டு) பிறகு கூறவதென்ன விருக்கிறது?

வஜ்ரபாஹு:—ஆ! ப்ரேமாவதீ! நீயு மங்கு சென்றிருந்தனை போலும்?

ப்ரேமாவதி:—ஆம், யானுமவளுடன் சென்றிருந்தேன். இந் நல் விஷயத்தை யவர் கூறியதற்குத்தான் முத்தாஹாரங்களும், ரத்னஹாரங்களும், பட்டுப்பீதாம்பரங்களு மவர்க்கு ஸமர்ப்பித்து வந்தோம்.

வஜ்ரபாஹு :—அறிவிலிகாள்! செய்தீவினையிருக்கச் சிவனடியாரென் செய்வர்? ஸாதுக்களை முறைப்படி பூஜித்

தல் நமது கடமையாகும். பிரதிபலனைக் கோரி யுபசாரணை கள் செய்தலிற் செய்யாமையே சாலவும் நன்று.

தாத்ரி :—அரசே! மஹாராணியார் ஸமுகத்துக்கு வாலாகுமோ வென—

வஜ்ரபாஹு :—ஸுமதியின் வருகையோ?

தாத்ரி :—ஆம்.

வஜ்ரபாஹு :—ஈதென்ன கஷ்டம்! ப்ரேமாவதீ! ஸுமதியும் யோகியைத் தரிசிக்கச் சென்றனளா?

ப்ரேமாவதி :—ஆம்! அவள்தான் அவசியம் செல்லல் வேண்டும்! அவளுடைய வயதை யுத்தேசித்து அவளுக்குத் தான் இப்பொழுது கான்முளை பிறத்தல் வேண்டும்!

வஜ்ரபாஹு :—அஃதிருக்கட்டும். இவ்விஷயத்தைக் கூறி யவள் மனத்தையும் நீங்கள் புண்படுத்தல் வேண்டாம். அமைதியாயிருங்கள். (தாத்ரியை நோக்கி) நம் ஸமுகத்துக்கு மஹாராணியார் வாலாமென்பதைத் தெரிவிப்பாய்.

(தாத்ரி செல்லல்).

ஸுமதி :—(யோகியாரளித்த பிரஸாதங்களுடன்) பிராணபதி! நமஸ்கரிக்கின்றேன்.

வஜ்ரபாஹு :—ஸுமதி! நீ இதுவரையு மெங்கு சென்றிருந்தனை? இவைகளெல்லாம் என்ன? ஓ! கோடை மின்னலிடியுடன் காற்றும் கலந்து கொண்டதிப்போதென வுன்னுகிறேன்.

ஸுமதி :—பிராண காந்தா! என்ன வதிசயம்! கட வுள் நம்மீது அருள்மாரி பொழியுங் காலம் இதுவன்றோ?

வஜ்ரபாஹு :—பிரியே! எனக்கொன்றும் விளங்க வில்லை; தெளியச் சொல்.

ஸுமதி !—நாதா ! கடவுளருளே யுருவங் தரித்து வந்ததுபோன்று நம்நகர்க்கின்று ஒரு சிவயோகியர் வந்தனர். அவரைத் தங்கள்பொருட் டுபசரிக்கச் சென்றிருந்தேன்.

வஜ்ரபாஹு :—ஓ ! (மௌனம்) நீ யாரென வவரிடம் தெரிவித்துக்கொண்டாய் ? அவர் யாது கூறினர் ?

ஸுமதி :—தாங்கள் வேட்டைக்குச் சென்றதால் அவர் வரவைத் தாங்களறியீரென்றும், தங்கள்பொருட்டு யானவரை யுபசரிக்கச் சென்றதாகவுங் கூறி நமஸ்கரித்தேன். எனக்கு யாதாயினுங் குறையுளதோ வென்றார். என்னுபசரணைகளை யவரங்கீகரித்தலே யான் வேண்டியதென்றேன்.

வஜ்ரபாஹு :—பிறகு ?

ஸுமதி :—யான் கொண்டு சென்ற வுண்டிப் பொருள்களை யவர்க்குதவினேன்.

வஜ்ரபாஹு :—என்னைப்பற்றி யாதேனும் வினவினரோ ?

ஸுமதி:—தங்களது ராஜகீயக நிலைமையைப்பற்றி வினவினர். யானறிந்தவளவிற் கூறினேன்.

ப்ரேமாவதி :—(குறுக்கிட்டு) அரசருடைய பூர்வ ஜன்மவினையைப்பற்றி யாதுங் கூறவில்லையோ ?

ஸுமதி :—என்ன பிதற்றுகிறாய் ப்ரேமாவதீ ? மண்டலாதிபதிகளாய்ப் பிறப்பவர் பூர்வஜன்ம நல்வினையின் பயனை யனுபவிக்கப் பிறப்பவரென்பது உலகமறிந்த விஷயம். இதைப்பற்றி சிவயோகியார் கூறவேண்டுவதென்னவிருக்கிறது?

ப்ரேமாவதி :—அங்ஙனமாயின் அரசர்க்கு இதுகாறும் மகப்பேறுண்டாகா திருக்கக் காரணமென்னோ ?

ஸுமதி :—ப்ரேமாவதீ! ஸந்ததியைப் பெருக்கலே நல்வினைப்பயனைத் துய்ப்பதாயின் அத்தொழிலையே மிகுதியாயுடைய கிருமி கீடம் முதலாம் பல்வகைப் பிறப்பும் நல்வினைப் பயனைத் துய்க்கப் பிறப்பனவன்றோ? உன் அறிவீனத்தை யான் என்னெனக் கூறவேன்! அடிக்கடி யுன் நாவன்மையால் என் அரசருள்ளத்தைப் புண் படுத்துகிறாய்? ஆங்காலம் வரின் எவையும் ஆகும். (ப்ரேமாவதி வெட்கித் தலை குனிந்து நிற்க) கண்மணீ! நீ இன்னம் மழலைச் சொற் பருவங் கடக்கவில்லை. குழவிப்பருவங் கடந்தன்றோ அரசர்க்கு நீ மகவினை யளித்தல் வேண்டும்? சித்ரரேகா! யான் கூறுவது நியாயமன்றோ?

சித்ரரேகை :—ஸுமதீ! நீ கூறியதுண்மையே. ஆங்காலம் வரின் எவையும் ஆகும். ஆதலினாற்றான் யான் அவ்விஷயத்தைப்பற்றி யதிகமாய் வருந்துவதில்லை.

வஜ்ரபாஹு :—(ஸுமதியை நோக்கி) ப்ரியே! யான் மிகவும் பாக்யவான் என்பதை விளக்க உத்தமியாம் உன்னை மனைவியா யடைந்த தொன்றே போதுமானது. பிறகு சிவயோகியர் யாது கூறினர்?

ஸுமதி :—தங்களுக்கு ஸர்வ மங்களமு முண்டாம் பொருட்டு ஆசிகூறி இத்திருநீற்றை யருளினர். மற்று, நம் சித்ரரேகையும், ப்ரேமாவதியும் அவர்க்குக் காணிக்கையாக ஸமர்ப்பித்த அரசர் தரித்தற்குரிய இவ்வாடையாபரணங்களை யவராசிகூறி யளித்ததாகத் தங்களிடம் கொடுக்கும்படி கூறினர். இதோ அவைகளையுந் தங்களிடம் கொண்டு வந்திருக்கிறேன்.

வஜ்ரபாஹு :—(சிவனடியாரின் பாத கமலங்களைத் தியானம்செய்த வண்ணம் விபூதியைத் தரித்து அவராலளிக்கப்பட்ட ஆடையாபரணங்களைக் கண்களிலொத்திக்

கொண்டு) ஸுமதி! இன்று என் மனம் அளவில்லாச் சந்தோஷத்திலாழ்ந்திருக்கின்றது. நீ எளிதில் உன் கடமையைச் செய்ததாகக் கூறுவையாயினும் இதற்கு முன் உனைப்போற் சென்ற சித்ரேகையும் பிரேமாவதியும் வாடின முகத்துடன் சிவனடியாரிடமிருந்து மீண்டதை யோசிக்குங்கால் நீ எவ்வித மவரிடம் பக்தி சிரத்தையுடன் நடந்துகொண்டாய் என்பதை யானே யறியச் சக்தி யற்றவனாயிருக்கிறேன். இனி ஸாதுக்களைத் தரிசிக்கச் செல்லும் முறையை யவர்களுக்கும் நன்ருய்ப் போதிப்பாயென நம்புகிறேன். சித்ரேகா! ப்ரேமாவதி! இதுவரையும் ஸுமதி கூறியவைகளினின்று நீங்கள் யோகியாரைத் தரிசிக்கச் சென்ற விதமும், உங்களைத் தெரிவித்துக்கொண்ட தன்மையும் முற்றிலும் தவறு என்பதை நீங்களே நன்கறிந்திருப்பீர்களென நம்புகின்றேன். காலதாமதமாகின்றது; செல்வோம்.

அங்கம் 2.

களம் 2.

காலம்—நள்ளிரவு.

இடம்—சித்ரரேகையின் அந்தப்புரம்.

(பிரேமாவதியின் பிரவேசம்)   பாடுதல்.

இராகம், காபி : தாளம், ஆதி.

பல்லவி.

ஸாமதியை நினைந்திடி லெரிகிறதே வயிறு   (ஸா)

அநுபல்லவி.

ஏது செய்வலிப் போதென வெனதுளம்
இழுது பெய்குட மெரிந்திடு தீப்போன்   (றெரி)

சரணம்.

தீதும்வாராது—நன்மை மாறாது
யாதுமறிந்து செய—வல்லமை யுடையார்க்கே
சூது செய்திக்கொடு—பாதகியை யுயிருடன்
வதைத் திடாவிடின்—நிலைத் திடாதுளம்   (எரி)

சித்ரரேகா! சித்ரரேகா! என்ன தூக்கம் வேண்டிய திவளுக்கு. சித்ர......ரேகா (சித்ரரேகை படுக்கையிற் புரளுதல்) அம்—ம.

சித்ரரேகை :—பிராணேசா !

ப்ரேமாவதி :—ஹாம்—'பிராணேசா'—உன் பிராணேசர் இனி இங்கு வந்து—இரவில்—உன்னைத் தட்டி எழுப்புவர்—கனுக் காணலாம்.

சித்ரரேகை :—(கண்விழித்து) ப்ரேமா! நீயா? ஆ! என் மனம் இந்நிலையி லுள்ளதென்றே கூறமுடியவில்லை. சிவயோகி நம் நாட்டிற்கு வந்ததினம் முதலாக இதுவரையும் யானனுபவிக்கும் இக்கைம்பெண் வாழ்க்கை என்னுல் சற்றும் பொறுக்க முடியவில்லை. (கண்களைப் பொத்திக்கொண்டு விம்முதல்)

ப்ரேமாவதி :—துக்கம் மேலிட்டதால்தான் தூக்கம் மேலிட்டதோ? சித்ரரேகா! இந்நிலையிலும் நீ அயர்ந்து துயில் கொள்வது மிகவும் வியப்பே!

சித்ரரேகை :—அயர்ந்த துயிலா? ப்ரேமா! யான் நற்றுயில் நீத்துப் பன்னுட்களாகின்றன. இன்றேதோ என்னையுமறியாது சிறிது குறுந்தூக்கங் கொண்டேன்.

ப்ரேமாவதி :—அஃதிருக்கட்டும். துயில் தெளிந்ததும் 'பிராணேசா!' என்றனையே; எதற்காக? உன் பிராணேசர் ஒரொரு சமயங்களில் இங்கு வருவர்போலும்?

சித்ரரேகை :—ப்ரேமா! யாது கூறினுய்! நீ கூறுவது புண்ணில் வேலெறிவதுபோலிருக்கிறது. சிவயோகியாரைப் பார்த்தவன்றேதான் யான் அரசரைத் தரிசித்தது.

ப்ரேமாவதி :—அன்றேல் அரசர் வந்ததாய்க் கனுக் கண்டனையோ?

சித்ரரேகை :—அதுவுமன்று. நீ கடினமாய் என் பெயரை யுச்சரித்ததே அரசர் விளிப்பதாய் யான் நினைக்க நேர்ந்தது. ப்ரேமா! நீயுமிப்படி என்னிடம் நடந்துகொள்வாயென்று நான் சிறிதும் நினைக்கவில்லை. (தேம்பி யழுதல்)

ப்ரேமாவதி :—சித்ரரேகா! போதும் கண்ணீர்ப் பெருக்கல். குழவியைப் போன்றழுவதால் யாது பயன்? இனி, நாம், கண்களினின்று நீரேயன்றி யுதிரம் பெருகவிடி னும் நம்மை யழன்மி னென்றணைத்திடா ராசர். அஃதிருக் கட்டும். ரேகா! நீ இவ்வற்ப விஷயத்திற்கே பிரபஞ்சம் நசித்ததுபோல் வருந்துவையாயின் யானறிந்ததை நீ யறிந் திருப்பின் யாது செய்யமாட்டுவை?

சித்ரரேகை :—என்ன, என்ன, நீ யறிந்த தென்ன? சொல், ப்ரேமா! சீக்கிரம் சொல். என்ன? நான் நினைத் தது......

ப்ரேமாவதி :—என்ன நீ நினைத்தது? ஓ! நீயும் அதை யறிவாய் போலும்?

சித்ரரேகை :—உண்மையா, உண்மையா, நிச்சயந் தானா?

ப்ரேமாவதி :—உண்மையே யுண்மை, உண்மை. மும் முறை சொன்னேன். மூன்று மாதமாய்விட்டது.

சித்ரரேகை :—ப்ரேமா!

ப்ரேமாவதி :—ஆம், உண்மை. இது நான்காம் மாதம்.

சித்ரரேகை :—என்ன செய்வதிதற்கு?

ப்ரேமாவதி :—என்ன செய்வதா!—நன்றாய்த் தூங்கு வது! பிறகு ஸௌமதிக்குப் பிறக்கும் குழந்தையையோ குழந்தைகளையோ முறைப்படி தொட்டிலிலிட்டுத் தட்டித் தாலாட்டித் தூங்கச்செய்வது! (சித்ரரேகையின் பஞ்சணை யருகே காணப்பட்ட திராவகம் நிறைந்த பாத்திரத்தைக் கைக்கொண்டு) சித்ரரேகா! இஃதென்ன! துக்கத்திற்கு மருந் தோ? அன்றி தூக்கத்திற்குத்தான் மருந்தோ?

சித்ரரேகை :—ஆம்! இரண்டிற்கும் மருந்தே யது! துக் கம் கழிவதற்கும்—பெருந்தூக்கம் கொள்வதற்கும்!

ப்ரேமாவதி :—என்ன ? யாது கூறுகிறாய் ?

சித்ரரேகை :—ப்ரேமா! உன்னிடம் யானேன் ஒளித்திடல்வேண்டும். இக்கஷ்டநிலை—என்னால் பொறுக்க முடியவில்லை. உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்து—

ப்ரேமாவதி :—என்ன ? அது விஷமா ?

சித்ரரேகை :—அதிவெட்டி லொருபகுதியே எனக்குப் போதுமானது. எட்டிலிருபங்கு ஒரு வைரதேகத்தையும் சிதைக்க வல்லது. (பாடுதல்).

இராகம், கேதாரகௌளம் : தாளம், ஆதி.

பல்லவி.

நன்றோ அன்றோ யானினி

அநுபல்லவி.

நலமழிந்த இந்நிலைதனிலிருந்து வருந்தல் (ந)

சரணம்.

இன்றோடென் இருநில வாழ்க்கையும்
பொன்றிடுதல் அகன்றிடயான் துயின்றது (ந)

ப்ரேமா! இன்று ஏதோ எனக்கு நல்லகாலமோ, கெட்ட காலந்தானோ! என்னையு மறியாது கண்ணுறக்கங் கொண்டேன்.

ப்ரேமாவதி :—சித்ரரேகா ! (பாடுதல்.)

இராகம், சாவேரி: தாளம், சாபு.

பல்லவி.

சாவதிற் பயனுளதோ துயர்தீர்ந்திட
பாவையே சொலக்கேளாய்—புவிவெறுத்து (சா)

அநுபல்லவி.

ஆவியிருக்கும் வரையன்றோ யடையும் ஸுகம்
யாவரிறந்த பின்னர்—தாவிப் பிடிக்கவல்லார் (சா)

சரணம்.

பாவிப் பிறந்த பயனடைந்திட வறிகிலாள்
ஆவிவிடுத்து மடிந்தாளெனவே யுந்தன்
தாயுந் தந்தையும் மனம் உளையவருந்திக் கண்ணீர்
தாவி துடித்திடவே நீ விரும்பினை யந்தோ (கா)

சித்ரரேகா! உனக்கிது நல்லகாலம்! நீ இறப்பதிற் றவிர்ந்ததை எனக்கும் நற்காலமெனவே கொள்வேன். ஆயின்—இது ஸுமதிக்கு நேரிடக் காத்திருக்கும் ஒரு விபத்தை முன்னறிக்கை யிடுவதென்றே யான் ஊகிக்கின்றேன்.

சித்ரரேகை—என்ன? நீ கூறுவதிலிருந்தெனக்கு ஒன்றும் விளங்கவில்லை; தெளியச்சொல்.

ப்ரேமாவதி :—ஸுமதி யிருத்தலாலன்றோ நீ இன்றிறக்கத் துணிந்தது. ரேகா! ஸுமதியிருத்தலின் நீ இறத்தல் எங்ஙனம் மேலதாகு மென்பதே யானறியவேண்டுவது.

சித்ரரேகை :—ப்ரேமா! ஸுமதியின்மாட் டரசர்க்குள்ள மோகமே அவர் நம்மிடம் பூண்ட வெறுப்பிற்குக் காரணமாயிருப்பினும் அதைப்பற்றிச் சிறிதளவேனும் நாமவளைக் குற்றங் கூறுதல் நியாயமன்று. அவள் மனோநிலையை யானறிந்தவளவு நீ யறிந்திலை யென்றே யான் நினைக்கின்றேன். அறிந்திருந்தனையாயின் இவ்விதம் கூறியிராய். ஸுமதிக்கு மரசர்க்கும் நிகழ்ந்த ஸம்பாஷணைகளைப் பன்முறையும் யான் ஒளிந்து கேட்டிருக்கிறேன். நம்மிடமவர் இவ்விதம் பாராமுகமா யிருப்பது முற்றிலுந் தவறென்றும், தரும நெறிக்குச் சற்றேனும் பொருந்தா தென்றும், பாப

காமானதென்றும், மற்றும் அவளைவிட நாம் பலவிதத்தும் மேம்பட்டவர்களென்றும் அவர்க்கு வற்புறுத்தி வருகிறாள். அவள் கூற்றையு மரசர் பொருட்படுத்தாதுவாளா விருப்பின், அவள்மேல் நாமேன் குற்றங் கூறல் வேண்டும்? ப்ரேமா! அரசர்க்கு ஸுமதியிடத்துள்ள பெருங்காதல் யான் வெறுப்பதன்று. அவர் என்மீது கொண்டுள்ள வெறுப்பே என்னுயிர் வாழ்க்கையை யான் வெறுக்கச் செய்வது.

ப்ரேமாவதி :—சித்ரரேகா! உனைப்போன்ற சிற்றறிவினரை யானிம்மகிதலத்தி லிதுகாறுங் கண்டதில்லை. அரசர்க்குன்னிடம் தோன்றியுள்ள வெறுப்பு உன்னை வருத்துவதாயின் அவ்வெறுப்பிற் காதாரமாம் ஸுமதியை நீ விரும்புதல் எங்ஙனமியலும்? ஸுமதி குறுக்கிடா தொழியின் அரசருன்னை வெறுக்கக் காரண மென்ன? ப்ரியே! இத்தனை யாண்டுகளாய்ப் பழகியும் நீ ஸுமதியின் உண்ணீர்மையை யறியாதிருப்பது எனக்கு மிகவும் விந்தையாகவே தோன்றுகிறது. நீ கூறுவதுபோல் ஸுமதி நிரபராதி யென்பதும், நம் க்ஷேமத்தையும் ஸுகத்தையும் கோருபவளென்பதும் உண்மையாயின், இவ்வளவு வயது முதிர்ந்த நிலையில் அவள் சிவயோகியரிட மெதன்பொருட்டுச் செல்லல் வேண்டும்?

சித்ரரேகை :—ஆம். அவள் தனித்துச் சிவயோகியரிடம் சென்றதற்குத்தான் காரணம் எனக்கும் புலப்படவில்லை.

ப்ரேமாவதி :—நானதை யறிவேன். சித்ரரேகா! கூறுகிறேன். நன்றாய்ச் செவிகொடுத்துக் கேள். அரசர் நம்மிடம் பக்ஷபாதமா யிருந்து, அவளை நிராகரித்து வந்தது அவள் பொறுமையைச் சிறிது சிறிதா யதிகப்படுத்திக்

கொண்டே வந்தது. என் செய்வள்! வயது சென்றவளா தலின் நமக்கு மாருக அரசரை—வசீகரிப்பது—தன்னல் கூடாதகாரிய மெனக் கண்டாள். வேறு மார்க்கமில்லை. யாது செய்வாள்? யோகியைப்போல் வேடந்தரித்து வந்த மந்திரவாதியிடமிருந்து—சொக்குப்பொடி மருந்தை—

சித்ரரேகை :—ஆ! ப்ரேமாவதி!

ப்ரேமாவதி :—ஆம். சொக்குப்பொடி மருந்தை வாங்கி அரசர்க்கு ஸாதுவின் பிரசாத மென்று கூறி யளித்து விட்டாள்.

சித்ரரேகை :—ப்ரேமா! உன் மதியை யான் என்ன வென்று மெச்சுவேன்! இவ்விஷயம் எனக்குத் தோன்ரு தது என்ன அறிவீனம்!

ப்ரேமாவதி :—அரசரென்ன செய்வார்? தூளின் குணமே யவரை யிவ்வித மாட்டுகின்றது.

சித்ரரேகை :—ஆ! ஆ!

ப்ரேமாவதி :—இப்பொழுது ஸதா அரசர் தன்னிட மிருப்பதும் அவளுக்கு வெறுப்பாயிருக்கிறது. அதற்கவ ளென்ன செய்வள்! வயதின் குற்றம்!

சித்ரரேகை :—இப்பொழுதன்ரு எனக்குண்மை புலப்படுகின்றது. நல்லகாலம். ப்ரேமா! நீதான் என்னுயி ரைக் காப்பாற்றினுய்.

ப்ரேமாவதி :—சித்ரரேகா! ஸுமதி மிகவும் நல்லவள்?

சித்ரரேகை :—ஆஹா! அரசர் எப்படி யகப்பட்டுக் கொண்டார். இனி யவரை எப்படித் திருப்புவது?

ப்ரேமாவதி :—எப்படித் திருப்புவதா! ஒரே வழி தான். ஸுமதி யுயிருட னிருக்குமளவும் திரும்பார்.

சித்ரரேகை :—ஸுமதி யுயிருட னிருக்கும் வரையில் நாம் இங்நிலையிலா இருக்கவேண்டும் ?

ப்ரேமாவதி :— ஆம், ஸுமதி இறக்கும் வரையில்.

சித்ரரேகை:—ப்ரேமாவதி! நாமென்ன செய்வதிதற்கு?

ப்ரேமாவதி :—என்ன செய்வதா ? இப்பொழுது நீ இறப்பதற்கு யாது செய்வதாயிருந்தாய் ? அதுவே.

சித்ரரேகை :—விஷமிட்டுங் கொல்வதா ! ப்ரேமாவதீ ! போதும் உன் நற்போதனை ! இக்கெடு மதி என் உன்னைப் பற்றியது ? முன் ஜன்மங்களிலியற்றிய பாபங்களின் கொடுமை நம்மை இப்பொழு திக்கஷ்டத்துக் காளாக்கி யிருக்க, இந்தஜன்மத்திலு மிங் கொடுங் கொலைச் செய்வோமாயின் நமக்குய்யுமாறினி யேது ? உன் கொடிய சூழ்ச்சிக்கு யான் சிறிது மிசையேன்.

ப்ரேமாவதி :—சித்ரரேகா ! ஹும். உன் சித்தம் ஒரு நிலையிலில்லை யென்பதை நான் இப்பொழுதுதான் அறிந்தேன். என் மனோபாவ மின்னதெனக் கண்டறியாது வாயில் வருவதெல்லாம் பிதற்றுகிறாய். ஸுமதியை நாமேன் விஷமிட்டுக் கொல்லல் வேண்டும் ? அரசர் இதே நிலையிலிருப்பாராயின் நாம் விஷமுண்டிறத்தலைத் தவிர வேறு மார்க்க மில்லை யென்றன்றோ யான் கூறியது ? நல்லது, சித்ரரேகா! நான் அவ்வளவு கொடு நெஞ்சம் படைத்தவளா ? அங்ஙனமாயின் நீ இறக்க விருந்ததை நான் ஏன் தடை செய்ய வேண்டும் ?

சித்ரரேகை :—மன்னிப்பாய், ப்ரேமாவதீ! மன்னிப்பாய். உண்மையில் என்மனம் ஒரு நிலையிலில்லை யென்றே கூறுவேன். என்னவறிவீனத்தால் நீ கூறியதை யான் மாறுபாடாகக் கொண்டேன் ?

ப்ரேமாவதி :—உன் மனோநிலையின் தடுமாற்றத்தை யான் நன்கு கண்டறிந்தேனாதலின் இவ்விஷத்தை இவ்விடம் வைக்கச் சிறிதும் விரும்பேன். ரேகா! நானிதை எடுத்துச் சென்று பத்திரப்படுத்தி வைக்கிறேன். இனியும் நாலைந்து மாதம் பொறுத்துப் பார்ப்போம். தற்கால நிலை சற்றும் மாறாதாயின் நாமிருவரும் விஷம் பருகி இறப்போம். அறிந்தனையோ ?

சித்ரரேகை :—நல்லது, அவ்வாறே செய்வோம்.

ப்ரேமாவதி :—சித்ரரேகா ! நீயும் என்னைப்போலவே கபடமற்றவளாதலாற்றான் ஏனையோரைக்காட்டிலும் அதிகமாக யானுன்னை நேசிப்பது. நாழிகையாய்விட்டது. யான் சென்று வரவா ?

சித்ரரேகை :—அவ்வாறே செய்.

அங்கம் 2.

களம் 3.

(ப்ரேமாவதியின் தனி ப்ரவேசம்.)

ப்ரேமாவதி :—ஸுமதியுயிருடனிருக்க வேண்டுமாயின் இவ்விஷம் என்கையில் ஏன் அகப்படல் வேண்டும்! சித்ரரேகா! நீ இவ்வுலகில் வஸிக்கத் தகுந்தவளல்லை. தீத் தொழிலுக் குடன்பட நீ யஞ்சுவையாயின் இந்நில வுலக வின்பமும் உன்னை யடைய வஞ்சுமென்பதை நன்கறிந்து கொள். முயற்சியாலன்றி ஸுகமடைய விரும்பும் உனைப் போன்ற மூடர்கள் தங்களுடைய வாணாட்களின் பெரும் பாகத்தையும் துக்கத்திலேயே கழிக்கப் பிறப்பவர்கள். இள மையும் ஆயுளும் அழியாது நீடித் திருப்பனவாயின் உன் னைக் காட்டிலும் யான் பன்மடங்கு விசேஷித்த குண முடையவளாகவே யிருப்பேன். இன்று ஸுமதியின் வசப் பட்ட மன்னர் நாளை ப்ரேமாவதியின் வசப்பட, அக்காலத் தும் பொறாமையின் வசப்பட்ட நீ பெருமையை இழக்க வேண்டியவளே. நல்லகாலம். என் மனோபாவத்தை யொளித் துத் தந்திரமாக இவ்விஷத்தைக்கொண்டுவந்தேன்—ஏ! விஷ மே! நீ ஸுமதிக்கு விஷம். எனக்கு இடையறா வின்பத்தை யளிக்கவந்த அமிருதம்—இந்நஞ்சைக் கர்ப்பிணிகளுக்குக் கொடுக்கக்கூடிய நல்ல ஔஷதமெனக் கூறிச் சிறிது சிறி தாய் ஸுமதிக்குக் கொடுத்துவிடுகிறேன். யாவரையும் நல் லவரெனவே மதித்தல் அவள் தன்மையாதலின் என் எண் ணம் எளிதில் நிறைவேறு மென்பதி லெள்ளளவேனு மைய மில்லை.

———

அங்கம் 2.

களம் 4.

(வஜ்ரபாஹுவின் ஆலோசனைச் சபை.)

வஜ்ரபாஹு :—காலநேமியரே! இத்தகைய நோயினால் பிடிக்கப்பட்டவர்களை நீர் எப்போதாயினுங் கண்டதுண்டோ?

காலநேமி :—இத்தகைய வியாதியை யானிதுவரையுங் கண்டதில்லை. மிகவுங் கொடிய வியாதி யென்பதில் சந்தேகமே யில்லை. கர்ப்போற்பத்தியை யனுஸரித்த தாதலின் அதைப்பற்றிய ஒரு வியாதியென்றே இதுவரையுங் கருதியிருந்தேன். ஆயின், நம் ப்ரேமாவதி ராணியாரின் தந்தை அனுப்பிய வைத்யரால் அது கருவைப் பற்றிய வியாதியன்றென்றும், மேக ஸம்பந்தமான குஷ்டம்போன்ற கர்ம வியாதிகளு ளொன்றென்றும் தெரிந்துகொண்டேன். இவ்வியாதிக்கு மருந்தொன்றுங் கிடையாதென்றும், அவர் கூறுகிறார்.

உக்ரஸேனன்:—அரசே! நம் காலநேமியர் கூறுவது சற்றும் பொருத்தமானதாக எனக்குத் தோற்றவில்லை. அரசர்மாபி லுதித்தார்க்கு மேக ஸம்பந்தமான வியாதிதோன்றுதற்குக் காரணமில்லை. என் அன்னையார் பிறந்த குலத்திலாயினும், புகுந்த இக்குலத்திலாயினும் இத்தகைய நோயால் பிடிக்கப்பட்டவர்கள் நமக்குத் தெரிந்தவரையி லொருவருமிலர். மற்று, நம் ராணியாருக்கு அடிக்கடி வைத்யம்

செய்துகொண்டுவந்த நம் தன்வந்தரியார் அத்தகைய வியாதி பற்றுதற்குச் சற்றுங் காரணமில்லையென உறுதியாய்க் கூறுகிறார். அடிக்கடி யவர் நம் ராணியாரைப்பற்றி, பாபத் திற்கிடங் கொடாமனத்தாளென்றும், வசைக்கிடங் கொடா வாழ்க்கையாளென்றும், நோய்க்கிடங் கொடாத் தனுவின ளென்றும் தங்கள் ஸமுகத்தில் தெரிவித்திருப்பதை யான் நன்கறிவேன். இவ்விஷயத்தைப்பற்றி யவரை யான் வற் புறுத்திக் கேட்டதில் அவர் விஷஸம்பந்தத்தாலன்றி மற் றெவ்விதத்தாலு மிவ்வியாதி பற்றுதற்கு மார்க்கமில்லையென உறுதியாய்க் கூறுகிறார். யானு மவரது அபிப்பிராயத்தை யே யுடையேன்.

காலநேமி :—ஸேனாபதியாரே ! நம் ஸுமதிமஹா ராணியார்க்கும் விரோதிக ளிருப்பரோ ?

உக்ரஸேனன் :—காலநேமியாரே! என்னைவிடத் தங் களுக்கு உலக வனுபவம் அதிகமிருப்பினும் இவ்விஷய மட்டிலும் உம் மபிப்பிராயம் முற்றிலுந் தவறென்று என் மனம் நிர்ணயிக்கின்றது. நோயுற்றானுக்கு அமுதங் கைக்கு மதுபோல் அகங்கார மமகாரங்களைப் பிறப்பிடமாகக் கொண்ட காம க்ரோதாதிநோய்களால் பீடிக்கப்படுபவர்கள் உத்தமர்களையும் என் விரோதிகளாகக் கொள்ளலாகாது ?

வஜ்ரபாஹு :—பிறந்த குழவியாயினும் நோயின்றி யிருத்தலாகாதா! விஷமே யுருவெடுத்து வந்ததுபோன் றன்றோ காணப்படுகின்றது? பிறந்தது முதலாய்ப் பால் பருகுவதும் உறங்குவதுமின்றி ஊத்த சப்தமிட்டு அக் குழவி யிடைவிடாது கதறிக்கொண்டிருக்கும் நிலையைக் காணின் அஃது உயிருடனிருத்தலினும் இறத்தலே நலமென் றன்றோ தோன்றுகின்றது. குழவியின்தாயும் வாய் விட்டல றாளாயினும் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஊணுறக்கமென்

பது சிறிதேனுமின்றி, அல்லும் பகலும் தத்தளித்துக்கொண்டன்றோ விருக்கிறாள்? இவர்கள் படுந்துயரம் இவ்விரண்டு மாதகாலமாய் என்னையு மளவிட வியலாத் துயரத்தாழ்த்தியிருக்கின்றது. மனத்திற்குச் சற்றேனு மமைதியென்பதிராது நாளுக்குநாள் என் சரீரம் மெலிவடைந்து வருவதை யானே யறிகிறேன். காலநேமியரே! நம் சித்ரரேகையும் ப்ரேமாவதியும் நானிந்நிலையில் நீடித்திருப்பேனாயின் நாளடைவில் உயிரிழப்பது திண்ணமென்றே கூறுகின்றனர்.

காலநேமி :—யானு மவ்வபிப்பிராயமே உடையேன். தங்கள் மேனி நாளுக்குநாள் மிகவுந்துரிதமாக வாட்டமுறுகின்றது. ஒருகால் தாங்களடிக்கடி தமது நோயுற்ற மனைவியையும் குழவியையும் பார்க்கச் செல்வீராயின் இவ்வாட்டமுற்ற நிலையில் அவ்வியாதி யுங்களையும் பற்றுமோவென்ற ஐயமும் என்னுள்ளத்தி லுதிக்கின்றது.

வஜ்ரபாஹு :—உண்மையே. இவ்விதமிவர்க ளவஸ்தைப்படுவதை யுன்னுங்கால் "நோவினை லுயிரிறப்பரோ விறக்கிலான்றிடந் நோய்நீங்கி—மேவு நல்லுருப் பெறுவரோ பெறுகிலர் வினையை யார் விலக்கிற்பார்—பாவகாரியரிவர் நமனுலயப் பழநரகாற்றுறு—நாவினை லெடுத்தோதொணு நாகுற நானிலந்தன்னில் வந்தார்.'' இவர்கள் முற்பிறப்பிற்செய்த தீவினைப் பயனைத்துய்க்க நாகலோகத்திலுந்தக்க ஸாதனங்க ளிராமை பற்றி இப்பிறப்பின்கணதை இப்புவியி லனுபவிக்கவென்றே பிறந்துளா ரென்றெண்ணுகின்றேன்.

காலநேமி :—தாங்கள் கூறுவது முற்றமுண்மை. நாமிருவரு மிவ்விஷயத்தில் ஒரே மனக்கொள்கையுடையோம். வைத்யர்களால் கைவிடப்பட்ட வியாதி கர்மவியாதியென்பதற்குச் சந்தேகமென்ன?

வஜ்ரபாஹு :—அங்ஙனமாயின் அத்தகைய கொடிய தீவினைப்பயனைத் துய்த்தற் குரித்தாமிடம் கோரவனமே யாகும். இவர்கள் அரண்மனையில் வசிப்பதற்குத் தினையள வேனும் நியாயமில்லை. நாட்டில் வசிப்பதற்கும் நியாய மில்லை. இவர்கள் நம் நாட்டிலிருப்பாராயின் இவர்கள் தீவினை நாட்டையும் பற்றுமெனவே நினைக்கின்றேன். உமது கொள்கையும்......

காலநேமி :—அதுவே. இவர்கள் நாட்டை விட்டக லின் உமது மனத்திற் கமைதியுமுண்டாம். சரீரத்திற்குச் சுகமு முண்டு. தமதுயிரைப்பற்றிய அபாயம் முற்றிலும் நீங்குமென நினைக்கின்றேன்.

உக்ரஸேனன் :—(கோபாவேசத்துடன்) காலநேமி யாரே! நீர் ஏனோ இந்நாட்டிற் கமைச்சராய் வந்தீர். அர சரை நல்வழியிற் செலுத்தி தர்மத்தைத் தழைத்தோங்கச் செய்யவந்தவராக எனக்குத் தோன்றவில்லை. இதுகாறுந் தர்மமார்க்கத்தை விட்டகலாத மன்னரைத் தீயவழிப் படுத்தி நசிக்கச் செய்யவந்தவராகவே தீர்மானிக்கின்றேன். (பாடுதல்)

இராகம், தோடி : தாளம், ஆதி.

பல்லவி.

போதும் போதும் போதுமையனே
உம் நற்போதனை (போதும்)

அநு பல்லவி.

ஏது மறியாப் பாவி தீதே யுருவாய் வந்தீர் (போ)

சரணம்.

ஓதும் கலைபலவே யுணர்வரன்றோ போத்தகர்
வேதன் படைத்ததுமை ஏனோ இந்நிலைபெற (போ)

இவ்விதம் மனச்சாக்ஷிக்கு விரோதமாயும், தர்மத்துக்கு மாறுகவும் போதனை செய்வோர் யாவராயினு மவரைத் தாமதமின்றி வேந்தர் கொல்லக் கடமைப்பட்டவர். அவ்விதமவர் கொல்லத் தவறின், தெய்வம் நின்று அவரைக் கொல்லும். இது திண்ணம். இது ஸத்தியம். இனி யா னும்மிடம் பேசுவதையும் வெறுக்கிறேன். (அரசரை நோக்கி) அரசே! நீர் தர்ம மார்க்கத்தை விட்டு இவ்வளவு சேய்மையிற் செல்வீர் என்பதை யான் நினைத்திலேன். இப்புவியே வினையின் பயனை யனுபவிக்குமிடம். அரசராயினு மமைச்சராயினும், உடையாராயினும் வறியாராயினும், ஆடவராயினும் பெண்டிராயினும் யாவரும் வினையின் பயனைத் துய்க்க வென்றே பிறப்பவராவர். வினையநுபவ மொழிந்தக்காற் பிறவியேது? நம் மஹாராணியாரும் அவர் சிறு குழவியும் கொடிய தீவினைப் பயனை யநுபவிப்பாராயினும் அவர்களை நாட்டைவிட்டப்புறப்படுத்துவது தர்ம மன்று. வினையை யநுபவிப்பதற்கும் அவ்வநுபவ இடத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமிலது. இதற்குவமை, அரண்மனையிலிருந்தும் நம் ராணியார் இக்கொடிய நோயால் பிடிக்கப்பட்டிருப்பதே போதுமானது. மற்று, தீவினைப்பயனைத் துய்ப்பதை ஆன்றோர் தெய்வதண்டனை யெனக் கூறுவர். அத்தகைய தெய்வ தண்டனை பிராரப்தமாய் வருங்காலத்து அநுபவித்தே தீர்க்கப்படல் வேண்டும். அங்ஙனம் ஈசன்தண்டனைக்காளாய் இருக்கு மொருவனை அக்காரணம் பற்றியே மற்றொருவனொறுப்பானேல் அத்தண்டனையைத் தானே யடையவேண்டியவனாவான். அவ்விதமின்றி அத்தகையானுக்கு மனம் வாக்கு காயங்களாலும், பொருளாலும் துணைபுரிபவன் ஈசன் தண்டனையைத் தானுமவனுடன் கலந்தநுபவித்து அவனது அநுபவத்தைச் சிறிதே குறையச் செய்கின்றானதலின், அக்காரணம் பற்றி கடவுளருளுக்குப் பாத்ரனாகிறான்.

இதுவே காருண்யமென்பது. இக்குணம் அரசரிடத்தே மிகுதியும் பொருந்தி யிருத்தல் வேண்டும். ஆகவே, அரசே! தாங்கள் நினைப்பது போன்று, பிராரப்தமாய் வந்துள்ள தீவினையின் பயனை என் அன்னையார் அநுபவிப்பவராயினும் இளங் குழவியுடன் அவரைக் கானகத்தில் விடுத்துப் பற்பல கஷ்டங்களுக்கும் ஆளாக்கித் தாங்கள் ஈச்வர தண்டனைக்கும், உலகத்தின் அழியா நிந்தனைக்கும் பாத்ரராகாது அவரிடம் காருண்யத்தைப் பூண்டு தங்களாலியன்ற சிகிச்சைகளைச் செய்து அவரநுபவிக்கும் வினைப்பயனைத் தாங்களும் கலந்தனுபவித்துக் கடவுளருளைப் பூரணமாய்ப் பெற வேண்டுமென்பதே என் கோரிக்கை. தங்கள் கொள்கையை யான் சற்றும் ஆமோதிப்பே னல்லேன்.

வஜ்ரபாஹு :—(நதித்தெழுந்து பற்கடித்து) உன் ஆமோதிப்பை யான் கோரினேனில்லை. உன் நிலைமைச் சற்றேனு மறியாதானாய் எங்க ளாலோசனையிலடிக்கடி நீ குறுக்கிடுகிறாய். காலநேமியரையும் பலவாறு இகழ்ந்து பேசுகிறாய். ஆயினும் நீ பிறந்தகாலந்தொட்டுத் தாய் தந்தையரிழந்தமை பற்றி ஸுமதியின் கருணைக்குப் பாத்ரனாய் அவளாலிதுகாறும் புத்திரனைப் போன்று வளர்க்கப்பட்டு வருகின்றாயாதலின் அவள் பொருட்டு இவ்வாறு வாது புரிகிறாய் என்ற ஒருகாரணம் பற்றியே யானுன்னைத் தண்டியாது விடுவது. யான் பலதினங்களாய் ஆலோசித்தும், பல்லோர் கொள்கைகளை யனுஸரித்தும் இத்தீர்மானத்துக்கு வந்துளேனாதலின் உன் மழலைச் சொல்லைப் பொருட்படுத்தி யதினின்று மாறப் போவதில்லை என்பதை நன்கறி.

உக்கிரசேனன் :—இறைவ! உம் கடிந்துரைத்தலுக்கு யானஞ்சுவேனல்லேன். நீர் எனக்கிடும் எத்தகைய கொடிய தண்டனைக்கு மஞ்சுவேனல்லேன். ஸுமதியாரிடம் எனக்

குள்ள பற்றுதலைக்கொண்டு யானிவற்றைக் கூறுவதாய்த் தாங்கள் கூறுவது முற்றிலும் தவறு. தங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டும், தர்மத்தை நிலை நாட்டுதலின் பொருட்டும், தங்களுக்குத் தற்காலம் தக்க போதனை செய்வாரில்லாமை பற்றியுமே யான் இவற்றைக் கூறத் துணிந்தது. தாங்கள் என் அன்னையாரை அவ ளருங்குழவியுடன் அடவியில் விட்டுவர உத்தரவிடின் இதுவரையும் தங்களைத் தெய்வமெனப் போற்றிவரும் பிரஜைகள் தங்களைப்பற்றி யாது கூறுவர் ? (பாடுதல்)

இராகம், அடாணு : தாளம், ஆதி.

பல்லவி.

பாவி பாவிபாவி யென்றே பல்லோருமும்மைப்
பகர்ந்திடச் செய்கு வீரோ எக்காலத்தும்— (பாவி)

அநுபல்லவி.

மேவிக்கானகந்தனில் ஆவிவிடுத்திடுவான்
எவினன் தேவியை ஆவிக்குமாறுடன் (பாவி)

சரணம்.

1. ஆவி விடுத்திடுவளோ அருங்குழவி
தாவியணைத்திடுவளோ துயர்தீரவே
நோவினிடர்ப் பொறுக்கலாற்று துயிர்த்து விம்மி
காவிமலர்க்கண்ணினாள் விதுடிக்குங்கொல்லோ (பாவி)

2. மாவினமுண்டிடுமே மஹிஷி தன்னை
கோவிளங்குமாறுடன் கொடுங்கானத்தே
தேவியிடர் தீர்த்திட தேவர் தேவனுமஹா
தேவனருளன்றியேல் யாவர் காத்திட வல்லார் (பாவி)

அரசே! தங்கள் கொள்கையை இப்பொழுதும் தாங்கள் மாற்றீராயின், தமது பழைய மந்திரி தர்ம மூர்த்தியார் இறந்த தினத்தை வெறுப்பேன்; இங்காலநேமியர் தங்களுக்கமாத்யராய் வரக் காரணமாயிருந்த ப்ரேமாவதி ராணியாரையும் வெறுப்பேன்; தங்களையும் வெறுப்பேன்; தங்களிடம் ஊழியம் செய்ய நேர்ந்துள்ள என் பிறப்பையும் வெறுப்பேன்.

வஜ்ரபாஹு :— (கோபத்தீ மூண்டு விட்டெரிவதொப்ப, உதடு படபடத்துத் துடிக்க, உடல் கம்பிக்க, பெருமூச்செறிந்து சீறிய பணி போன்று தனதாஸனம் விட்டெழுந்து உடைவாளை யுருவி) யாது கூறினை, கசடா? உன்னை ஏன் என் வாளாலிருதுண்டாக்கிப் போடல் தகாது? யான் உன் அதிபன் என்பதைச் சிறிதேனும் நீ மதிக்கவில்லை போலும். இதுகாறு மென்னை யவமதித்துப் பேசியதற்குத் தண்டனையாக ஸுமதியை யவள் குழவியுடன் தேரிலேற்றி நடுக்காட்டில் விட்டுவர உனக்கே யுத்தரவிடுகிறேன். உன்னரசனுணைக்கு மாறாக நடப்பையாயின் என் வாளிற்குத் தப்புவையாயினும் ஈசன் தண்டனைக்குத் தப்பாய். நீ வீரர் வம்சத்துத்தோன்றிய துண்மையாயின் இஃது உன் கொற்றவன் உனக்கிடுங் கட்டளை.

உக்ரஸேனன் :—(முழங்காற் படியிட்டுக் கைகூப்பிய வண்ணம்) என் தந்தையரே! அரசரேறே! என் வேண்டுகோளை மறுக்காதீர். தங்களுடைய கட்டளையைத் தயை செய்துமாற்றும். கொடியநோயினுல் அடிவைத்து நடக்கவும் சக்தியற்றிருக்கும் என் அன்னையாரின் மீது காருண்யத்தை மேற்கொள்ளும். பலவகையிலும் நொந்திருக்கும் அவர் மனோ நிலையை யறிந்து காருண்யத்தை மேற்கொள்ளும். இளங்குழவியையுடைய தாயின் பொருட்டுக் காருண்யத்தை

மேற்கொள்ளும். அக்குழவியின் இளமையையும் நோயையும் உத்தேசித்துக் காருண்யத்தை மேற்கொள்ளும். பிறக்குமுன் தந்தையை யிழந்து, பிறந்ததும் தாயை இழந்த பாவியாம் எந்தனுக்குத் தாயும் தந்தையுமாய் நின்று என்னைத் தன் இருகை ஏந்தி பரிந்து பாலூட்டிக் கனிந்து தாலாட்டிச் சீராட்டிப் புத்திரனிலும் பன்மடங்கு விசேஷித்த அன்பை என்மீது பாராட்டிப் பாதுகாத்துவந்த கருணாதேவியின் பொருட்டுக் காருண்யத்தை மேற்கொள்ளும். கானகம் என் பதிதுவென என் அன்னையார் இதுகாறுமறியார். அத்தகையாரை இக்நிலையில் வீரரும் பயமுறும் கொடிய கானகத்தினிடையே இளங் குழவியுடன் விட்டுவருவதா லேற்படுங் கொடிய ஸம்பவத்தை யுத்தேசித்துக் காருண்யத்தை மேற்கொள்ளும்.

வஜ்ரபாஹு :—குழந்தாய்! உக்ரஸேனா! என்கொள்கையைச் சற்றும் யான் மாற்றுகில்லேன். என் கட்டளையையும் மாற்றேன். அரச ராண்மனையிலுங் கொடியநோயை வருவித்தவன் கோரமான காட்டினிடத்தும் தன் சிருஷ்டிப் பிரஜைகளைக் காக்கவல்லனேயாவன். ஈசனுள்ளத்தை யாரறிவர்? அவன் முன்னிலையிற் கடிநகரும் கானகமுமொன்றே. விரைந்துசென்று ஸுமதியை யவள் குழவியுடன் தேரிலேற்றி நடுக்கானகத்தே யவர்களை நீத்துத் திரும்பிவருவாய். செல். செல்.

உக்ரஸேனன் :—அரசே! தம் பழைய வமைச்சர் தர்மமூர்த்தியார்க்கும் தமக்கும் தர்மோபதேசம் செய்துவந்த தர்மதேவதை தமது நாட்டை நீத்துக் கானகம் செல்கிறது. தங்களை யிதுவரையும் பற்றியிருந்து தங்களுக்குப் பௌருஷத்தையும் செங்கோலாட்சித் திறமையையும் கீர்த்தியையும் க்ஷேமத்தையு மளித்துவந்த தங்கள் ஆத்மசக்தி நாட்டை

விட்டுக் கானகம் செல்கிறது. தங்கள் நாட்டைத் தெய்வங்களுக்கு உறைவிட மெனக் கருதி மும்மலந்தீர்ந்த முனிவரும் அடிக்கடி யதைத் தரிசிக்கவரக் காரணமாயிருந்த ஒரு கற்பின் மடந்தை தமதுநாட்டை நீத்துங் கானகம் செல்கிருள். (மௌனம்.) இதுவரையுந் தங்கள் கட்டளைகளைச் சிரமேற்றவண்ணம் இப்பொழுதுந் தங்களதாணையைக் குறைவின்றி செய்துமுடிப்பன். ஈசன் உங்களேயும், என் அன்னையாரையும், அவர் தமிளங் குழவியையும் அருள்கொடு காப்பாராக! இதுவே தாங்களெனக்கிடும் கடைப்பணி. செல்கிறேன். (முழங்காற் படிவிட்டு எழல்) என் அன்னையார்மீது இவ்வரசர்க்கு வெறுப்புண்டாகச்செய்த கொடும் பாவிநாள்! நீங்கள் அனைவரும் இவ்வுக்ரஸேனன் பழிவாங்குதலுக்கு நடுங்குங்கள். உலகம் நசிப்பினும் இவ்வுக்ரஸேனன் வாயுரை நிற்கும். (செல்லல்)

அங்கம் 2.

களம் 5.

(ஸுமதியின் அந்தப்புரம்.)

ஸுமதி :—(நோயின் கொடுமையாற்ருது தத்தளித்துக்கொண்டிருக்கும் குழவியை நோக்கியவண்ணம்) ஆ! என் கண்மணி! என்ன கஷ்டமடா இது ?

நீலாம்பரிக்கண்ணிகள்—தாளம், ஆதி.

1. என்தனையா என்புதல்வா உந்தனையா னிப்புவியில்
வெந்தனையாய்ப் பெற்றெடுத்தேன் சிந்தைமிக நொந்திடவே

2. சிந்தைநொந்தே யுந்தன் தந்தை தந்தனர் வெகுமருந்தை
தந்தமருந்துந் தனுடல் எந்தவிதம் உண்டதுவோ.

3. உண்டவுடல் வெந்திடவே கண்டாருளம் நைந்திடவே
தண்டனையைத் தந்திடவே பண்டைவினை வந்ததுவோ

4. முற்பகலிற் செய்தவினை பிற்பகலிற் காணுமென்பர்
முற்பிறப்பில் நீ என்செய்தாய் இப்பிறப்பிற் நீநோய்காண.

என்செல்வனே! நீ நீடித்த நோயினுல் படுங்கஷ்டத்தைப் பார்த்துக்கொண்டே யிருக்க என் இருகண்களும் என்ன பாவம் செய்தனவோ! என் பாழ்த்தமனம் ஏன் இன்னம் வெடிக்கவில்லை?

(உக்ரஸேனன் பிரவேசம்.)

உக்ரஸேனன் :—ஹா ! என் அன்னையே! (வீழ்தல்.)

ஸுமதி :—(ஓடிவந்து) ஹா ! என் கண்மணி ! குழந்தாய்! உக்ரஸேனா ! (தூக்கி யுட்காரவைத்தல்) ஏனடா உனக்கு இக்கொடுந்துயரம் ? ஈசா! என்ன கஷ்டகாலமிது! கண்மணி! ஏனடா உன்முகம் அதிகவாட்ட முற்றிருக்கிறது? உன் வீரமனத்தைக் கரைந்துருகச் செய்தவர் யாரடா என் அன்பனே ? என்செய்வேன் ! ஐயோ ! இக்கொடும்பாவி படுந்துயரை நினைந்துவாடுகின்றனையோ ? ஹா ! என்மனம் பதைக்கின்றதே! அந்தோ! ஏனடா உன்கண்களில் நீர் ததும்புகின்றது ? என்னருமைப் புதல்வ! அமேல். உன் வருத்தத்தின் காரணம் என்ன ? சீக்கிரம் தெரியப்படுத்து.

உக்ரஸேனன் :—அரசாணை......(அலறுகிறான்)

ஸுமதி :—அரசர் யாது கட்டளையிட்டார் ? சீக்கிரம் சொல். அரசர் கோபத்துக்கு எப்படி நீ யாளானாய் ? காலநேமியாரை யாதேனும் இகழ்ந்துகூறினையா ? அந்தோ! இப்பொழுது நமக்குக் கஷ்டகாலமாதலின் அரசரிடம் நீ மிகவும் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டுமென்று யானுனக்குக் கூறவில்லையா? அரசருடைய கட்டளையென்ன? நீ இந்நகரைவிட்டுச் செல்லவேண்டுமோ? வாய்திறந்துசொல். இதோ யான் அரசரிடத்துச்செல்கிறேன். அரசர் எங்கிருக்கிறார் ? யான் சென்று அவரைச் சாந்தப்படுத்துகிறேன். என்வேண்டுகோளை அரசர் எப்பொழுதும் மறுக்கார் என்பதை நீயறியாயா ?

உக்ரஸேனன் :—ஆ !......என்னால் பொறுக்க முடியவில்லையே அம்மணி! நீர் ஏன் என்னை வளர்த்தீர்? அரசாணை என்னைப்பற்றிய தன்றே! தங்களைப்பற்றிய தன்றோ! தங்களைப்பற்றி யன்றோ யான் வருந்துகிறேன்!

ஸுமதி :—என்ன ? என்னைப்பற்றியதா ? ஆ! இதற்காகவா நீ கவலைப்படுகிறாய் ? என்செல்வனே! கவலை விட்

டொழி. அரசராணை எதுவாயிருப்பினும் அக்கட்டளையை நிறைவேற்ற நாம் யாவரும் கடமைப்பட்டவரன்றோ? அரசர் உன்வாளால் என்னை இருதுண்டாக்கிவிடும்படி யுத்தரவிட்டிருந்தபோதிலும் யானதை மனமுவந்து அங்கீகரிப்பேன். தற்கொலை புரிந்துகொள்ளும் பாபத்தினின்று அரசர் என்னை ரக்ஷித்ததாகக்கொள்வேன். என்னுடல், பொருள், ஆவி, யாவும் அவரதன்றோ? இதைப்பற்றி என் கவலைப்படுகிறாய்? சீக்கிரம் சொல். அரசாணை யதுவா?

உக்ரஸேனன் :—ஹா! என்ன கடுஞ்சொற்கள்? எப்படி யான் ஸஹிப்பேன்? எப்படிக் கூறுவேன்? நாவெழவில்லையே! அந்தோ! நான் ஏன் பிறந்தேன்? ஏ பொறுமையினுருவே! கற்பின் களஞ்சியமே! தேவி! ஹா! (அழல்)

ஸுமதி :—குழந்தாய்! அழேல். கண்ணே! அழேல். என் கண்மணி! ஏனடா கதறுகின்றாய்? ஐயோ! என்ன செய்வேன்! உன் வருத்தத்தாலன்றோ என்னை யதிகமாக வருந்தச் செய்கிறாய். சிக்கிரம் சொல்லமாட்டாயா? நீ வீரனன்றோ?

உக்ரஸேனன் :—அம்மணி! தாயே! தங்களைத் தங்களிளங் குழவியுடன் தேரிலேற்றி.........நடுக்காட்டில் விட்டுத் திரும்பும்படியன்றோ.........ஹா!.........

ஸுமதி :—இதுதானா உக்ரஸேனா? இதற்காகவா குழந்தையைப்போல் கதறுகின்றாய்? உன்மேல் தவறில்லை. உன்னை வளர்த்த காலங்களில் என்னையுமறியாது பெண்தன்மையையு முனக்கு யானதிகமாகப் போதித்திருக்கவேண்டும். இவ்வற்ப விஷயத்திற்காகவா கலங்குகிறாய்? எனக்கும் சில நாட்களாய் இந்நகர வாஸத்தை விட்டுக் காட்டகம் செல்ல வேண்டுமென்ற விருப்பம் அதிகரித்துக்கொண்டே வருகி

றது. அரசாஜ்ஞையும் அதுவேயாதலின் எனக்கது மிகவும் ஸந்தோஷமே.

உக்ரஸேனன் :—கொடிய விலங்குகள் வஸிக்கும் கோரமான வனத்தில் தாங்கள் குழவியுடன் எப்படி வஸிப்பீர்கள்?

ஸுமதி :—குழந்தாய்! 'அவனன்றி யோரணுவுமசையாது' என்பது உனக்குத் தெரியாததன்று. தற்காலம் அரண்மனைவாஸம் கானக வாஸத்தைக்காட்டிலும் எனக்குக் கோரமாகத் தோன்றுகிறது. இதோ புறப்படுகிறேன். சீக்கிரம் உன் தேரைக் கொண்டுவா. வருந்தாதே. (உக்ரஸேனன் சிறிது நேரம் ஆழ்ந்து யோசித்துச் செல்லல்) இக்கஷ்டத்தை யான் எவ்விதம் ஸஹிப்பேன்? என் பிராணன் ஏன் இன்னம் நீங்கவில்லை? ஹா! என் வினைப்பயனன்றோ கருணாமூர்த்தியாம் அரசரையுங் கன்மனத்தராக்கியது! அரசர் ஏன் இவ்விதம் பணித்தார்? என்னருங் குழந்தாய்! உன்பொருட்டாயினு மரசர் இரங்கிடலாகாதா? என் செய்வேன் ஈசா! (மௌனம்) யானிவ்விதம் துயருறுவதை யுக்ரஸேனன் காணின் என்பொருட்டவன் அடாத கருமமும் செய்யத் துணிவன். இவ்விராஜ்ஜியத்தையே சின்னபின்னப்படுத்திவிடுவன். அரசர்க்கும் ஆபத்து நேரிடக்கூடும். ஆதலால் என் துயரை யான் வெளிக்காட்டாது உள்ளடக்கி அவனையு மடக்கிச் செல்லல் வேண்டும். மனமே! பொறையைக் கைக்கொள்! ஈசா! தாங்கள் ஸர்வாந்தர்யாமியாதலின் தாங்களிராத இடமொன்றில்லை. யான் கானகம் செல்வதற்கு ஏன் வருந்தல் வேண்டும்? இதோ தங்கள் துணையில் தங்கியிருக்க வருகிறேன். யான் அகதியாதலின் என்னைத் தாங்கள் கைவிடீர். பிராணபதி! தாங்கள் என்னைக் கானகம் செல்லப் பணித்தீர். யானதை என் கடமையாகக் கருதிச் செல்கிறேன். தங்களைப்பற்றியே யான் வருந்துகிறேன்.

ஈசன் என்பொருட்டுத் தங்களையுங் காத்து ரக்ஷிக்கக் கடவர். ஏ ஜகஜ்ஜனனி! இதோ புக்ககந்துறந்து பிறந்தகத்திலென் இளங்குழவியுடன் சிறிதுகாலம் உன் காப்பில் தங்கியிருக்க வருகிறேன். தாயே! இதோ வருகிறேன்! என்னைக் கைவிடாது காப்பதுன் கடமை. (செல்லல்)

அங்கம் 2.

களம் 6.

இடம்—*அரண்மனையைச் சார்ந்த நந்தவனம்.*

ப்ரேமாவதியின் பிரவேசம்.

பிரேமாவதி :—*ஸுமதி குழவியுடன் கானகத்தில் மறிக்க வென்றன்றோ யானிதகா றுமுயன்றது? உக்ரஸேனனு மவளுடன் செல்லின் எவ்விதமாயினு மவர்களைக் காத்து ரக்ஷிப்பன். இதற் கென் செய்வது? (மௌனம்) உக்ரஸேனன், இவைகள் யாவும் என் சூழ்ச்சியாலே நடந்திருக்கவேண்டு மென்று சந்தேகங்கொண்டிருக்கிறான். காலநேமியார் அரசர்க்குக் கூறியவைகளிலிருந்தே இவ் வைய மவன் மனத்திற் றோன்றியிருத்தல்வேண்டு மென நினைக்கின்றேன். பிரளயகாலருத்திரனைப்போற் சீற்றங்கொண்டுள்ள அவன் முகத்தைக் காண்பது மெனக்கு அச்சத்தை யுண்டாக்கு கிறது. அவன் கூர்மையான பார்வை என் சூழ்ச்சியை யறிய வென்று என்னுள்ளத்தையு மூடுருவிச் செல்வதாய்த் தோன்றுகிறது. என்செய்வேன்? அறிவிலி யான் உக்ர ஸேனனைப்பற்றி இதுவரையு மேன் கருதா திருந்தேன்? (மௌனம்) காலநேமியாரு மவன் பெயருச்சரிப்பிலே நடுங்குகின்றன ரெனின் யானவனைப்பற்றி அச்சங் கொள்வது அதிசயிக்கத்தக்கதன்று. அவனு யிருடனிருக்கு மளவும் ஸுமதியையும் அவள் குழவியையும் நெருங்க இயமனு மஞ்சுவன். உக்ரஸேனனுக் கஞ்சியே யானளித்த*

விஷமும் அவர்களைக் கொல்லா தொழிந்ததுபோலும்? (மௌனம்) அவன் இறந்தாலன்றி என் கருமம் சிறிதும் கைகூடாது. (சிறிதுநேரம் யோசித்து) அவனுக்கும் விஷ மளித்திடின்......ஆ! இது நல்லயோசனை. ஆயின் அஃது எப்படிக்கூடும்? (சுற்றிப்பார்த்து) அதோ வருவது யார்? தாத்ரி; ஸுமதியின் பணிப்பெண். கரத்திலேதோ எடுத்துச் செல்கிறாள். (தாத்ரி நெருங்கல்) தாத்ரி! என்ன அவஸரம்? எங்குசெல்கிறாய்?

தாத்ரி :—அம்ம! இச்சிற்றுண்டியை யுக்ரஸேனனுக் களிக்குமாறு ஸுமதி ராணியாரின் கட்டளை.

பிரேமாவதி :—தாத்ரி! எனக்கோருபகாரம் செய்ய மாட்டுவையா இப்பொழுது? சித்ரரேகையின் அந்தப்புரம் சென்று அவளை யானழைப்பதாய்க் கூறி வந்துவிடின் போதும். இயலுமோ? என்ன?

தாத்ரி:—அதற்கென்ன. அவ்விதமே செய்கிறேன். இதைச்சற்றே யான் வருமளவும் பார்த்துக்கொண்டிருங்கள்.

பிரேமாவதி:—அவ்விதமே செய்கிறேன். சீக்கிரம் வந்துவிடு. (தாத்ரி செல்லல்) இதுவே தக்கஸமயம். என்னிட மிருக்கும் விஷத்திற் பெரும்பகுதியை இவ்வுண்டியிற் கலந்து விடுகிறேன். (அவ்விதமே கலத்தல்) இனி உக்ரஸேனன் அவசிய மிறக்கவேண்டியவனே! இவ்வுண்டியிற் சிறிதளவே யவனுட்கொளினும் போதுமானது. இவ்வெஞ்சிய விஷம் இனிச் சித்ரரேகைக்கே. சித்ரரேகா! சிறிதுகாலம் நீ உயிர்வாழ்ந்திருக்கலாம். நாளை பிரேமாவதியின் ஸுகத்தில் குறுக்கிடமுயல்வையேல் உன்விஷத்தை நீ உருசி பார்ப்பாய்! இதோ தாத்ரியும் வருகிறாள்.

தாத்ரி :—அம்மணி! சித்ரரேகை ராணியாரை அந்தப் புரத்திற் காண்கிலேன்..

பிரேமாவதி :—உனக்கு வீணில் சிரமந்தந்தேன். நல்லது. நீ சென்றுவா. யானே யவளைத்தேடிச் செல்கிறேன். (தாத்ரி உண்டியை எடுத்துச்செல்லல்) பிரேமாவதி! உன் சக்தியை நீயே இதுகாறுமறிந்திலை! இவ்வுலகிலுனக் கொப்பார் யாவருமிலர்! இத்தகைய தீச்செயல்களுக்கும் துணைபுரியு மீசனை உலகத்தோர் ஏன் நல்ல தெய்வமெனக் கொண்டாடுகின்றனரோ வறியேன். (செல்லல்)

அங்கம். 3.

களம். 1

இடம்—பயங்கரவனம்.

காலம்—பிற்பகல்.

ஸுமதி :—ஆ! என்னருமைக் குழந்தாய்! கண்மணி! நீ எனடா என்னுதரத்திற் பிறந்தனை? (பாடுதல்)

இராகம், பிலஹரி ப்யாக் : தாளம், ரூபகம்.

பல்லவி.

என்மைந்தா என்புதல்வா
என்வயிற்றி லேன்பிறந்தாய். (எ)

அநுபல்லவி.

கந்தன் தந்தை தன்தலையுறை
இந்துகுலம் தழைத்தோங்க. (எ)

சரணம்.

மந்தபாக்யம் தந்ததன்றோ
இந்தநோயுட லந்தன்னை
உந்தைவனு னைப்பிரிந்தார்
தந்தையல் யானென்றன்றோ. (எ)

நீ இந்துகுலத்தைத் தழைத்தோங்கச்செய்ய வந்தவனுயின், சித்ரரேகையின் உதரத்திலாவது ப்ரேமாவதியின் கர்ப்பத்தி

லாவது தோன்றியிருத்தலாகாதா! அந்தோ! என்வயிற்றில் தங்கியதாலன்றே, நோய்பற்ற, அரசர்வெறுப்புக்கு நீயு மாளானுய்! (உக்ரஸேனனை நோக்கி) குழந்தாய்! உக்ரஸேனு! அரசர்கட்டளையின் முற்பகுதியைக் குறைவின்றி இயற்றி முடித்தனை. இனி நீ யரசரிடம் திரும்பிச்சேர்வையாயின், அக்கட்டளையின் பிற்பகுதியையும்செய்து முடித்தவனுவாய்.

உக்ரஸேனன் :—அம்மணீ! தங்களை இவ்விடம் குழந் தையுடன் தனியே விடுத்தோ என்னைத் திரும்பிச்செல்லச் சொல்கிறீர்கள்? நன்றே நீர்கூறுவது! இவ்விஷயத்தில் அரசர் கட்டளையேயன்றி அரனின்கட்டளையையும் மறுத் திடுவேன். என்வேண்டுகோளைத் தாங்கள் மறுக்காதீர். தங்களுடன் தங்கியிருந்து, தங்களைக் குழவியுடன் பாது காக்கும்பொருட்டே இக்கட்டளையை யான் ஏற்றுக் கொண்டேன்.

ஸுமதி :—என் கண்மணீ! யான் கூறுவதைச் சிறிதே செவிகொடுத்துக் கேள். கருவையுண்ணும் வைரப்புழுக் கள் கோடிக் கணக்கினவாய்ச் சரீரத்திலிருப்பினும், அவை களுண்ணுதவாறு நம்மைக் கர்ப்ப வாஸத்திற் காத்து இப்புவியில் பிறக்கச்செய்தவன் இப்பொழு தெங்குசென் ருன்? கருவுயிர்த்த காலந்தொட்டு இதுவரையும் சரீரத் திற்குப் பற்பல வகைகளில் சத்ருக்களாம் விஷஜந்துக்களி னின்றும் கொடுநோய்களினின்றும் இறவாதிருக்கக் காத்து ரக்ஷித்தவன் இப்பொழுதெங்கு சென்ருன்? எனக்கு நோய் பற்ற, அதன்பொருட்டு யான் ஊணுறக்கம் சற்றேனு மின்றித் தபித்துக்கொண்டிருக்கும் இவ்வெட்டுமாத காலமாய்ச் சரீரத்தினின்று உயிர் பிரிக்கப்படாமலிருக்கக் காத்துவரு பவன் இப்பொழு தெங்கு சென்ருன்? பால் பருகுதலின் றியும் உறக்க மின்றியும் நோயாற் பீடிக்கப்பட்டு இடை

விடாது கதறிக்கொண்டிருக்கும் இக்குழந்தையை மறித்திடாவண்ணம் இவ்விரண்டுமாத காலமாய்க் காத்துவருமீசன் இப்போதெங்கு சென்றான்? என் செல்வனே! என் பொருட்டும் இக்குழந்தையின்பொருட்டும் சற்றும் நீ வருந்தற்க. ஈசனது காக்கும் முறையோ பரம ரஹஸ்யமானது. ஒரு தாயைக் குழவியினின்று பிரித் தெடுத்துச் செல்லுமுன், அவன், அத்தாய்க் குணத்தைக் குழந்தையின் பொருட்டுப் பலரிடத்தும் பகுந்து கொடுத்துவிட்டே செல்கிறான். அங்ஙன மிராதிருப்பின், பார்ப்போரனை வருமக்குழவியை 'அந்தோ! தாயில்லாக் குழந்தையாயிற்றே' என்று நினைத்து அதன்பாற் கருணை கொள்வதற்குக் காரணம் உளதோ? 'அகதிக்குத் தெய்வமே துணை' என்னும் ஆன்றோர் வாக்கியம் நீ கேட்ட தில்லையா? ஆதலின், உக்ரஸேனா! நீ இங்கிருந்து கடவுளினளவிடாக் கருணைக்கு யான் ஆளாதலிற் குறுக்கிடாதே. மற்றும் உன்னைப்போன்றோர் நம் நகரத்தில் தற்காலம் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஆகையால் என் சொல்லை நீ மறுத்திடாது நகரம் சென்று அரசர்க்குச் சமயோசித நற்போதனைகள் கூறிக்கொண்டு நாட்டைக் காத்துவருவாய். எழுந்திரடா என் கண்மணி! ஐயோ! ஏன் மௌனமாயிருக்கிறாய்? குழந்தாய்! உக்ரஸேனா! (அசைத்துப் பார்த்தல்) ஐயோ! இஃதென்ன மூர்ச்சா நிலைபோலிருக்கிறதே! (அவன் சிரத்திலும் முகத்திலும் நீர் தெளித்து வாயிலும் சிறிது நீர் விடல்) என்ன? நீரும் செல்லவில்லையே? ஹா! மூச்சும் நின்றிருக்கிறதே! நாடியோட்டமுங் காணேனே! இறந்தனனே! ஹா!......உக்ர ஸேனா! இறந்து விட்டனையே! ஏனடா இறந்தாய்? என் செல்வனே! என்னை விட்டு நீங்கேன் என்றனையே! இப்பொழுது எப்படியடா நீங்க மனம் வந்ததுனக்கு? யாரடா உன்னைப்

பிரித்தார்கள்? என்னுடன் காட்டில் தங்கிவிடத் தீர்மானித்து வந்தனையே! யான் உன்னைத் திரும்பிச் செல்ல வற்புறுத்திய தால் ஆறுத் துயர் பற்ற இறந்தனையோ? மஹாபாபி யான் உன்னை வளர்த்திராவிட்டால் நீ இறந்திருக்க மாட்டாயடா! (புலம்பல்)

இராகம், ஸிந்துபைரவி: தாளம், ஆதி.

1. மாண்டனையோ டா மைந்தா உக்ரஸேனு
ஆண்டானருளிது வோ வன்பனே என்செய்வேன் (மா)

2. மங்களாபுரிதன்னை மகிழ்வுடன் காக்கவென்றே
செங்கைநீராட்டினேனே சென்றனையே மைந்தா (மா)

3. வளர்த்திட்டதாய்தந்தையர் வகையுடனீண்டிருக்க
விளைத்திட்டதீவினையின்விளைவோ நீமாண்டதுவும். (மா)

ஹா! ஏன் செய்வேன்! என்செல்வனே! என்னைக் காக்கு மெண்ணத்துடன் கானகம் வந்த உந்தன் சரீரத்தைக் காத் திருக்கும்படி ஈசன் என்னை வைத்திட்டனனே.! (மௌனம்) என்செய்வேன்! உனக்குரிய ஈமவிதியை யாரடா வியற்று வார்கள்? உன் சரீரத்தை நாட்டிற்கனுப்பிவைத்தால் வெகு ஆடம்பரத்துடன் நகரவாஸிகள் அடக்கம் செய்வார்களே! தேரில் வைத்துக்கட்டிக் குதிரைகளைப் பூட்டி இரதத்தைத் திருப்பிவிடலாமென்றாலோ, அதற்கும் சக்தியற்றவளாயிருக் கின்றேனே! என்செய்வேனடா என்கண்மணீ! ஹா! உக்ர ஸேனு! என்னை நீயும் தவிக்கவிட்டனையே! இக்கொடுந்துயரம் யான் எவ்வாறு ஸஹிப்பேன்! ஹா! உக்ரஸேனு! ஹா!ஹா! (மூர்ச்சித்தல்)

பிங்களை :—(பாடிக்கொண்டு ப்ரவேசம்)

இராகம், காபி: தாளம், ரூபகம்.

1. அந்தணுள எந்தனுள வந்தமாதவ
தந்தேனுளத்வந்த்வமான எந்தனுடையான் (அ)

2. எங்குசென்றீரெந்தனை இங்கேங்கவிட்டுமே-நீர்
தங்கிச்சென்றதலமுங் காணேனங்கிங்கெங்குமே (அ)

3. இரிந்தலைந்திடவென்னுள்ளம் கரைந்துவாடிட
வருந்தவைத்தலந்தமோ பெருந்தவத்தோரே (அ)

இவ்விரண்டு மாதகாலங்களாய்ப் பற்பலவிடங்களில் தேடிப் பார்த்தும், என் நாதரைப்பற்றியாவது சிவயோகியாரைப் பற்றியாவது யாதொரு விஷயமும் யான் அறிந்திலேன். இன்று இக்கானகத்துள்ளும் தேடிப்பார்த்து வருகிறேன். ஈசன் எப்பொழுது கடைக்கணிப்பாரோ வறியேன். ஆ! இஃதென்ன ! இந்நடுக்காட்டில்! யாரிவர்கள் ! இம்மனிதன் ! (சமீபத்திற் சென்று பார்த்து)இறந்து கிடக்கிறுன்! அதோ! ஒருபெண்பால் இளங்குழவியுடன் கிடக்கிறுள்! (சமீபத்திற் சென்று ஸ்பரிசித்துப்பார்த்தல்) ஐயோ! மூர்ச்சாநிலை போல் தோன்றுகிறதே! (தன்னிடத்துள்ளஜலத்திற் சிறிது அவர்கள்மீது தெளித்து மூர்ச்சைநீக்கல்)

ஸுமதி :—(எழுந்து கண்விழித்துப் பார்த்து) ஹா! உக்ரஸேனு! என் செய்வேனடா! என்பிராணன் ஏனின்னமும் போகவில்லை? (பிங்கலையைப் பார்த்து) என்முன்நிற்பது யார்? பெண்பாலாய்த் தோன்றுகிறுள். உலகத்தை வெறுத்த நிலையிற் காணப்படுகிறுள். அம்ம! தாங்கள் யாரோ?

பிங்கலை :—தாயே! யானும் தங்களைப்போன்ற ஒரு ஸ்திரீயே. தாங்கள் அரசவம்சத்தினராகக் காணப்படுகிறீர்கள். தங்கள் ஸமீபத்தில் ஒருவர் இறந்து கிடக்கின்றனரே.

அவர் யார்? அருகாமையில் இருக்கும் இரதம் தாங்கள் ஏறிவந்ததாகக் காணப்படுகின்றதே. தாங்கள் இக்கொடுங் கானகத்தை யுத்தேசித்து வரக் காரணமென்ன? தாங்களு மிக்குழவியும் நோயின்கொடுமையால் வாட்ட முற்றிருப்ப தாய்க்காண்கிறேன். தங்களுடைய வரலாறு ஸவிஸ்தார மாய் யானறியற்பாலதோ?

ஸுமதி:—ஏ வத்ஸே! நீ நினைத்ததுபோல் நான் அரச குலத் துதித்தவளே. தற்காலம் யானும் என் மகவும் அநுப விக்கும் கொடிய நோய் காரணமாக, வெறுப்பதிகரித்தமை பற்றி, எங்களைக்காட்டில் விட்டுவர உத்தரவிட்டார் என் நாதர். இதோ என் முன் இறந்து கிடப்பவன் என்னல் சிசுப்பருவம் தொட்டுத் தாய் தந்தை யரிழந்தமைபற்றி வளர்க்கப்பட்டவன். என் நாதருடைய ஸேனுபதி. தன்னுற் கூடிய வளவு அரசரைத் திருப்ப முயன்றும் பயன்படாத தால், அரசர் கட்டளையைக் குறைவற வியற்றிப் பின்னர் இக் காட்டகத்தே என்னுடன் வஸிக்கும் தீர்மானத்துடன் வந்தவன். நான் மாஹாபாபியானதால், திடீரென ஒரு கார ணமு மின்றி மரணமடைந்தான். தாங்கள் சற்றே யுதவி செய்வீராயின், இவனது சரீரத்தை தேரிற்கட்டிக் குதிரை களைப் பூட்டித் திருப்பிவிட்டால், அவைகள் நாட்டிற்கு இரதத்துடன் போய்ச்சேரும்.

பிங்களை:—அம்மணி! தங்கள் உன்னத ஸ்திதியையும் தற்காலம் தாங்களிருக்கு நிலைமையையும் யோசிப்பின், உல கத்தில் இதைவிடக் கஷ்டமநுபவிப்பவருண்டோவென நினைக்கவேண்டி யிருக்கிறது. இக்காலம் தங்களுக்குதவி செய்ய ஈசனென்னை இங்கனுப்பினராதலின், அவர்க்கு என் மனமார்ந்த வந்தனம் செலுத்துகின்றேன். (இருவரும் உக்ர ஸேனன் சரீரத்தை இரதத்திற்கட்டிக் குதிரைகளைப் பூட்டி விடலும் இரதம் மங்களாபுரியை நோக்கிச்செல்லலும்)

ஸுமதி :—ஹா! உக்ரஸேனா! உக்ரஸேனா! என் குழந்தாய்! உன் தந்தையிடம் செல்கின்றனையோ! (வீழ்தல்)

பிங்களை :—(ஸுமதியைத் தன் கரங்களால் தூக்கி எடுத்து ஆச்வாஸப்படுத்தி) அம்மணி! இறந்தவரை நினைந்து வருந்துவதிற் பயனென்ன? துயரொழியுங்கள். தாங்கள் மிகவும் களைத்திருக்கிறீர்களாதலின் என்னிடமிருக்கும் பழவர்க்கங்களிற் சிலவற்றைத் தயைசெய்து உட்கொள்ளுங்கள். குழந்தைக்கும் பழரஸத்தைச் சிறிது உதவுங்கள். பிறகு நாம் குழந்தையுடன் இக்கானகத்தை நீத்துச்செல்வோம்.

ஸுமதி :—ஏ உத்தமீ! யானும் உண்டிகொள்ளவேண்டுமோ? எனக்கு ஒன்றும் வேண்டாம். குழந்தைக்கு மட்டிலும் சிறிது பழரஸமுதவின் போதுமானது.

பிங்களை :—என் வேண்டுகோளைத் தயைசெய்து மறக்காதீர். தாங்கள் இதுவரையும் பசிதாகத்தின் கொடுமை இன்னதென அறியீர். இக்காட்டில் நாம் வெகுதூரம் செல்லவேண்டியிருத்தலால் சிறிதும் உணவின்றித் தாங்கள் இக்காட்டைக் கடக்க முடியாது. மேலும் இக்குழந்தையின் பொருட்டாவது தாங்கள் உயிருடனிருத்தல் வேண்டாமா? இது தங்கள் நாதரின் அடைக்கலப் பொருளன்றோ?

ஸுமதி :—நீ கூறுவதுண்மையே. ஆயினும் இப்பொழுது யானுணவைச் சிறிதும் வேண்டுவேனில்லை. அவசியமாயின் பிறகு உட்கொள்ளுகிறேன். தயைசெய்து மன்னிப்பாய்.

பிங்களை :—(ஸுமதியின் குழந்தையை எடுத்து) ஆ! இக்குழந்தையை எடுக்குங்கால் என்சரீரம் ஏன் சிலிர்க்கின்றது? ஏ இளஞ்சிங்கமே! நீ வளர்ந்து, உன்பொருட்டு ஆவியை வைத்துக்கொண்டிருக்கும் உனன்னையாரைக் காப்பாற்றுவையா? அவளை ஸந்தோஷப்படுத்துவையா? அவளை

யுன் தந்தையுடன் சேர்ப்பாயா? விவாஹம் செய்து கொண்டபின்னர், உன்மனைவியை எனைப்போலவும் உன் அன்னையைப்போலவும் தவிக்கவிடமாட்டாயே? (குழந்தையவளுடைய முகத்தையேறிட்டவண்ணம் சிரித்தல்) ஆ! சிரிக்கின்றனையா? இதோ சிரிக்கும் வாய்க்கு ஒரு முத்தம் தந்து பழாஸமுதவுகிறேன். (அவ்விதமே செய்தல். குழந்தை விடாச்சிரிப்புக் கொளல்) அம்மணி! ஆ! ஈதென்ன காட்சி? குழந்தை சிரிப்பதைப் பாருங்கள்! நாம் படும் பலவித கஷ்டங்களும் இக்குழந்தை சிரித்தலை நோக்குங்காலுண்டாகும் ஸந்தோஷத்தில் மறைகின்றனவன்றோ? ஈசா! உன் திறமையே திறமை!

ஸுமதி:—ஆ! இஃது ஆச்சரியத்தினும் ஆச்சரியம்! இக்குழந்தை பிறந்தது முதலாக இதுகாறும் சிரித்ததை யான் கண்டதேயில்லை. ஆதலினிப்போ ததுசிரிப்புக் கொண்டது உன் கரத்தின் மகிமை யெனவே கொள்வேன். ஏ புண்யவதி! இவ்விளம் பருவத்திலேயே நீ உலகத்தை வெறுத்திடக் காரணமென்ன? உன் சரித்திரத்தை யானறிய விரும்புகிறேன்.

பிங்களை:—தாயே! யான் கணிகையர் மரபிற்றோன்றியவள். என்னைப் பிங்களை யென்பர். மானமழிதலின் உயிர் விடுதலை மேலதாய்க்கொள்ளும் இம்மாநிலத்தின்கண், உயிர் வாழ்க்கையின்பொருட்டு மானத்தை விற்றுண்ணும் போக்கினராம் என்குலத்தையலார் நடத்தைகளை முற்றிலும் வெறுத்து, உலகம் உண்டுமிழ்ந்த ஓராடவனைத் துணைவனுக் கொண்டு, இல்லறம் அவனுடன் நடாத்தி, இப்புன்புலால்யாக்கையை மேன்மைப்படுத்தும் பேரவாக்கொண்டேன். யான் கன்னிப்பருவங் கடவாநிலையில் என் அன்னையும் இறந்தனளாதலின், என் தீர்மானத்தைக் கைப்பற்றியொழுகல் ஈசன்

திருவுளச்சம்மதமெனவறிந்தேன். யான் அவ்வாறிருக்குங்கால், அம்மணி!

கொண்டிச்சிந்து : தாளம், ஆதி.

அவந்திமா நகருறை வோர்—என்னையே
அந்தணர் குலத்துதித்தோர் மந்தா ரென்போர்
கற்பன வாங் கலைகள் பலக்—கசடறவே
கற்றகல்வியின் கரை கடந்தோரென
புவியுளோர் புகழ்ந்திடவே—பலவாண்டுகள்
கடந்திட வினைப்பயன் தொடர்ந்ததுவால்
கொண்டனர் நண்பரெனக்—கொடியர்தம்மைப்
பண்டுகற் றனயாவும் விண்டிடவே
நின்றனர் மாயைவசம்—நின்றிடவக்கால்
நீத்தனர் தாய்தந்தையர் கோத்திரத்தாரும்
தன்னிலை தானறிந்தே—தனித்தவரும்
வருந்திடக் கண்டேயானும் கரைந்துமனம்
கொண்டேனவர்மேற்காதல்—என் அன்னையே—
கொண்டேனவர் மேற்காதல்.

தாயே! அவரை எவ்வகையானும் இன்புறச்செய்தல்வேண்டுமென என்னுள்ளத்தே யுதித்த பேரவா ஒன்று நாளடைவில் நீங்காக் காதலாய் மாற, அவர்க்கு அதுகாறுமான்மகற்றீண்டாத என்யாக்கையை மனமுவந்து அர்ப்பணம் செய்தேன்.

ஸுமதி :—தற்காலம் எச் சம்பவம் உன்னை இந்நிலைக்கு ஊழ்த்தியதோ?

பிங்களை :— என் நாதரை யொரு கொடு நோய் பற்றியது. எழுந்திருக்கவும் சக்தி யற்றிருந்த அவரைச் சொஸ்தப்படுத்த மணி மந்த்ர ஔஷதங்கள் யாவும் பயனில வாயின. இறுதியில் சிவயோகியரொருவர், தமது திருவருளால், ஒரு

நொடிப்பொழுதில் சொஸ்தப்படுத்தினர். ஆயின், நிம ென கழிவிரக்கக் கிளர்ச்சி என் நாதர்க்கு மிகவு முண்டாக, மறைந்த அவ் யோகியரை எவ்விதமாயினும் மீண்டடைந்து மன வமைதி பெறல் கோரி, அவரைத்தேடிப் புறப்பட்டார். அவர் என்னைப் பிரிந்து சென்று ஒருவருடத்திற்கு மேலா கியும், திரும்பி வாராததால், அவரைத் தேடியடைய யான் புறப்பட்டேன். இதுவரையில் அவரைப்பற்றி யாதும் அறிந்தேனில்லை.

ஸுமதி :—குழந்தாய்! செல்வியே! உன் கற்பின் மஹி மையை யாதெனக் கூறுவேன்! உனக்கு நிகர் நீயே யன்றி வேறொருவ ரிலர். உன் திருக்கர ஸ்பரிசத்தின் மஹிமை என் குழந்தையை ஸந்தோஷிக்கச் செய்தது ஓர் ஆச்சர்ய மன்று. உன் சரித்திரத்தைக் கேட்போர் யாவரும் பவ பாசத்தினின்று நீங்குவர். உத்தமிகளுள் குத்தமியாம் உன்னை யான் காண நேர்ந்ததை என் கஷ்டம் நாளடைவில் நீங்கு மென்பதற் கறிகுறியாய்க் கொள்வேன். ஈசன் உன்னைத் தக்கபடி காவாராயின், கருணாநிதி யென்னும் பெயரை அவர் இழக்க வேண்டியவரே.

பிங்களை :—அம்மணி! பொழுது சாயுங்காலம் சமீபிக்கு முன் நாம், இக்காட்டை விட்டகன்று ஒரு நகரை யடைய வேண்டு மாதலின், புறப்படுவோம். எழுந்திருங்கள். யான் இக்குழந்தையை எடுத்து வருகிறேன். நீங்கள் என்னைப் பின்பற்றி வாருங்கள். (இருவரும் ஒரு சிறு நடைப்பாதை யை யணுகலும், சில வணிகர் அவ்வழியே செல்லக் காணலும்) தாயே! இதோ சில வணிகர் ஸ்வர்ணபுரியை நோக்கிச் செல்கின்றனர். அந்நகரின்கண் பத்மாகரனெனப் பெயரிய கோடீச்வரனொருவனுளன். மிகவும் தர்மிஷ்டன். வைச்ய குலத்துதித்தவன். லோகப்பிரஸித்தன். தாங்கள்

தங்கள் குழந்தையுட னங்கு செல்வீராயின், அவன் தங்களைத் தங்கபடி யாதரிப்பன். குறை யொன்றுந் தங்களுக்கு நேரிடாது. ஆகையா லவர்களைப் பின்பற்றிச் செல்லுங்கள். யான், அந் நாட்டிலு மென் நாதனைத்தேடிக் காணாததால், வேறு நாடு செல்கிறேன். ஈசன் தங்களுடைய கஷ்டத்தை சீக்கிரம் நிவாரணம் செய்வா ரென்று நம்புகிறேன்.

ஸுமதி :—உன்னுடைய கோரிக்கையும் நிறைவேறும் வண்ணம் கடவுள் கடாக்ஷிப்பாராக!

பிங்களை :—குழந்தாய்! யான் சென்று வருகிறேன். ஆ! அம்மணி! குழந்தை என் வஸ்திரப்பிடிப்பைவிடா திருக்கின்றதே! என்ன செய்வேன்! குழந்தாய்! உன்னை யான் எப்பொழுதும் மறப்பேனல்லேன். என்னை நீ மறக்க மாட்டுவையோ? (முத்தந் தந்து குழந்தையைச் சுமதியிடம் கொடுத்துத் தன் வழியே செல்லவும், ஸுமதி வணிகர் வழியைப் பற்றிச் செல்லவும்)

———

அங்கம் 3.

களம் 2.

இடம்—ஸ்வர்ணபுரி—பத்மாகரன் மாளிகை.

காலம்—மாலே.

மந்தகாமினி :—பிராணபதி! நம் வீதியில் கொடிய நோயால் பீடிக்கப்பட்ட பெண்பால் ஒருத்தி அவ்விதமே நோயுற்றிருக்கும் தன் சிறு குழவியைக் கரத்திலேந்திப் போவதும் வருவதுமாயிருந்தாள். அரசவம்சத்தினளாகக் காணப்பட்டாள். அழைத்து விசாரித்ததில், அவர்கள் அநுபவிக்கும் கொடிய நோய் காரணமாகத் தற்காலம் பந்துவர்க்கத்தினால் அவர்கள் கைவிடப்பட்டுத் தனிமையாய் ஆதரிப்பாரின்றித் தபித்துக்கொண்டிருப்பதாய்ப் புலப்படுகிறது.

பத்மாகரன் :—ப்ரியே! அத்தகையாரைக் காக்கவென்றன்றோ ஈசன் நமக்கு அளவிறந்த செல்வத்தையளித்துள்ளார்? அப்பெண்மணியைக் குழந்தையுடன் நம் மில்லத்துக் குடனே அழைத்து வருவாய். இதற்கென் அநுமதியும் வேண்டுமோ? சீக்கிரம் செல். (மந்தகாமினி செல்லல்) ஆதுரர்களே மனங்கோணு துபசரிக்கு மியல்பினளா மிவளே யான் இல்லத் துணைவியா யடைந்ததே என் பெரும்பாக்கியம். (ஸுமதி குழவியுடன் பத்மாகரன் ஸமுகம் வரலும், பத்மாகரன் தன தாஸனத்தை விட்டிறங்கி அவர்களே வரவேற்றலும்)

ஸுமதி :—(முழங்காற்படியிட்டு வணங்கிப் பாடுதல்)

இராகம், ஹரிகாம்போதி: தாளம், ஆதி.

பல்லவி

பாது காத்திடுமையா பரதேசி யான் தாயா (பாது)

அநுபல்லவி

கோதில் குணவுருவா கொன்றை யணிவேள்ப்ரியா (பாது)

சரணம்

1. ஏதும் வகை யறியேன் காதலன் கைவிட
பாதகியா மென் மனம் பதைக்குதேதென் செய்வேன் (பாது)
2. பூதலந் தன்னிலே புகலிட மொன்றின்றி
தாது கலங்கியே தவித்திடு மெந்தனை (பாது)
3. மாதிடப் பாகத்தோன் மாதேவ னருளாலே
ஓதும் புருஷார்த்தங்கள் ஒங்கிடு முமக்கே யால் (பாது)

ஈசனார்க் கன்பரே! உம்மை யான் சரணடைந்தேன். என்னையு மென் குழவியையுங் கைவிடாது தாங்கள் காத்தருளல் வேண்டும்.

பத்மாகரன் :—அம்மணி! தங்கள் வரவு என் பெரும் பாக்கியம். யான் தங்களை என் அருமைத் தாயாகவும், தங்கள் குழவியை என் பின் பிறந்தோனாகவும் கருதித் தொண்டு செய்துவரத் தாங்க ளென்னில்லத்தில் நிரந்தரம் வசித்துவரலாகும். தங்களுடைய கட்டளைகளைச் சிரமேற் றுச் செய்துவர இங்கு அநேகம் பணிப்பெண்களுளர். தங்களுக்குத் தனி விடுதி ஒன்றமைத்துத் தருகிறேன். தாங்கள் மேல்வருணத்தோராதலின், தங்களுக்கு வேண்டுவனவற்றை ஆதிவருணத்தவராம் எம்குருவின் மூலமாய்த் தாங்களடையச் செய்கிறேன். தங்களையும் தங்கள் குழவியையும் பற்றியிருக்கும் கொடுநோய் நீங்கப் பற்பல தேசங்களினின்றும்

மருத்துவர்களை வரவழைக்கின்றேன். அவ்வகையில் என் திரண்டசெல்வ முழுவதையும் தங்கள்பால் யான் செலவிடச் சித்தங்கொண்டுள்ளேன். என் உபசாரணைகளைத் தாங்கள் தயைகூர்ந் தங்கீகரித் தருளல்வேண்டும். யான் பிறந்தகாலத்துங் கொண்டுவாராததும், அவ்விதமே இறங்குங்காலத்து என்னுற் கொண்டு செல்ல வியலாததுமான இச்செல்வம் எங்ஙனம் எனதாகும்? பல்லோர் அநுபவித்தும் குறைவடையாத இத்திரண்ட செல்வத்தை யான் ஒருவனநுபவித்தலின் பொருட்டு ஈசன் அருளியதாகக் கொள்ளல் எத்தகைய வறிவீனம்! அவனருளிய இச்செல்வத்தை அநுபவித்தற் குரியராம் யாவர்க்கும் பகுந்தளிக்கும்பொருட்டே யான் அவனுடைய பணியாளாய் அமைக்கப்பட்டிருக்கிறேன். என்கடமையைக் குறைவற யான் செய்யேனுயின், அவன் முன்னிலையில் யானொரு பெருங்குற்றவாளியே யாவேன். அவனிடும் தண்டனையை யானடைய நேரிடும். அம்மணீ! தங்களநுபவத்திற் குரிய திரவியத்தை ஈசன் என்னிடத்தில் விட்டுவைத்ததே தாங்கள் இவ்விட மடைந்ததற்குத் தக்க காரணமாகும். இது நும்மில்லமே.

ஸுமதி :—தர்மபிரபுவாம் தங்களுக்கு எத்தகைய மறுமொழி யளிப்பதெனத் தெரியாது யான் தியங்குகின்றேன். எனக்குத் தாங்கள் புரியுமுதவியை ஈசன் தன தடியார்க்குச் செய்வதாகக் கருதித் தக்கவாறு தங்களை ரக்ஷிக்க அவருடைய திருவருளை யான் பிரார்த்திக்கின்றேன். என் நாதரின் அடைக்கலப்பொருளாம் இக்குழவியின்பொருட்டே இனி யான் உயிர் வைத்திருத்தல்வேண்டும்.

பத்மாகரன்:—மந்தகாமினீ! நம் அன்னையாரை யழைத்துச்செல். யான் நமது குருவினில்லம் சென்று வருகிறேன். (யாவரும் செல்லல்)

அங்கம் 3.

களம் 3.

இடம்—மங்களாபுரி—ப்ரேமாவதியின் அந்தப்புரம்.

காலம்—இரவு.

ப்ரேமாவதி:—(உக்ரஸேனனின் உருவந்தோன்ற) ஆ—அதோ—அதோ—வருகிறான்—வந்துவிட்டான்—ஐயோ—என்னபயங்கரம்—என்னகொடியதோற்றம்--ஐயோ--என்ன செய்வேன்—வந்துவிட்டானே—எங்கு மறைவேன்--யாவருமிலரோ—ஆ—உக்ரஸேனா--இல்லை--இல்லை—கொல்லாதே—கொல்—லா—தே— கூறிவிடுகிறேன் — ஆம்—நானேயளித்தேன்—விஷமளித்தவள்—யானே—உன்னைக்கொன்றதும்—யானே — மன்னிப்பாய் — கொல்லாதே — கொல்லாதே — (உருவம் ப்ரேமாவதி புட்டியில்வைத்திருக்கும் விஷத்தைக் குறிப்பிடல்) ஆம்—அது தான்—(உருவம் அதை எடுக்கச் செய்தல்) இதோ—எடுக்கிறேன்—(எடுத்ததும் உருவம் எஞ்சிய விஷத்தைப் பருகும்படி ப்ரேமாவதியை வற்புறுத்தல்) ஆ—ஐயோ—என்ன செய்வேன்—இதைப்பருக வேண்டுமா—பருகின் இறப்பேனே—மன்னிப்பாய்—உக்ரஸேனா—(உருவம் கோபத்துடன் ஈட்டியை ஓங்கிக்கொண்டு ப்ரேமாவதியை நெருங்கல்) குடித்தே—தீரல் வேண்டுமா—ஆ—குத்தாதே — இதோ—குடித்துவிடுகிறேன்— (விஷத்தைப்பருக உருவம் மறைதல்) ஹா ! இஃதென்ன ? விஷப்பாத்திரத்தைக் கரத்தில் ஏன் வைத்திருக்கின்றேன் ? இதிலிருந்த எஞ்சிய விஷமெங்கே? கீழே கொட்டிவிட்டேனா? சித்ர

ரேகைக் களித்துவிட்டேனே? இல்லையே! என் நா ஏன் கசக்கின்றது? வயிறு ஏனோ எறிகிறது? ஐயோ! விஷத்தை யானே குடித்துவிட்டேனே? (நாவைப் பார்த்தல்) ஹா! என்நா கறுத்திருக்கிறதே! யான் இறக்க யானே விஷத்தைப் பருகிவிட்டேனே! "கெடுவான் கேடு நினைப்பான்" என்னும் பழமொழி என்விஷயத்தில் உண்மை யாயிற்றே! இறக்கின்றேனே! ஹா! என் பொறாமையும் மாச்சரியமும் என்னையே யழித்து விட்டதே! என் செய்வேன்! உத்தமி ஸுமதிக்கும், தர்ம மார்க்கத்தை விட்டகலாத உக்ரஸேனனுக்கும் விஷமளித்தேனே! பொறுக்கத்தகாத பாபத்தொழில் புரிவார் அதன் பலனை இப்பிறப்பிலேயே அடைவர் என்பது எனக்கே நேர்ந்து விட்டதே! யானே என்னைத் தண்டித்துக் கொண்டேனே! தக்க தண்டனையே இது. ஆ! சித்ரரேகையன்றோ ஸுகமடைய விருப்பது? ஆ! மார்படைப்பதுபோ லிருக்கிறதே! என்செய்வேன்! அரசருக்குத் தெரிவிக்குமுன் இறந்து விடுவேனோ? இவ்விஷயத்தை யார் அரசரிடம் கூறுவர்? (வஜ்ரபாஹுவின் ப்ரவேசம்)

வஜ்ரபாஹு :—ப்ரேமாவதி! என்ன வெறிபிடித்தவளைப்போற் பிதற்றுகிறாய்? ஏதேனும் கெட்ட கனாக் கண்டனையா?

பிரேமாவதி :—ஹா! நாதா! இறக்கிறேன்! தெய்வச் செயலாய்த் தாங்களே நேரில் வந்துவிட்டீர்கள். எனக்குத் தக்க தண்டனையை யான் என் கையாலேயே யடைந்தேன்.

வஜ்ரபாஹு :—நீ கழறுவதொன்றும் எனக்கு விளங்கவில்லை; தெளியச் சொல். என்ன? உனக்குத் தண்டனையா? எதற்கு? நீ என்ன குற்றம் செய்தாய்?

பிரேமாவதி :—ஈசன் தங்கள்மீது பொழிந்த அருண் மாரி தங்கள் சிரஸில் வீழாதிருக்க என் பொறாமையாம்

குடையைத் தங்கள் சிரஸின் மேல் விரித்தேன். அதன் பயனே, இதோ, இன்றடைந்தேன். ஈசனருளா லிளமை மீட்டும் வரப்பெற்று மகப்பேறடைந்த உத்தமியாம் ஸுமதியைக் கருவுடனழிக்க வெண்ணி, இருவரிறக்கு மளவிற்கு விஷத்தை மருந்தெனக் கூறிச் சிறிது சிறிதாய் ஈந்தேன்.

வஜ்ரபாஹு :—ஹா! பாபி! சண்டாளி!

பிரேமாவதி :—நாதா! பொறுத்துக்கொண்டிருங்கள். விஷமாயினும் ஈசனருளை விலக்க வல்லதோ? அவ்விஷம் அவளையும் அவள் குழந்தையையும் கொல்லாது இருவர்க்குங் கொடிய நோயை விளைவித்தது.

வஜ்ரபாஹு :—ஆ! உக்ரஸேனா! நீ குறிப்பாகக் கூறியதன் உண்மையை யானறிந்துகொள்ளாது மூடனாயிருந்தேனே! (ப்ரேமாவதியை நோக்கி) த்ரோகி! பாதகி!

ப்ரேமாவதி :—ஐயோ! தெய்வமே! யான் இயம்புவதைத் தாங்கள் முற்றிலும் கேட்கலாகாதா? இறக்குந் தருவாயிலிருக்குமென்னைத் தாங்கள் வெறுத்த லழகோ?

வஜ்ரபாஹு :—பேயே! உன் தீச்செய லித்துடன் முடிந்ததன்று!

ப்ரேமாவதி:—பிறகு, யான் எப்படியாயினு மவர்களைத் தங்களிடமிருந்து பிரித்திடல் வேண்டி, அதற்கநுகூலமாகத் தங்களுக்குப் பற்பல போதனைகளைச் செய்தேன். காலநேமியையும் அவ்விதமே செய்யச் செய்தேன். தாங்களும் எங்களது சூழ்ச்சிக்குட்பட்டீர்கள். ஆயினு முக்ரஸேனனின் உதவியாலவர்கள் அடவியிலும் பிழைத்திருப்பார்கள் என்ற எண்ணத்துடன், அவன் கானகம் செல்லத் தேரைச் சித்தம் செய்யுமுன், ஸுமதி யவனுக்கனுப்பிய சிற்றுண்டியில் விஷங்கலந்தேன். அதை யவனுட்கொண்டானதலின், காடு சென்ற சில நாழிகையில் இறந்தான்.

வஜ்ரபாஹு :—ஹா! பாதகி! பெண்ணுருவாய் வந்த நமனே! உன் மனம் எப்படி இக்கொடிய கருமங்களைச் செய்ய உடன்பட்டது? ஐயோ! இக் கொலைகளுக்கு யானும் அறியாமல் உடந்தையாயிருந்தேனே! ஆ! ஸுமதி! உக்ரஸேனு! பரம ஸாதுக்களாயும், நிரபராதிகளாயு முள்ள உங்களை யானன்றோ, இப்பேயின் சூழ்ச்சிக்காளாய், நமனுல கனுப்பினேன்! பாபி! நீ எனக்கு மனைவியா? உன்னை இது காறு மிப்புவி ஏனோ சுமந்து வருகிறது?

பிரேமாவதி :—அரசே! ஈசனால் தண்டிக்கப்பட்ட என் மேல் தாங்கள் கருணை பாராட்டாது கடுஞ் சொற்களை யுபயோகித்தல் தங்கள் நிலைமைக் கழகன்று. அந்தோ! யான் ஏன் உமக்கிவைகளைக் கூறினேன்?

வஜ்ரபாஹு :—ப்ரேமாவதி! அஃதிருக்கட்டும். நீ இப்பொழுதெப்படி தண்டிக்கப்பட்டாய்? உன்னைப்போன் றார்க்குக் கழிவிரக்க மென்பதேது?

ப்ரேமாவதி :—நாதா! உக்ரஸேனனின் சரீரம் தேரில் கட்டப்பட்டு நம் நகரடைந்தது முதல், அவனுருவம், ஒவ் வோரிரவு மென்முன்றோன்றி, என்னைப் பயமுறுத்தி வந்தது. அவ்விதமே இன்றிரவும் நேர, என்னையு மறியாது, எவ்வி தமோ இப்பாத்திரத்திலுள்ள எஞ்சிய விஷத்தைப் பருகி விட்டேன். ஹா! மார்படைக்கின்றது! இறக்கிறேன்! அரசே! மன்னிப்பீரா? காலநேமியை இனியாயினும் நம் பல்வேண்டாம்!

வஜ்ரபாஹு :—ஹா! யானுமோரரசனு? என் கரத்தி லுள்ளதுஞ் செங்கோலா? உக்ரஸேனு! நீ இறந்தும் தண்டிக் கத் தக்கவர்களைத் தண்டித்தாய். நான் உயிருடனிருந்தும், உன்னுலிடித்திடித்துரைக்கப்பட்டும் அதர்மவழிப்பட்டேன். எனக்கினி யுய்யும் வழி யேது? ஈசன் என்னை இனி எங்ஙனம்

மன்னிப்பார்? ஆ! காலநேமி! சண்டாளா! த்ரோகி! உன் கபடம் இப்பொழுது வெளியாகிவிட்டது. இதோ உன்னைச் சிறையிடுகிறேன். ஹா! ஸுமதி! உத்தமீ! என்னைப் பற்றி நீ யாது நினைந்தனையோ! எப்படி யுன்மனம் நொந்ததோ! என் ஆத்மஜனையுங் கொன்றேனே! என் மனம் வெடித்திடவில்லையே! (மௌனம்) ஒருகால் ஸுமதியும் அவள் கான்முளையும் இப்பொழு தயிருடனிருப்பாராயின், என்பணியாட்களை விடுத்துக் காட்டகத்திலவர்களைத் தேடச் செய்கிறேன். (ப்ரேமாவதியை நோக்கி) பாபி! உன் மனம் கல்லோ? இப்பொழுது என் உடைவாளால் உன்னை ஏன் இருதுண்டாக்க லாகாது? (பாடுதல்)

இராகம், கேதாரம்: தாளம்: ஆதி.

பல்லவி.

பாபீ சண்டாளி பாதகீ—படுநீலி பேயே யடி (பாபீ)

அநுபல்லவி.

தாபத்திடைதனு காணமு மழிந்திட
பாபத் தொழில் புரிந்திட வுடன் படுத்தினை (பாபீ)

சரணம்.

தீபத் தொளியில் மதிமயங்கி யழியவிழும்
தீப்பூச்சி யெனவே தியங்கி யுன் வனப்பினில்
ஆபத்திது அழிவை அழிவை யென்ற ாற்றிய
மாபடைத் தலைவனு மாவி விடுத்திடவே
சாபந தவினள் கலாபமயில் நடைசல்
லாப மொழியினள் தனுவிக்கு மானுடன்
தாபித்துடல் முழுவதும் வ்யாபித்திடு நோயுடன்
சாபித்து யிர்துறக்க கோபித்தடவி விட்டேன் (பாபீ)

கொலைபாதகி! நீ புரிந்த இப்படுகொலைகளில் மதியிழந்து யானும் உடன்பட்டேனே! தெய்வ தண்டனையை நீ இப்பொழுதடைந்ததுபோல் யானும் அடையும் காலத்தன்றோ இப்பாவம் என்னைவிட்டு நீங்கும்!

ப்ரேமாவதி :—பிராணகாந்தா! என்னை மன்னித்த தாகக் கூறும். ஸுமதியை க்ஷேமமாய்க் காண்பீராயின், யானிறக்குந் தருவாயில் வேண்டிக்கொண்டதாகக் கூறி என்னை மன்னிக்கும்படிச் செய்யும். என் ஜீவனுக்கு அமைதி யுண்டாக்கும்!

வஜ்ரபாஹு :—பிரேமாவதி! ஈசன் உன்னைத் தக்க வாறு தண்டித்தன னாதலின், நான் இனி யுன்னை மன்னிப்ப தற்குத் தடையென்ன? உன் மனம் சாந்தியடையட்டும். பேதாய்! சித்ரரேகையும் இத் தீத்தொழிலில் சம்பந்தப் பட்டனளா?

ப்ரேமாவதி :—நாதா! சித்ரரேகை ஒன்று மறியாத வள். அவள் தடுத்துக் கூறிய சில மொழிகளை யான் அலக்ஷியம் செய்ததே இப்பொழு திவ்வாறென்னை இறக்கச் செய்வதாகும். ஆ! இதோ இறங்கிறேன்! பிராணகாந்தா! எங்கிருக்கிறீர்? என்னை முற்றிலும் மன்னித்தீரா? தாங்கள் என்னைக் கிட்டி வரலாகாதா? உம்முடைய அணைப்பில் யானிறக்கலாகாதா? உமது முழு மன்னிப்பை யானடைந்த தாக வென்னை யறியவிடும்! அரசே! இதோ! தங்கள் ப்ரேமாவதி! அணைத்துக்கொள்ளுங்கள்! (வஜ்ரபாஹு அவளைத் தன் இரு கைகளாலுந் தழுவி யணைத்தல்) ஐயோ! பிரிய மன மில்லாது தங்களை விட்டுச்செல்கிறேனே! (இறத்தல்)

அங்கம் 3.

களம் 4.

இடம்—ஸ்வர்ணபுரி—பத்மாகரன் இல்லம் (ஸௌமதியின் குழவி இறத்தலும், அவள் புலம்பலும்)

ஸமதி :—(புலம்பல்)

இராகம், பீலு: தாளம், சாபு.

பல்லவி.

எங்கவிட்ட கன்றனேயே எனரும் பாலா
எங்கேதான் சென்றனேயோ—எனரும் பாலா (எங்)

அநுபல்லவி.

தாங்கி யுடலந்தன்னில் பாங்கா யொன்பது திங்கள்
ஒங்க உந்தனைப் பெற்றேன் யான்—எனரும் பாலா (எங்)

சரணம்.

1. பெருமைப் படமுன் வாழ்ந்தேன் சிறுமைப்படப் பின்
தாழ்ந்தேன்—பொறுமைக் கடலுளாழ்ந் திட்டேன்—
எனரும் பாலா (எங்)

2. பாயும் வெறுத்திடவே நோயும் ஒறுத்த தன்னே
தாயும் வெறுத்திட்டனேயே—எனரும் பாலா (எங்)

3. தாவி யணைத்திட நீ கூவிய ழைத்திடாயோ
ஆவி துடி துடித்திட—வெனரும் பாலா (எங்)

ஹா! என் கண்மணி! நீ என்னை விட்டு எங்கேயடா சென்ருய்? உன்னைக் காக்க வென்றன்ருே யான் உயிர் வைத்திருந்தேன்? இனி எதற்காகவடா யான் இப்புவியி லுயிருடனிருத்தல் வேண்டும்? (பத்மாகரனையும் மந்தகாமி னியையும் நோக்கி) தீவினைப்பயனை யநுபவிப்பவர்களான என்பொருட்டு மென்குழவியின் பொருட்டும் உடல் பொரு ளாவிகளால் வரைகடந் துதவிபுரிந்த தங்களுக்கு யான் என்னகைம்மாறியற்ற வல்லேன்? ஈசனுங்களைக் காப்பாராக! உன்னத பதவியினின்றிழிந்தும், பிரிய பந்துவாம் என் கணவரால் கைவிடப்பட்டும், கொடிய நோயால் பீடிக்கப் பட்டும், இதுகாறும் யான் இறவாமலிருந்தது இக் குழவி யின்பொருட்டே. அதுவும் இப்பொழுதென் கைவிட்டு விலகியதாதலின், இனி யான் உயிர் வைத்திரேன். இக் குழவியுடன் யானும் தீக்குளிக்கின்றேன். அக்கினி தேவன் என்னுடனென் தீவினையையும் எரிப்பாராக!

பத்மாகரன் :—தாயே! பொறுத்துக்கொள்ளுங்கள். தங்களுக் கினியாவது நல்ல காலம் வரலாகும். பிராணனை விடாதிர்கள். 'அடிப்பவனு மணைப்பவனு மவனே' ஆதலின், நாமியற்ற வல்லது யாதுளது? ஈசன் செயலுக்கு நாம் யாவரும் தலை வணங்கியே தீரல் வேண்டும்.

மந்தகாமினி :—அம்மணி! தாங்களிறப்ப தெங்களுக்கு ஆருத் துயரை யுண்டுபண்ணும். எங்கள்பொருட்டாயினும் தாங்கள் உயிர் வைத்திருத்தல் வேண்டும். ஈசன் கருணா நிதியாதலின் தங்களைக் கைவிடார்.

ஸுமதி :—அன்பர்களே! தயை கூர்ந்து எனக்குத் தடை செய்யாதிருக்குமாறு தங்களைப் பன்முறையும் வேண்டிக்கொள்ளுகிறேன். இனி உயிர் வாழ்ந்திருக்க என் மனம் எள்ளளவேனும் ஸம்மதியாது. மன்னித்துக்

கொள்ளுங்கள். யான் இறக்கத் தாங்களநுமதியளித்தலே தற்காலம் தாங்களெனக்கியற்றும் பேருதவியாகும். (குழந்தையை நோக்கி)

இராகம், ப்யாக்: தாளம், ரூபகம்.

ஐயனே நம் மறையன் விடுத்தலில்
கையறத் தளர்ந்தேன் கைவிட்டனை என்னை
வெய்ய சேண்மை வெதுப்ப மெலிந்தேன்
உய்ய லேனுன் உன்னை விடுத்துமே.

ரிஷபயோகி:—(பாடிக்கொண்டு ப்ரவேசம்)

இராகம், மால்கோஸ் : தாளம், ஆதி.

பல்லவி.

துணையவனன்றியே லணைத்திட வல்லார் யார் (துணை)

அநுபல்லவி.

கணவனவனே யெனக் காண்பதன்றோ மெய்ஞ்ஞானம் (துணை)

சரணம்.

கணித்திடு வையமும் இணைத்திடு மாயையும்
குணிக்கிலவ னேயலாற் றுணித்திடுமென் நாவும் (துணை)

பத்மாகரன்:—சிவயோகியாரே! உம் வரவு நல்வரவாமிப்போது. குழந்தை இறந்ததன் நிமித்தம் உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கும் இவ்வுத்தமிக்குத் தேறுதல் கூறி எங்களைக் காத்தருளல் வேண்டும்.

ரிஷபயோகி:—(ஸமதியை நோக்கி) ஏ குழந்தாய்! என்ன அறிவினமிது? (பாடுதல்)

இராகம், காபி: தாளம், சாபு,

சாவதும் பிறப்பெனுந் தன்மையை
தேவருங் கடவாரிது திண்ணமே
பாவை நீ துயர் பட்டிடிற் றீருமோ
யாவர் முன்ன முதின்னுயிர் மீட்டுளோர்.

உலகத்தில் யாவரு மறிந்துள்ள விஷயங்களில் முதன்மை யானது பிறந்தவர்க ளவச்ய மிறக்க வேண்டியவர்க ளென் பதே. பிறப்பையும் இறப்பையும் முறையே ஆதியாகவு மந்தமாகவுமுடைய இவ்வுலக வாழ்க்கை நீர்மேற் குமிழி யைப் போலும் இந்தாஜால வித்தையைப்போலுந் தோன் றிய சிறிது காலத்துக்கெல்லாம் மறையுந் தன்மையதென்ற ஆன்றோர் கூற்றை நீ கேட்டிலையோ! (பாடுதல்)

இராகம், ஸஹானா: தாளம், ஆதி.

பல்லவி.

மண்ணினிற் பிறப்பென்பது தண்ணீரிற் குமிழியன்றோ (மண்)

அநுபல்லவி.

கண்ணொடிப் பொழுதே காயம்மண்ணோடு மண்ணாவதன்றோ (மண்)

சரணம்.

சங்கரா னருளன்றியார் கிங்கரர் தடுக்க வல்லார்
சங்கை வேண்டாம் விட்டுன் துயர் மங்கையே தேறுதல்
கொள்வாய் (மண்)

ஏ பேதாய்! உனக்கும் இறந்த இக் குழந்தைக்கும் உண் மையில் யாதொரு ஸம்பந்தமு மிலது. நீங்களிருவரும் தனித்தனியே வினையின் பயனைத் துய்க்க வந்தவர்கள். கொடிய நோயால் இருவரும் வினையை யநுபவிக்கவேண்டி

யிருந்ததாலும், உன் குழவியாய்த் தோன்றிய ஜீவனுக்கு அதனுடன் பிராரப்தம் முடிவு பெற்றதாலும், உனக்கு அக் கொடு நோயுடன் புத்ரசோகமும் அநுபவத்திற்கு வர வேண்டி யிருந்ததாலும், உங்களிருவர்க்கும் தாயுங் குழவியு மான ஸம்பந்தம் கிடைத்தது. இது போலி ஸம்பந்தமே யொழிய வேறன்று. இறந்த குழந்தை உன் உண்மையான பந்துவெனக்கொண்டு, அதற்காக நீ வருந்துவது அஞ்ஞான மேயாகும். இரண்டுநதிகளின் பிரவாஹத்தால் அடித்துக் கொண்டுவரப்பட்ட இருமரக் கட்டைகள், அந் நதிகளின் ஸங்கம காலத்தில் ஒன்றுய்ச் சேர்ந்து, சிறிது தூரம் அந் நிலையிலே சென்று, பின்னர், அப் பெருநதி இரு கிளை களாய்ப் பிரியு மிடத்து இரண்டு கிளைகளில் தனித்தனியே செலுத்தப்படுமாயின், அக் கட்டைகள் தாம் பிரிந்த தன் மையை நினைந்து துயருறக் காரணமுண்டோ? ஒரு விரு க்ஷத்தி லிடத்தே வஸித்துவரும் பறவை, தனக்கு ஓரிருக் கையை அம்மரத்தி னுபகரணங்களைக்கொண்டே இயற்றி, அவ் விருக்கையுட் சில காலம் வஸித்துவருகிறது. பிறகு, அப்பறவை அக்கூட்டை நீத்து மற்றொரு மரஞ் சேர்ந்து, அங்ஙனமே மற்று மோர் இருக்கையை ஆங்கும் நிருமித்துக் கொள்ளுகிறது. அதுபோல, வினையின் பயனைத் துய்த்தற்கு ஜீவன் ஒரு சரீரத்தை யடைந்து, அச் சரீரத்தின் உபகரணங் களைக்கொண்டு, தனக்கொரு சரீரத்தை நிருமித்துக் கொள்ளு கிறான். அவ்வினையி னநுபவம் தீர்ந்தக்கால் ஜீவன், அச் சரீரத்தை நீத்து, மற்றொரு சரீரத்தை எஞ்சிய வினையினநு பவித்தின் பொருட்டுச் சிருஷ்டித்துக் கொள்ளுகிறான்.

“ கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து”

அறிந்தனையோ குழந்தாய்? இதுவே ஜீவப்ராயாண மென்பது. இவ்விதமே ஒவ்வொரு ஜீவனும் அநேக ஜன்மங்களை யடைந்துவருகிறது. நீயு மிதுவரையு மநேக ஜன்மங்களை யடைந்திருக்கிறாய். அஞ்ஞானத்தால் ஒவ்வொரு பிறப்பிலும் ஸுக துக்கங்களை யநுபவித்து வருகிறாய். வத்ஸே! ஸுக துக்கம் துய்த்தற்குக் காரணம் அஞ்ஞானமே. அஞ்ஞான மொழிந்தக்கால் மெய்ஞ்ஞானம் நிலைக்கும். மெய்ஞ்ஞான மடைந்தோர் அண்ட சராசரங்களும், அவற்றுட் டோன்றுவனவும் கடவுளுருவெனக் காண்பர். அகங்கார மமகாரங்களினின் றொழிவர். ஆகவே, யவைகளினின்று பிறந்த காமக்ரோதாதிகளாம் அறுவகைக் குற்றங்களின் வயப்படார். சுருங்கச் சொல்லின், ஆட்டுவிக்கும் மாயை அவர் கைவிளையாட்டுக் கருவியாகும். அத்தகையோர் பிறப்புமிறப்புமடையார். வேண்டினடைவர். அடைவரேல், அவற்றினிடைப்பட்ட ஸுகதுக்கங்களி லீடுபடாது வேஷதாரிகளாய் விளங்குவர். ஆதலின், குழந்தாய்! ஈசனருள் பெற அவன் தாள்களை வணங்கு. உண்மை ஞான மடைவாய். 'தத்வமஸி' என்பதன் பொருளறிவாய். மாயையினின்று விடுபடுவாய். ஸுகதுக்க மென்னும் பந்தத்தினின்று விலகுவாய். இறந்தகுழந்தையின் நிமித்தம் நீயு மிறக்கத் துணிவது அறிவீனம்.

ஸுமதி :—யோகீச்வரா! தாங்கள் கூறுவது முற்று முண்மை. ஆயினும், யான் தற்கால மநுபவித்துவரும் அளவிலாத்துன்பம் என்மனத்தை எளிதிலமைதியடையச் செய்வதன்று. இச்சரீரத்தைப் பஞ்சீகரப்படுத்தியே என்னுள்ளத்தைச் சாந்தப்படுத்தல் வேண்டும். பிறகு, மறுபிறப்படைவனேல், எனக்கு ஞானம் ஸித்திக்கும். இக்குழவியின் பொருட்டே யானிறக்கத் தீர்மானித்ததன்று.

"கள்ளாருமாலை முடிவேந்து கனன்று நீக்க
உள்ளாவிவாட்டு முதநோயி னுணங்கு வேற்குத்
தள்ளா விழுச்சீர்ப் புதல்வனொடு சாதருனே
விள்ளாத தன்பத்து ழலாத விரதமையா."

தந்தையரே! என் ப்ரியபந்துவாம் கணவனு மென்னை நீத்த னன். உயிரைவாட்டிவரு மிந்நோயோ என்னை நீத்த தின்று. இவ்விரு கஷ்டங்களையும் பாராட்டாது இச் சேயின் பொருட்டு யான் இதுகாறு முயிர் வைத்திருந்தேன். இக் குழவியின் பந்தமும் நீங்கிய தாதலின், எதன்பொருட்டு யா னினி யுயிர் வைத்திருத்தல் வேண்டும்? அவச்யம் யான் இறந் திடல் வேண்டுமென்பதுபற்றியே ஈசன் என்னை இந்நிலையில் வைத்துளார் எனக் கொள்வேனு தலின், இறக்குந் தீர்மானத் தினின்று சிறிதும் மாறேன். தாங்கள் மன்னித் தருளல் வேண்டும். ஸாதுவே! அளவிறந்த தீக்கர்மாக்களைப் பூர்வ ஜன்மங்களில் புரிந்துளேனென்பதுண்மை. ஆயினும், அறிந்தோ; அறியாமலோ, நல்வினையையும் சிறிது யான் புரிந்திருத்தல்வேண்டும். அன்றேல்,

"அளிகொண்ட சிந்தையறத் தோய் நின்னருட்க ணேக்கம்
விளிகின்ற காலத் தெதிர்ந்தேன் வினை வெம்மை தீர்ந்தேன்
முளிகொண்ட பைங்கூழ்த்தெறு கோடை முதிர்ச்சிதீரத்
தளிகொண்டல் சிந்திப் புரந்தாற்றிடு தன்மை போலும்"

அந்நல்வினைப்பயனே இப்பிராணோத்க்ரமண காலத்தில், பரமசிவமே உருவெடுத்து வந்தது போன்று தாங்கள் எனக் குத் தரிசனந் தந்து உண்மை ஞானத்தைப் போதித்திடச் செய்தது. இனி, என் ஸஞ்சித கர்மம் முற்றிலும் நசித்தது. பிராரப்தானுபவத்திற் காதாரமாய் வந்த இச் சடலத்தையு மொழித்திடின், பிறப் பிறப்பினின்று இனி விடுபட்டவளா வேன். புண்யமூர்த்தி! தங்களுடைய பாதகமலங்களைத்

தொழுது, தங்கள் போதனைகளை மனத்திருத்தி, ஆணைத் துதித்து யான் தீக்குளிக்கின்றேன். (யோகியாரை நமஸ் கரித்தல்)

ரிஷபயோகி :—ஈசனருளா லுனக்கு ஸகல மங்களமும் உண்டாவதாக! குழந்தாய்! உன் தீர்மானத்தை யான் விலக்க வல்லேனல்லேன். உன் சித்தம் இவ்வுலக பந்தத்தி னின்று முற்றிலும் அறுபட்டுச் சாந்தியடைய நீ பிறர்க் காகக் கோருவதியாதேனு முளதோ?

ஸுமதி :—தந்தையரே! என் பொருட்டு மிக்குழவியின் பொருட்டுந் தங்கள் செல்வ முழுவதையும் செலவிடுத்துத் தாய்தந்தையரைக்காட்டிலும் பன்முறை விசேஷித்த அன் புடன் எங்களை யாதரித்துவந்த இம்மஹானின் ஸந்ததி உலகில் நசிக்காவண்ணம், இவர்க்குத் தீர்க்காயுளுடையோனு யும், நோயிலானையும், ஞானவானையும் புத்ரன் ஒருவன் பிறப் பனேல், என் ஜீவன் சாந்தியடையும்.

ரிஷபயோகி :—உத்தமீ! இப்பத்மாகரனுக்கு நீ கோரும்வண்ணம் ஸத்புத்ரனொருவன் உண்டாக ஈசனருளை முன்னிட்டு யான் ஆசி கூறுகிறேன். மற்றும் நீ கோருவது யாதேனுமுளதோ?

ஸுமதி :—என் ப்ராணபதிக்குப் பிற்காலம் நீதி வழு வாதரசு புரியவும், அவர் குலம் தழைத்தோங்கவும் நான் முளை யொன்று தோன்றிடல் வேண்டும்.

ரிஷபயோகி :—அங்ஙனமே யாசி கூறுகிறேன். இனி யும் நீ ஈசன் அருள் கொடடையக் கோருவது யாதேனு முளதேல், தெரிவிப்பாய்.

ஸுமதி :—எனக்குக் காட்டகத்தில் உதவிபுரிந்த பிங் களை யென்பாள் அவள் நாதனுடன் சேர்ந்திடும்வண்ணம் செய்திடல்வேண்டும்.

ரிஷபயோகி :—அங்ஙனமே. மற்று,

ஸுமதி :—கருணைக்கடலே! இனி, யான் வேண்டுவது யாதுளது? என்குழவியின் ஜீவனும் உக்ரஸேனனின் ஜீவனும் உறையுமிடம் என் ஜீவனும் சென்றடைந்திடலைக் கோர வேண்டுவதுதான்.

ரிஷபயோகி :—ஹா! குழந்தாய்! உத்தமீ! புண்ய வதீ! இவைகளை யெல்லாம் நீ கோருவை யல்லை. உன்மாட்டு அந்தர் யாமியாக வஸிக்கும் ஈசன் உன் பொருட்டியற்றத் தீர்மானித்துளவே உன் மூலமாய் வெளிப்படுவது. உன் இறந்த குழந்தையை என்னிடமெடுத்து வருவாய். (ஸுமதி குழந்தையை யெடுத்து வரலும், யோகியார் அக் குழந்தை யின் மேல் திருநீறு தூவுதலும், குழந்தை கண் விழித்துத் தாயை எதிட்ட வண்ணம் அழலும்.)

ஸுமதி :—ஹா! என் கண்மணீ! என் இன்னமுதே! (குழந்தையை மார்புறத் தழுவியணைத்தல்: உச்சிமுகந்து முத்தமிடல்: பிறகு குழந்தையை யோகியாது பாதத்தி லிட்டு) அருளே! தங்களுடைய கருணையையும் சக்தியையும் யான் என்னெனக் கூறுவேன்! இறக்குமுயிருடனிறந்த வுயிரையு மளித்தவள்ளலே! உம்கருணைக்கு நிகருண்டோ? (நமஸ்கரித்தல்)

ரிஷபயோகி :—ஏ ஸுமதீ! இதற்குமுன் என்னை எப் போதாயினும் நீகண்டதாக உனக்குத் தோன்றுகிறதா?

ஸுமதி:—(யோகியாரைச் சிறிதுநேரம் உற்று நோக்கி) ஸாதுவே! என்நாதர்க்குத் தாங்கள் மகப்பேறுண்டாக முன் ஆசிர்வதித்த மஹானன்றோ? இப்போழுதன்றோ யான் முற்றுமறிகிறேன்! ஆ! இதுவரையில் யான் அச்சம்ப வத்தை மறந்திருந்தது அதிசயமன்றோ!

ரிஷபயோகி:—உன் நாதரின் வினைப்பயனை நீயேற்றநுப வித்தனுக்கு, நம்மிருவர்க்கு மிடையே நிகழ்ந்தவைகளை நீ மறந்திருத்தல் அவச்யமாயிருந்தது. நீ என்னிடம் கோரியன யாவும் குறைவின்றி யுனக்குக் கைகூடும். உங்களிருவரின் கொடுநோயும் தீர்ந்திட இவ்விபூதியைப் பெற்றுக்கொள் வாய். இக்குழந்தைக்குப் பத்ராயுவென யான் நாமகரணம் செய்கிறேன். (மந்தகாமினியைச் சுட்டிக்காட்டி) இவ்வுத் தமிக்குப் பிறக்கும் புத்ரன் ஸுநயன் என்றழைக்கப் படுவான். உன் புத்ரனுமவனும் நீங்காநேசம்பூண்டு வாழ் வர். நீ யுனது பர்த்தாவை யடைவாய். உன் புத்ரன் கீர்த்திமானயும் பரமஞானியாயும் அரசாள்வான். நீ இறக் கும்வரையும் கிழப்பருவமுனைக் கிட்டாது. உன்புத்திரனு மவ்விதமே நீடித்த யௌவனத்துடன் வாழ்வான். அவன் தக்கபருவமடையும்வரையும் நீ யவனுட னிப்பத்மாகரனில் லத்தே வதிந்துவருவாய். யான் சிறிது காலஞ்சென்று மீண்டுமுனைக் காண்பேன். ஈசனருள்வாழி! அவனடியார் வாழி! (அந்தர்த்தானமடைதலும், யாவரும் நமஸ்கரித் தலும்)

அங்கம் 3.

களம் 5.

இடம் :—கானகம்.

பிங்களை :—(பாடிக்கொண்டுப்ரவேசம்)

இராகம், குறிஞ்சி : தாளம், ஆதி.

பிரிந்துயான் தவித்திட விரிஞ்சனேன் எழுதினன்
புரிந்திட்ட தீவினையோ வறிந்திலேன் நாதனை (பிரி)

அரிவையான் படுதுயர் எரியிடைமெழுகன்றோ
திரிந்துமே யலைகின்றேன் திருவுள மறியுமே. (பிரி)

ஹா! யோகிராஜ! ஒருநொடிப்பொழுதில் நீங்கா நோயி னின்றும் என்கணவரைக் காத்திட்ட கருணாமூர்த்தியாம் தங்களுக்கு இப்பேதை படுந்துயரை நீக்கல் அரிதோ? இவ்விரண்டு வருடகாலமாய் என்நாதருடைய பிரிவை யான் என்னகஷ்டத்துடன் ஸஹித்துக் கொண்டிருக்கிறேன்! என் நாதர் தற்காலம் எங்கிலேயிலிருக்கின்றாரோ! யான வரைக் காணமலலேவதுபோல் அவருந் தங்களைக் காணதலே கின்றனரோ? என் செய்வேன்! இனி நடக்கவும் யான் சக்தி யற்றிருக்கிறேனே! ஹா! பிராணநாதா! தங்களைத் தரிசியா மலே யான் பிராணனைவிட்டுவிடுவேனே? ஹே முனிபுங்கவ! ஸர்வஞ்ஞராம் தாங்கள் இப்பேதைமுன் தோன்றி அவள் துயரகற்றிட லாகாதா? (பாடுதல்)

இராகம், ஜெஞ்ஜூடி : தாளம், ஆதி.

பல்லவி

யோகியரே யருளுடையாரே யாட்கொள்ளும் (யோ)

அநுபல்லவி

போகபோக்யங்கள் விண்டுயோகதண்டங் கைக்கொண்ட (யோ)

சரணம்

மோஹிதமாயாப்ரபஞ்சபுத்புதவாழ்க்கைதன்னை
போக்யமிதன்றென்றுணராப்பேதையேனுவிசோா
யோக்யமதேயா மோனவாழ்வுமென்மனத்துநிக்கும்
பாக்யமெனக்கேயுதவிடபாவைமுன்தோன்றிடீரோ. (யோ)

ரிஷபயோகி :—ஹே ஸாத்வீ! இதோ, யான் உன்முன் னிலையில் நிற்கின்றேன்; கண்களைத் திற.

பிங்களை :—ஹா ! யோகிராஜ ! என்னவாச்சர்யமிது ! என்ன அறிவீனத்தால் இதுகாறும் என்சரீரவாற்றலை நம்பி வீணில் ச்ரமப்பட்டேன் ! இதுவன்றோ ஸாதுக்கள் மஹிமை! இதுவன்றோ அவர்தம் சக்தி! ஏ ஆபத்பந்தோ ! என் நாதர் எங்கிருக்கிறார் ? தங்களைத் தரிசித்தாரா ? தங்களநுக்ரஹம் பெற்றாரா ? மனச்சாந்தி யடைந்தனரா ? அவரை யானடையவிடும். அவர் எங்கே இருக்கிறார் ? எங்கே இருக்கிறாரவர் ? தயைகூர்ந்து யானறியவிடும். எங்கேயவர் ?

ரிஷபயோகி :—குழந்தாய்......குழந்தாய்.......பொறுப்பாய்.

பிங்களை :—ஹா ! என்ன ? இறந்துவிட்டனரா ? சொல்லுங்கள். அன்றேல், என்னுடன் இல்வாழ்க்கையிற் பொருந்தியிருத்தலை வெறுத்தனரா ? அவர் என்னை வெறுக்காரே. அங்ஙனம் வெறுப்பரேனும், யான் இத்துறந்த நிலை

யில் அவர்க்குற்ற பணிவிடைகளை என் புரிந்துகொண்டவர் பாரிசத்தில் இருத்தலாகாது? ஹா! அவர்க்கு யாது நேர்ந்தது? என் ஆவி துடிக்கின்றதே! கூறமாட்டீரா? கடவுளரே!

ரிஷபயோகி :—கற்பினுங்காசியே! பொறு. உன்னை, உன்நாதனுடன் சேர்த்துவைக்குங் கடமையை யான் எனதாக மேற்கொண்டுள்ளேன். ஆயினும், யான் கூறுவதைச் சற்றே ஸாவதானமாய்க் கேட்பாய்.

பிங்களை :—என்நாதருடன் என்னைச்சேர்ப்பிரா? ஹா! அருளே! தாங்கள் எளிதிற் செய்வீர். தங்களுக்கியலாததும் ஒன்றுண்டோ? சொல்லுங்கள். சீக்கிரம் சொல்லுங்கள்.

ரிஷபயோகி :—நீ யுன் பர்த்தாவைத் தேடிவருங்கால், மங்களாபுரியையடுத்த கானகத்தில், மங்கையொருத்தியைக் குழந்தையுடன் சந்தித்தனையன்றோ?

பிங்களை :—ஆம்! தாயும் அவள் மகவும்! கொடிய நோயால் பிடிக்கப்பட்டிருந்தார்கள்! ஹா! அப்புண்யவதி என்ன கஷ்டப்பட்டாள்!

ரிஷபயோகி :—அவள் கான்முளையை நீ மடியிலிட்டு லாலனை செய்தனையன்றோ?

பிங்களை :—ஆம்! பிறகு அதற்குச் சிறிது பழரஸமுமுதவினேன்.

ரிஷபயோகி :—அக்குழந்தை யுன்னை எறிட்டுப்பார்த்த வண்ணம் சிரித்ததன்று?

பிங்களை :—ஆம்!

ரிஷபயோகி:—இறுதியில், அக்குழந்தையைத் தாயிடங் கொடுக்குங்கால், அஃதுன்னை விட்டுப் பிரியமனமில்லாதிருந்ததை நீ யறிந்தனையன்றோ?

பிங்களை :—ஆ......ம்.

ரிஷபயோகி :—அக்குழந்தை நோயின் கொடுமையாற் ருகு இறந்து, பின்னர், ஈசனருளை முன்னிட்டு நம்மா லுயிர்ப் பிக்கப்பெற்று, ரோகம் முற்றிலும் நீங்கி, வளர்பிறைச்சந்திர னைப் போல் தற்காலம் விளங்கிவருகிறது. குழந்தையின் தாயும், நோய்நீங்கி தேவகன்னிகையை யொப்ப நீங்காயௌ வனத்துடன் விளங்கிவருகிருள். நாளடைவில் அவ்வுத்தமி தன் பர்த்தாவைப் புத்திரனுடனடைவள். அப்புத்திரனே, உலகோர்புகழுங் கீர்த்திமானுயும், பக்திமானுயும், புரா ணப்பிரவசித்தனுயும் வாழ்வான்.

பிங்களை :—யோகீந்த்ர ! என் கொழுநனை யானடைய விடும்.

ரிஷபயோகி :—யானதைக் கூறுகிறேன். சற்றுநிதா னித்துச் செவிகொடுத்துக் கேள். மங்கையர்க்கரசியே! அவ் வரச குமாரனுக்கு இல்வாழ்க்கைத் துணைவியாய் வரும் பாக் யவதி, நளசக்ரவர்த்தியின் பௌத்ரனும், நாக்ராஜனுக்குப் பரமசிவத்தின் பெருமையை நன்கு விளக்கிக்கூறியவனுமான சந்த்ராங்கதனுக்கும், அவன் மனைவி—உலகத்தார் மஹாபதி விரதை யெனப் புகழும்—ஸீமந்தினி என்பாளுக்கும் செல் வப்புதல்வியாய்த் தோன்றிடல் வேண்டும். குழந்தாய்!......

பிங்களை :—எந்தையே!

ரிஷபயோகி :—நீ யுன்னருந் துணைவனை யடைந்து பரம ஸௌபாக்யத்துடன் வாழவேண்டியமார்க்கத்தைக் கூறுகி றேன். உத்தமீ ! ஸீமந்தினியின் கருப்பை யுன் வரவை எதிர்நோக்குகிறது, யான் உன்னை யுன்கணவனுடன் சேர்த் துவிடக் காத்திருக்கிறேன். ராஜபுத்ரனுய், பத்ராயுவென் னும் நாமதேயத்துடன், இல்வாழ்க்கைத் துணைவியாயடைய உன்னை எதிர்பார்க்கிருன், இறந்த உன்பதி மந்தரன்.

பிங்களை :—ஹா ! ஹா ! ஹா ! (பிங்களையின் ஜீவன் சரீரத்தை நீத்து வெளிக்கிளம்பல்)

ரிஷபயோகி :—ஹே பூதேவீ ! கற்பிற்காசியாம் பிங்களை யென்னும் கிள்ளை இது காறும் வதிந்து வந்த இப்பஞ்சாத்தை யாட்கொள்வாய். (பூமிவெடித்துப் பிங்களையின் சரீரத்தை யுட்கொண்டு மீண்டும் மூடிக்கொள்ளல்) ஈசனருள் வாழி! அவனடியார் வாழி! (அந்தர்த்தானமடைதல்)

அங்கம் 4.

களம் 1.

இடம் :—ஸ்வர்ணபுரி—பத்மாகரன் மாளிகையைச் சார்ந்த சிங்காரவனம்.

பத்ராயு :—ஸுநயா! அதோ, முதியவ ரொருவர் இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருக்கிறார். எவ்விட மிருந்து இவண் வருகின்றாரோ; அறியோம். அவர்க்குரிய உபசாரணைகளை யியற்றிடல் நம் கடமை.

ரிஷபர் :—(பாடிக்கொண்டே ப்ரவேசம்)

இராகம், ஸுரடி : தாளம், சாபு.

மாற்றறியாத செழும் பசும் பொன்னே
மாணிக்கமே சுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறியாத பெருந்தவ ருள்ளக்
கோவிலிருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறியாத சிற்றம் பலக்கனியே
விச்சையில் வல்லவர் மெச்சு விருந்தே
சாற்றறியாத என் சாற்றுங்களித்தாய்
தனிநட ராஜ என் ஸத்குரு மணியே.

சம்போ! மஹாதேவ! (பத்ராயுவைக் கண்டு) குழந்தாய்! உன் பெயரென்ன ?

பத்ராயு :—பெரியோரே! நமஸ்கரிக்கின்றோம். (பத்ராயுவும் ஸுநயனும் நமஸ்கரித்தலும், ரிஷபர் ஆசிகூறலும்)

தாங்க ளிவ்வாஸனத் தமருங்கள். (யோகியாங்கனமே செய்தல்) என்னைப்பத்ராயு வென்பர். என் தாய் ஸுமதி யெனப்படுவள். யானும் என் அன்னையும் இங் நாட்டுக்குத் தலைவராம் பத்மாகரர் என்போரால் ஆதரிக்கப்பட்டு வருகிறோம். இதோ நிற்பவன் என் நண்பன். ஸுநயன் என்பான். பத்மாகரரின் புதல்வன். அறிவினுங் குணத்திலும் மிக்கான்.

ஸுநயன் :—பெரியோரே! என் நண்பனும் அவன் தாயும் எங்களுடைய வேண்டுகோளையும் சிவயோகியர் ஒருவரின் கட்டளையையும் மறுக்கமன மில்லாராய் இங்கு வலித்து வருகின்றனர். சிவயோகியாது ஆகமனம் நேரின், இவர்கள் தங்கள் நாட்டிற்குச் சென்று விடுவர். என்னை யறிவுடையோனுங் குணவானுமாக்கிய என் நண்பன் என்னை விட்டுப் பிரியாதிருத்தல் கோரியே யான் அச்சிவயோகியர் வரவு சீக்கிரம் நேரா திருத்தலை விரும்புகின்றேன்.

ரிஷபயோகி :—அன்பனே! சிவயோகியார் உன்னையும் உன் நண்பனுடன் செல்ல உத்தரவிடின்?

ஸுநயன்:—அவராதாகமனம் இன்றே—இப்பொழுதே—நேருக.

பத்ராயு :—ஸுநயா! பெரியார் மிகவுங் களைத்திருக்கிறார். நீ யவருடைய பாதத்தை வருடிக்கொண்டிரு. நான் சென்று, என் அன்னையிடங் கூறிச் சிறிது உணவு கொண்டு வரச் செய்கிறேன். (செல்லல்)

ரிஷபயோகி :—(கால் வருடிக்கொண்டிருக்கும் ஸுநயனை நோக்கி) குழந்தாய்! நீயும் பத்ராயுவும் உங்கள் குருமார்களிடத்தே கற்க வேண்டுவன யாவும் கசடறக் கற்றீர்களா?

ஸுநயன் :—ஸாதுவே! கல்வி கரையில தாதலின் நாங்கள் கற்றது சிறிதளவேயாகும். பெரியோய்! என்னை விட என் நண்பன் அதிகம் கற்றுள்ளான்.

ரிஷபயோகி :—நல்லது. நீ இத்தனை யாண்டுகளாய்க் கற்றதில் அறிந்துகொண்டது யாதெனக் கூறவையோ?

ஸுநயன் :—கூறுகிறேன். (பாடுதல்)

இராகம், தன்யாசி : தாளம், சாபு.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதநாம நமச்சி வாயவே

ரிஷபயோகி :—ஆ! என்செல்வனே! இதற்குமேல் கற்கவேண்டுவது யாதொன்று மில்லை.

பத்ராயு :—(திரும்பிவந்து) முதியோய்! என் அன்னையார் தங்களைத் தரிசிக்க வந்துகொண்டிருக்கிறாள். (தானும் முழங்காலிட்டு அவரது மற்றொருகாலை வருடல்)

ரிஷபயோகி:—குழந்தைகாள்! என்னை நீங்கள் யாரெனவறிவீரோ? (பத்ராயுவும் ஸுநயனும் யோகியாரை அண்ணாந்து பார்த்தலும், ஸுமதி பால் பழவர்க்கங்களுடன் யோகியார் சொற்களைக் கேட்டவண்ணம் அவ்விடம்வரலும்)

ஸுமதி :—ஹா! தந்தையே! (பால் பழவர்க்கங்களை அவரது பாதத்திலிட்டு நமஸ்கரித்துக் கைகூப்பியவண்ணம்)

இராகம், சங்கராபரணம் : தாளம், சாபு.

பல்லவி.

உமையும் மறக்கவல்லோமோ எம் ஐயனே (உமை)

அநுபல்லவி.

உமைமறந்திடி னீண்டே எமையாதரிப்பார் யாரே
உமையாள் பங்கான்பரே எமையாட்கொண்ட நண்பரே (உமை)

சரணம்.

ஊனளிக்குமன்னை நீர் உயிரளிக்கும் தந்தைநீர்
ஊனுயிர்க் கறிவாமுணவளிக்கு மன்பர்நீர்
வானுற்றிலங்குமதிபானுபோல்வாரும்நீர்
யான்பெற்ற பெருந்தவப்பயனு நீரேயாக (உமை)

பத்ராயு! இவர்தாம் உன்னை யுயிர்ப்பித்த தந்தை. இவரே நம்மை நீங்கா நோயினின்றும் காத்தவர். ஸுநயா! இவரருளாற்றான் உன்தந்தை மகப்பேறடைந்தார். (யாவரும் யோகியை யுபசரித்தல்) தந்தையே! இவர்களிருவரையுமினித் தாங்கள் சிஷராகக்கொண்டு இவர்களுக்கு ஞானப்பாலூட்டிடல் வேண்டும்.

ரிஷபயோகி :—அவ்விதமே செய்கிறேன். குழந்தைகாள்! நீங்கள் சரீரசுத்தம் செய்துகொண்டு திருநீறணிந்து வாருங்கள். யானுங்களுக்கு மானவ தர்மத்தைப் போதிக்கின்றேன்.

அங்கம் 4.

களம் 2.

இடம் :—சிங்காரவனத்தின் ஒரு புறம்.

ரிஷபயோகி :—(பத்ராயுவை நோக்கி) நான் உனக்கிது காறும் கூறிவந்த தர்ம சாஸ்திரமுறைகள் யாவையும் எக்காலத்தும் நீ மறவாதிருப்பையாயின் அஃதுனக்கு ஸதாப்ரம க்ஷேமத்தையுமுண்டுபண்ணும். யான் இப்பொழுதுனக்குபதேசித்த இச்சிவகவசமந்த்ரம் இதுவரையும் தேவரஹஸ்யமாயிருந்தது. இவ்வுலகத்தில் நீயே யதற்குப் பிரதம சிஷ்யன். அம்மந்திரத்தின் பெருமை இத்தகையதென்று கூற வொண்ணாது. அது பரமசிவனாரை வசீகரிக்கும். அதை மறவாது தினந் தோறும் பாராயணம் செய்து வருவாய். மற்று, ஏ பத்ராயு! நீ துஷ்டர்களை நிக்ரஹித்துச் சிஷ்டர்களைப் பாதுகாத்துத் தர்மமுறை வழுவாது அரசுபுரிந்துவர உனக்குப் பன்னிரண்டாயிரம் யானைகளின் பலத்தை ஆசீர்வதிக்கின்றேன். அதனை இப்புவியிலிருந்து ஆகர்ஷித்துக் கொள். (பத்ராயு அவ்விதமே செய்தலும், சமீபத்திலுள்ள மலைகளும் மரங்களும் நடுங்கலும்) இதோ, (ஆகாயத்திருந்திறங்கும் கட்கத்தைக் கைப்பற்றி) இக்கட்கத்தைப் பரமசிவன் உனக்கருளும் கைப்படையாகக் கொள். இவ்வாளைத் தடுக்கப் புவியில் யாதொரு படைக்கலமு மில்லை. அநேகம் அக்ஷோஹிணிக் கணக்கினவான சத்ருக்கள் ஸேனையையும் பிரயோகித்த ஒரு நொடிப்பொழுதில் இது நாசமாக்க வல்லது. இதோ, (ஆகாயத்தினின்றிறங்கிய சங்காயுதத்தைப்

பற்றி) இச்சங்காயுதத்தையும் பெற்றுக்கொள். இதிலிருந் துண்டாகும் த்வனி பகைவர்க்குப் பயத்தை யுண்டுபண்ணி யவரை மூர்ச்சிக்கச் செய்யும். மித்ரபாவமுடையார்க்கு இதின் நாதம் சந்தோஷத்தை யுண்டாக்கும். ஸாதுக்களுக்கு இதிலிருந்தொலிக்கும் பிரணவநாதம் மிக்கவானந்தத்தை விளைவிக்கும். குழந்தாய்! இந்திரனுக்குச் சமானமான சக்தியை நீ இப்பொழுதடைந்துள்ளாய். அதைத் தக்கவழி யினுபயோகித்து, இப்புவியை யொருகுடைக்கீழ் அறநெறி வழுவாது ஆண்டுவரக்கடவாய். உனக்களித்திருக்கும் அபார சக்தியை விபரீதமாக உபயோகப்படுத்தி, ஸாதுக்களை யுனக்குச் சத்துருக்களாக்கிக் கொள்ளாதே. (ஸுநயனை நோக்கி). ஸுநயா! பத்ராயுவிற்கு யான் இதுகாறுங் கூறியவைகளை யடிக்கடி யவனுக்கு ஞாபகமூட்டிக்கொண்டு அவனுடன் ஸுகமாய் வாழ்ந்து வருவாய். குழந்தைகாள்! யான் மீண்டொருமுறை யுங்களைக்காண்கிறேன். ஈசனருள் வாழி! அவனடியார் வாழி! (அந்தர்த்தான மடைதல்)

அங்கம் 4.

களம் 3.

இடம் :—பத்மாகரன் மாளிகை.

பத்ராயு :—அன்னையே! சீக்கிரம் உத்தரவளிப்பீர். என் தந்தையாரை மகத தேசாதிபர் ஹேமரதர் ஜயித்து, அவரையும் மற்றும் பலரையும் கைதிகளாகக் கொண்டு செல்கின்றனராம். இச்செய்தி அந்நகரத்திலிருந்து தப்பிப் பிழைத்து வந்த சிலரால் தெரிந்துகொண்டோம். காலஹரணம் செய்யாது விடைகொடுத்தருளல் வேண்டும். இதோ, நொடிப்பொழுதில், ஹேமரதரைவென்று, என் தந்தையை விடுவித்து, மீட்டும் அவரைச் சிங்காதனத்தேற்றி வருகிறோம்.

ஸுமதி :—குழந்தாய்! இஃதென்ன விபரீதம்! மகத தேசத்தரசர் உன்மாற்றாந்தாய் ப்ரேமாவதியாரின் தந்தையன்றோ? மங்களாபுரி மீது ஏனோ அவர் படையெடுத்து வந்தது? இவ்விஷயம் நீங்கள் நன்றாய் விசாரித்தீர்களா?

ஸுநயன் :—அம்மணி! இவ்வையம் எங்கள் மனத்தினுமுதித்தது. ஆயினுமவர்கள் கூறியகாரணத்தால் அது நீங்கியது. ப்ரேமாவதியார் இறந்ததும், ஹேமரதர்க்கு அநுகூலராயிருந்த காலநேமியார் சிறைப்பட்டதுந்தாம் இப்பகைக்குக் காரணம். தங்கள் கணவர் அவர் பூண்டபகையை யறியாராதலின், ராஜதர்மத்துக்கு விரோதமாகவும், முன்னறிக்கையிடாமலும், திடீரென அவர்மீது ஹேமரதர் படை

யெடுத்து வந்தபோது அவரை வெல்லக்கூடவில்லை. தற்காலம் அவரும் காலநேமியாரும் மங்களாபுரியை அமங்களாபுரியாக்கிப் பற்பலவிதத்தினு மதையழித்துத் திரண்டசெல்வத்தையும் தான்யத்தையுங் கொள்ளைகொண்டு, தங்கள் கணவரையும், அதிகாரவர்க்கத்தினரான மற்றும் சிலரையும் கைதிகளாக விலங்கிட்டுக்கொண்டு செல்கின்றனராம். ஆதலின் இப்பொழுது நாங்கள் இவ்விடம் நீத்து சீக்கிரம் அவ்விடம் செல்லல் வேண்டும். காலஹரணம் செய்யின், அஃது ஒருகால் ஹேமரதன் தன் நாட்டையடைந்து தங்கள் கணவருக்கு யாதாயினுந் திங்கிழைத்து விடவும் ஹேதுவாகும்.

ஸுமதி :—கண்மணிகாள்! ஈசனருளும் அவனடியாரருளும் நிரம்பப்பெற்ற உங்களுக்கு இக்கருமம் எளிதேயாகும். விரைந்து சென்று அரசனைக் காப்பாற்றுமின். தர்மத்துக்கு விரோதமாக யுத்தம் புரியாதீர். மகததேசத்தரசரைக் கொல்லல்வேண்டாம். அவரைக் கைதியாக்கி என்நாதரிடம் ஒப்புவியுங்கள். உங்கள் வரலாற்றை என்நாதர்க்கறிவியாது இருத்தலே யான் தற்காலம் உங்கள்பாற் கோருவதாகும். (இருவரும் நமஸ்கரித்தல்) ரிஷபயோகியார் உங்களுக்குத் துணை புரிவாராக! (பத்ராயுவும் ஸுநயனும் பரிமீதேறிச் செல்லல்)

அங்கம் 4.

களம் 4.

இடம்:—மங்களாபுரி.

வஜ்ரபாஹு :—(பாடுதல்.)

இராகம், குந்தளவராளி: தாளம், ஆதி.

எங்கள்குல தெய்வமே இங்குவந் தெதிர்ந்தெந்தன்
பங்கமுடு மந்நோயும் பழியுந்தீர்த் திடவந்தாய்
சிங்கமே யானுனக்குச் செய்யுங்கைம் மாறென் றுண்டேல்
மங்குலுக்குக் கைம்மாறு மன்னுயிர் செய்திடுமே. (எங்கள்)

அன்பர்காள்! எதிர்பாராச்சமயத்தில் ஷண்முகக் கடவுளும் வீரபாகு தேவனும் போன்று தோன்றி, என்மாற்றாரைத் தங்கள் பகைவராய்க்கொண்டு, தெய்வீகவாற்றலால் அவர்களை வென்று, வென்றோரான இவ்வரசரை வெல்லப்பட்டவராக்கி எனக் கடிமைப்படுத்திய தாங்கள் யாவரென யானறியலாகாதோ ?

பத்ராயு :—கொற்றவ! யானுமென் அன்னையாரும் சில காலம் உமது பிரஜைகளாய் இந்நாட்டின்கண் வஸித்து வந்தோம். ஊழ்வினையின் வலியால் இந்நாட்டை நீத்துச் செல்ல நேரிட்டது. தற்காலம் ஸ்வர்ணபுரியில் தர்மிஷ்டராம் பத்மாகரருடைய பாதுகாப்பில் இருந்துவருகின்றோம். இவன் என்நண்பன் ஸுநயன். பத்மாகரரின் மைந்தன். என்னைப் பத்ராயுவென் றழைப்பர். தங்கள்

பாஜைகளுட்சிலர் ஸ்வர்ணபுரிக்குப் பிழைத்தோடி வந்ததே தங்கள் நிலையை நாங்களறிந்ததற்குக் காரணமாகும்.

வஜ்ரபாஹு :—தாங்கள் புரிந்த பேருதவிக்கு யான் சற்றும் அர்ஹனல்லேன் என்பதை என்னுளமறியும். ஆதலின் அதை என்முன்னோர்கள் செய்த பெரும் பாக்கியத்தின் பலனெனவே யான் கொள்வேன். வயோதர்மத்தை யநுஸரித்து யான் உங்களுக்கு ஆசி கூறலாமாதலின், நீங்கள் சிரஞ்சீவிகளாய், ஸகல பாக்யங்களுங் குறைவின்றி யடையப் பெற்று, ஸந்துஷ்டியாய் வாழ்ந்திடல்வேண்டி கடவுளருளைப் பிரார்த்திக்கிறேன்.

பத்ராயு :—அரசே! எங்கள் கடமையை நாங்கள் ஒருவாறுசெய்து முடித்தோமெனக் கருதுவமேயன்றி தாங்கள் கூறுவதுபோற் பேருதவி எதுந் தங்களுக்குப் புரிந்ததாகக் கருதுவோமல்லோம். இவ்விஷயத்தில் எங்கள் கடமையைக் குறைவறச்செலுத்துவான் போாற்றலொன்றைச் சிவனடியார் எங்களுக்குதவியது தங்கள்பொருட்டேயாமென நாங்கள் இப்பொழுதறிகிறோம். (ஹேமரதரை நோக்கி) பாடுதல்.

இராகம், இந்துஸ்தான்: தாளம், ஆதி.

மதியிதோ மகத மகிபநீமதித்தனையோ
கதியெனவே கழறிடு மனுமுறை (மதி)

சதிசெய்தாரெவரிச் சகந்தனில் நிலைபெற
துதிபெறு நிதியுட னதிபரா யிருந்தவர். (மதி)

தர்மத்துக்கு விரோதிகளா யிருப்பவர்கள் பலவான்களாயினும், அவர்கள் கைக்கொள்ளுங் கருமங்களில் கடவுள் உதவி புரியாராதலின், அவர்களுக்கு அபஜயமே யுண்டாகுமென்பதை நன் கறிவீர். முன்னறிக்கை யிடாது நீர் திடீ

ரென மங்களாபுரிமீது படையெடுத்து வந்தது தவறு. நாட்டைப் பற்பல விதத்தினு மழித்தது அதனினும் மேலான குற்றம். மற்று இவ்வேந்தருக்கு நீர் மாமன் முறையிலிருந்தும் இவர்மீது இத்தீத்தொழிலைக் கைக்கொண்டது தீயோரும் வெறுக்கத்தக்கது. வஜ்ரபாஹு அரசரே! நீர் இவர்க்கிடும் தண்டனை யாதோ?

வஜ்ரபாஹு:—எதிர்த்துவந்த ஒன்பது அக்ரோணி சேனையை ஒருநொடிப்பொழுதில் சின்ன பின்னப்படுத்தி என்னை விடுத்தவர்களான உங்கள் முன்னிலையில் ஹேமாதர் எனக் கெவ்வா றடிமைப்பட்டவராவர்?

பத்ராயு:—எனக்கு ராஜகிய முறையிலதிகப் பழக்கமின் மையாலும், வெகுகாலம் நீதிமுறையில் வழுவாது அரசுபுரி பவரென நீர் புகழ் பெற்றிருப்பதாலும், உமது அபிப்பிராயத்தைக் கோருகிறேன்.

வஜ்ரபஹு:—என்னைத் தாங்கள் வினவுகின்றமையின் யான் விடையளிக்கக் கடமைப்பட்டவன். அவனருளிய அறநூன் முறைமையைப் பின்பற்றிச் செல்வாரை யவன் காக்கக் கடமை பூண்டவன் என்னும் ஸத்யம் இவ்வேந்தரி னுள்ளத்தே ஊன்றியிருக்க இளமையிலேயே யதைக் கற்றுணர்ந்த உங்களைப்போன்றவர்கள் சிலகால மிவரைச் சிநேகமுறையில் தங்களிட மிருக்கச் செய்து பழக்கி யனுப்புவராயின், அதுவே, உலகத்தின் க்ஷேமத்தை யுத்தேசித்தும், இவருடைய க்ஷேமத்தின்பொருட்டும், இவரடையக் கூடியதண்டனை யாகும். இவரும் அத்தண்டனையை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவராவர். (ஹேமாதர் வெட்கித் தலைகுனிதல்)

பத்ராயு:—பூபதி! தங்களைப்போன்றூர் எனக்குத் தந்தை முறையிலிருக்க, யான் ஸதா அவர் சமீபத்திருந்து

கொண்டு, அவர்வாய் வழிவரும் சொற்களால் தர்மசாஸ்த்ராதிகளின் ரஹஸ்யத்தை எளிதில் தெரிந்துகொள்ள மிகவும் அவாக்கொண்டுள்ளேன். இதோ, தங்களிடமிருந்து யான் தற்கால மறிந்துகொண்ட காருண்யத்தின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். (நமஸ்கரித்தல்)

வஜ்ரபாஹு :—ஆ! என்ன! நீங்களுமா என்னை வணங்குவது!

ஸுநயன் :—அவர்மட்டிலுமன்று. அரசே! யானும் நமஸ்கரிக்கின்றேன். (நமஸ்கரித்தல்) என்நண்பர் உம்மைப் பிதாமுறையி லடையக் கோரியது போல் யான் கோருவேனல்லேன். அவர்வணங்குபவர் யாவரையு மவருடனிருந்து வணங்கும் பாக்யம் எனக்குக் கிடைத்தலே யான் வேண்டுவது.

வஜ்ரபாஹு :—யான் இதுகாறும் மகப்பேறடைந்தேனில்லை. இனி, வயோதர்மத்தை யநுஸரித்து, அதைப் பெறும் பாக்யமும் எனக்கில்லை. ஆதலின், புத்திரனைக்காட்டிலும் பன்மடங்கு விசேஷித்த அன்பை என்னிடம் நீர் காட்டியது மன்றி உமதுகோரிக்கையும் அதை யநுஸரித் திருப்பதால், யானும்மைத் தந்தைபாவத்துட னணைக்கின்றேன். (அணைத்தல்) எனக்குப்பிறகு இவ்விராஜ்யத்தை நீரேயடைவீராக! (ஸுநயனைப்பார்த்து) இவரை யநுஸரிப்பதே உம் கடமையாக நீர் கொண்டமையின், இவர்பொருட்டு யானும்மையும் அணைக்கக் கடமைப்பட்டுளேன். (அணைத்தல்)

பத்ராயு :—ஹேமாதரே! நீர் சிலகாலம் இவ்வரசரிடம் வஸித்திருத்தல் நலமெனெ எங்களுக்குத் தோன்றுகிறது. யுத்தத்தில் இறந்தவரும் பின்முதுகு காட்டி யோடிய வருமன்றி, உம்முடன் கைதிகளாய்ப் பிடிக்கப்பட்ட ஏனையோர் இப்பொழுது விடுதலையடைந்து உம் நாட்டை யடையப்பெறு

வர். நீர் இவ்விடமிருக்கும் வரையில் உமது நாட்டை வஜ்ர பாஹு அரசரே தம் ராஜாங்கத்தினரைக்கொண்டு ஆண்டு வருவர். வஜ்ரபாஹு அரசரே! இவ் ஹேமமாதர் தர்ம முறையை நன்குணரும்வரையில் அவருக்காயுதமளியாதிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். அங்ஙன மிருப்பிராயின், காலநேமியாரும் யுத்தகளத்தில் என் நண்பன் வாளால் மாண்டமையின், உமக்கிவ் வுலகில் வேறு பகைவரிலர். நான் சிறிதுகாலம் சென்று உம்மையும் உம்முடன் இவ்வேந்தரையுங் காண்பேன். சென்று வருகிறேன். உத்தர வளியும்.

வஜ்ரபாஹு :—நீங்கள் சிலகாலமாவது என் உபசாரணைகளை யேற்றுப் பிறகு செல்லலாகாதா? யான் தற்கால மடைந்திருக்கும் ஸுகம் சிறிதுகாலமாவது நீடித்திருத்தலாகாதோ ?

பத்ராயு :—அரசே! உம்மைவிட்டுப் பிரிவது எங்களுக்கு மிகவும் துக்ககரமாகவே யிருக்கிறது. ஆயினு மிச்சமயம் நாங்கள் அவச்யம் ஸ்வர்ணபுரிக்குச் செல்லவேண்டியிருக்கிறது. தாங்கள் மன்னித்து விடையளித்தல்வேண்டும்

வஜ்ரபாஹு :—அவ்விதமாயின் உங்களை யான் வற்புறுத்தவில்லை. கூடிய சீக்கிரத்தில் நீங்கள் அவகாசம் ஏற்படுத்திக்கொண்டு, உங்களுடைய பந்துமித்ரர்களுடன் இங்குவந்து, சிலகாலமாவது என்னுடன் வஸித்தல் வேண்டும்.

பத்ராயு :—அவ்விதமே செய்கிறோம்.

ஸுநயன்:—ஈசன் சீக்கிரம் உமது கோரிக்கையை நிறைவேற்றுவார்.

வஜ்ரபாஹு :—சென்று வாருங்கள்.

(பத்ராயுவும் ஸுநயனும் செல்லல்)

அங்கம் 4.

களம் 5.

இடம்:—மாவிந்த நகரம்—சந்த்ராங்கதன் சபாமண்டபம்.

சந்த்ராங்கதன் :—ரிஷபயோகியரே! தற்காலம் தங்களுக்கு யானியற்ற வல்லது யாதாயினு முளதோ? கூறுவீராயின், செய்துமுடிக்கும் சித்தமுடையோனாயிருக்கிறேன்.

ரிஷபர் :—ஆம். ஓராசகுமாரனின் விவாஹ விஷயமாயுன்னை யணுகி யிருக்கிறேன். உனக்குப் புதல்வி யொருத்தி விவாஹத்துக்குரிய பருவமடைந் திருப்பதை யானறிவேனாதலின், அவ்விஷயத்தில் உன்சித்தத்தை யறியவே தற்காலம் இங்கு யான் வரநேர்ந்தது.

சந்த்ராங்கதன் :—அவ்விராஜ குமாரன் யாவனோ?

ரிஷபர் :—தசார்ஹ தேயத்துமன்னன் புதல்வன்; பத்ராயு எனும் நாமமுடையான்; குணஜ்ஞன்; ப்ரதாபவான்; ரூபவான்; உன் புதல்விக் கேற்றவரன்.

சந்த்ராங்கதன் :—யோகியரே! என்ன? தசார்ஹ தேசத்துமன்னன் வஜ்ரபாஹு எனக்குப் பரமமித்ரன். அவனுக்குப் புத்திரனில்லை யென்பதை யான் நன்கறிவேன். இரண்டு தசார்ஹ தேசமிருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை.

ரிஷபர் :—வஜ்ரபாஹு வேந்தனே தனக்குப் புத்ரன் ஒருவனுளனென்பதை யறியானாதலின், அதை நீ யறியாதது எங்ஙன மதிசயிக்கத் தக்கதாகும்? அவனுக்கு ஸுமதி யென்னொரு இல்லாளிருந்ததை நீ யறிவாயன்றோ?

சந்த்ரா :—ஆம், நன்கறிவேன். அவளும் அவளுதரத்திற்பிறந்த ஓராண்குழவியும் கொடுநோய்பற்ற இறந்தனர் என்ற வதந்தியுளது.

ரிஷபர் :—அவர்க ளிருவரும் உயிருடன், நோய் நீங்கி, அழியா யௌவன மடைந்தவராய், ஸ்வர்ணபுரியில் பத்மாகரனுடைய காப்பில் தற்கால மிருந்து வருகின்றனர். சிறிது காலத்துக்கு முன், திடீரென ஹேமரதன் மங்களாபுரிமீது படையெடுத்துச் சென்று, வஜ்ரபாஹுவை வென்று, அவனைக் கைதியாக்கிக் கொண்டுசென்ற செய்தியை நீ யறியாயா?

சந்த்ரா :—அச்செய்தியை யானறிந்து வஜ்ரபாஹுவை விடுவிக்கவும், ஹேமரதனைத் தக்கபடி தண்டிக்கவும் ஒரு பெரியஸேனையைத் திரட்டிக்கொண்டிருக்குங்கால், யாவரோ இருவர் தெய்வீக வாற்றலால் வஜ்ரபாஹுவை விடுவித்து, ஹேமரதனைக் கைதியாக்கி யவனிட மொப்புவித்ததாக வறிந்தேன்.

ரிஷபர் :—சந்த்ராங்கதா! அவர்க ளிருவரும் யான் கூறிய அப்பத்ராயுவும், அவன் நண்பனும் பத்மாகரன் புதல்வனுமான ஸுநயனுமே. ஆயினும், பத்ராயு தன் புத்திரன் என்பதை வஜ்ரபாஹு இதுவரையு மறிந்திலன். இனிச் சிறிது காலத்தி லறிவான்.

ஸீமந்தினி :—இது வியப்பினும் வியப்பே! ப்ரியதமா! வஜ்ரபாஹு அரசன் நல்ல பாக்யவான்.

சந்த்ரா :—நமது தனயை அப்பத்ராயுவைக் கணவனுக வடையப்பெறின், நாமும் பாக்யவந்தர்கள் என்றே நினைப்பேன்.

ஸீமந்தினி :—ஆம், யானு மவ்விதமே நினைக்கின்றேன். ஆயினும், நம்புதல்வி கன்னிப்பருவங் கடந்தனளால், அவளையும் அநுஸரிப்பது நலமாகும்.

ரிஷபர் :—குழந்தாய் ! இப்பத்ராயுவும் உன் புத்திரி கீர்த்திமாலினியும் தம்பதிகளா யிருந்து பரம க்ஷேமத்தையுமடையவேண்டியே பிறந்துளார் என்னும் ரஹஸ்யத்தை யான் நன்கறிவேன். ஆதலி னிவ்வரனை அங்கீகரிக்கும் விஷயத்தில் உன்புத்திரி ஒரு தடையும் கூருள். அவளது விருப்பத்தை நீங்க ளறிந்துகொள்வதில் எனக்கு ஆக்ஷேபனை சிறிதேனுமில்லை.

ஸீமந்தினி:—இதோ, யான் சென்று கீர்த்திமாலினியை யழைத்து வருகிறேன். ஆ! இதோ, அவளே வந்து விட்டனள் !

கீர்த்திமாலினி :—தந்தையே ! நமஸ்கரிக்கின்றேன். (சிவயோகியாரைக் கண்டு) ஸாதுவே ! நமஸ்கரிக்கின்றேன். உமதுவரவு எம் நகர்க்கு நல்வரவே யாகுக!

ரிஷபர் :—உனக்கு ஸகலமங்களமு முண்டாவதாக ! குழந்தாய்! நீ விவாஹத்திற்குரிய பருவத்தினளா யிருப்பதறிந்து, வீரலக்ஷ்மீ ஸம்பன்னனையும், ஸமஸ்தலக்ஷணங்களும் பொருந்தியவனையும், ஸாதுக்களுக்கு மித்ரனையும், அதர்மநெறி செல்வார்க்குப் பரமசத்ருவாயும் இருப்போனை . அரசிளங்குமரன் ஒருவனை யுன்னுடன் வதுவையில் சேர்த்துவைக்கு மெண்ணத்துடன் இங்குயான் தோன்றியுள்ளேன். உன் தாய்தந்தையரது ஸம்மதமும் பெற்றேன். உன் அபிப்பிராயத்தையும் இவ்விஷயத்தில் யாமறியலாமோ ?

கீர்த்தி :—ஸாதுவே! ஈசனருளால் நமக்கு நிகழ்வன யாவும் நம்நலத்தின்பொருட்டே என ஆன்றோர் கூறுப. அவனருளாலன்றி நம்மாலாவது யாதொன்றுமில்லை. என்னைப் பெற்றுப் பிரியமுடன் வளர்த்துவரும் தாய்தந்தையர்களும், உலகக்ஷேமத்திற் கெனவே வாணாட்களைக் கழித்துவரும் தங்களைப்போன்ற ஸாதுக்களும் ஸம்மதித்து என் விஷயத்திற் செய்வனயாவும் அப்பரமன், மறைந்து நின்று என் நலத்தின்பொருட்டு இயற்றுவதேயாகும். ஆதலால், உங்கள் தீர்மானத்தில் யான் சற்றும் குறுக்கிடேன்.

ரிஷபர் :—நன்று கூறினை! சந்த்ராங்கதனுக்கும் ஸீமந்தினிக்கும் நீயே ஏற்றபுதல்வி! உன்னை இல்வாழ்க்கைத் துணைவியாயடையும் அப்பத்ராயு பாக்யவானே. அவனைக் கணவனாயடையும் நீ பரமபாக்யவதி யென்பதை நாளடைவில் நீயே நன்கறிவாய்.

ஸீமந்தினி :—என் கண்ணே! உன்மதிக்கு மிகவும் மெச்சினேன்.

சந்த்ரா :—குழந்தாய்! நீ சென்றுவருவை. (கீர்த்திமாலினி செல்லல்) யோகியாரே! முகூர்த்தத் துக்குரிய ஓர் உத்தம தினத்தைத் தாங்களே குறிப்பிடல் வேண்டும். ஆயின், இவ் விஷயத்தில் வஜ்ரபாஹுவின் அநுமதியை யாமடைய வேண்டாமா? அதற்கு யாது செய்வது?

ரிஷப :—சந்த்ராங்கதா! நீ யதைப்பிற்றிச் சற்றும் யோசிக்கவேண்டாம். எல்லோர்க்கும் திருமணப் பத்திரிகை யனுப்பிவிட்டு வஜ்ரபாஹுவுக்குமட்டில் நிருப மொன்று வரைவாய். அந்நிருபத்தில், உனது புத்திரி கீர்த்திமாலினியை, ஹேமரதனைவென்று அவனைக்காத்த அரசகுமாரனுக்கு வதுவையிலளிக்கப்போவதாகத் தெரிவிப்பாயாயின், யாவர்க்கும் முன்னதாக அவன் இவ்விடம் வந்து சேர்வன். யானும்

பத்ராயு, ஸுமதி, பத்மாகரன் முதலியவர்களுடன் சீக்கிரம் இவ்விடம் வந்து சேர்கிறேன். பிறகு, யாவற்றையும் நாம் அவனுக்குத் தெரிவிப்போம். இன்றைக்குப் பதினைந்தாம் தினம் முகூர்த்தத்துக்குரியதே. விவாஹத்திற்கு முன் இயற்றவேண்டுவன யாவையும் நீ தாமதமின்றி கைக்கொண்டு செவ்வனே இயற்றிவருவாய். யான் ஸ்வர்ணபுரிக்குச் சென்று வருகிறேன்.

சந்த்ரா :—அவ்விதமே சென்று வருவீர்.

ரிஷபர் :—ஈசனருள் வாழி! அவனடியார் வாழி!

(மறைதல்)

அங்கம் 4.

களம் 6.

இடம் :—மாவிந்தநகரம் — அரசமாளிகைக் கொலு மண்டபம்.

வஜ்ரபாஹு :—சந்த்ராங்கதா ! பௌருஷத்திலும் ஸத்யத்திலும் வனப்பிலும் தனக்கு நிகர்தானேயாய் நின்ற புண்யச்லோகனும் சக்கரவர்த்தி ஸார்வபௌமன் நளனுக்குப் பௌத்ரனு யுதித்தாய். அவன் குணாதிசயங்கள் யாவும் உன்னிடத் துதித்திருக்கின்றன. நாகராஜன் தக்ஷகனுக்குப் பரமசிவனது மஹிமையை விளக்கிக்காட்டி அவனால் குரு முறையில் வணங்கப்பெற்றாய். தன் கற்பின் சக்தியாலும், ஸோமவார வ்ரதமஹிமையாலும், இறந்தோனான உன்னை யுயிர்ப்பித் தடைந்தாளான பாக்யவதியாம் ஸீமந்தினியை மனைவியா யடைந்தாய். பராக்கிரமத்திலும் அறிவிலும் சிறந்த புத்ரர்கள் எண்மரை யடைந்தாய். தாய்தந்தையரிரு வரின் உருவத்தையும் குணத்தையும் திரட்டி யுருக்கி வார்த் திட்ட பதுமைபோன்ற கீர்த்திமாலினியைப் புதல்வியா யடையப் பெற்றாய். உருவத்திலு மாண்மையிலு மருளிலும் ஞானத்திலும் ஷண்முகனையே நிகர்த்த பத்ராயுவை யிப் பொழுது மருமகனா யடைய விருக்கிறாய். இனி, நீ விரும் பக்கூடிய பாக்யம் இவ்வுலகில் யாதுளது? உன்னைக் காட்டி லும் பாக்யவான் யாவனுளன்?

சந்த்ரா :—மித்ரா ! நீ கூறியவாறு யான் பலவகைகளி லும் பாக்யவானே. ஆயினும், அப்பத்ராயுவைப் புத்திரனா

யடையப்பெற்ற ஒருவன் என்னினும் பன்மடங்கு பாக்கிய வான் என்றே நினைக்கிறேன்.

வஜ்ரபாஹு :—சந்த்ராங்கதா ! நீ என்னைப்பற்றி ஸம்சிப்பதாய்யானறிகிறேன். நாங்களிருவரும் ஸ்வீகரித்துக் கொண்ட முறையை யுன்னிடம் அப்பத்ராயு தெரிவித்திருத் தல் வேண்டும். எனக்கு உண்மையில் அவன் புதல்வனல்லனு யினும், என்னைமறியாது ஓரளவுகடந்த வாத்ஸல்யம் எனக் கவனிடந்தோன்றியுளது. அவனுடனிருந்த ஒவ்வொரு நிமி ஷமும் எனக்கு ஒரு யுக ஸ்வர்க்க வாழ்க்கைபோன்று ஆனந் தத்தை விளைவித்தது. என்னை அவன் விட்டகன்ற இச் சின் னுட்களை யான் எவ்விதம் கஷ்டத்துடன் கழித்துவந்தே னென்பது ஈசன் திருவுளமறியும். அன்ப ! யான் அப்பத் ராயுவை உண்மை ஆத்மஜனு யடையாவிடினும், அம்முறையி லவனை ஸ்வீகரிக்க நேர்ந்ததைப் பெரும் பேறெனவே கொள் வேன்.

சந்த்ரா :—வஜ்ரபாஹு! ஈசனருளை யாரே யறிவர்! அப்பத்ராயுவிற்கு முன்னிடம் ஓர் அளவுகடந்த பற்றுத லிருப்பது ஆச்சரியப்படத்தக்கதன்றே? மித்திரா ! நீ வாராமலிருப்பையாயின், இவ் விவாஹம் நடந்தேறு மென்று நினைக்கிருய் ?

வஜ்ர :—அவன் என்னிடங்கொண்டுள்ள தந்தை பாவமே என் வாத்ஸல்யத்தைப் பன்மடங்கு மவன்பால் விருத்தியாக்கி வருவது. நண்ப ! அதிகம் கழறுவதேன் ? அவனை யான் புத்திரனுகக்கொண்டேன். வீரரது வம்சத் துத் தோன்றியவனவன் என்பதில் யாதொரு ஸந்தேகமு மில்லை.

சந்த்ரா :—மித்ரா ! பத்ராயு அரசவம்சத் துதித்தவ னென்பதை யானறிவேன். அவன் தந்தை, தற்காலம், உயி ருடனிருக்கிறுன்.

வஜ்ர :— என்ன ? அவ்விதமாயின் பத்ராயுவும் அவன் தாயும் பத்மாகரனுடைய பாதுகாப்பில் இருந்துவரக் காரணம் யாதோ ?

சந்த்ரா :—அவர்களது விதியே காரணம். அப்பத்ராயு சிறு குழந்தையா யிருந்தபோது, அவனு மவன்தாயும் கொடு நோயாற் பீடிக்கப்பட்டிருந்ததாயும், அதனல் வெறுப் படைந்த அரசன் அவர்களைக் கானகத்தில் விட்டுவர உத்தர விட்டதாகவும் ஓர்வதந்தி.

வஜ்ர :— என்ன ? அப்பத்ராயு யார்?...........அவன் தந்தை ?..............(ரிஷபயோகியார் பத்ராயுவுடன் வருதலும், சந்த்ராங்கதனும் வஜ்ரபாஹுவும் தங்களாஸனம் விட்டெழலும்)

சந்த்ரா :—மித்ரா ! ஈசன் திருவருளை முன்னிட்டு உனக்கு மகப்பேறளித்தவரும், பத்மாகரனது கிருஹத்தில் நோயின் கொடுமையை யாற்ருது உயிர்துறந்த இப்பத்ராயுவை யுயிர்ப்பித்தவரும், இவனுக்கும் இவன்தாய்க்கும் நோயை நீக்கி நீங்காயௌவன மருளியவரும், பிறகு இப்பத்ராயுவுக்குக் குருவாயமர்ந்து நீதிமார்க்கங்களையும் பரம ரஹஸ்யமான சிவகவச மந்த்ரத்தையு முபதேசித்துப் பன்னிரண்டாயிரம் யானை பலத்தையும் கட்கசங்காயுதங்களையும் ஆசிர்வதித்தவரும் இவரே. இவரே ரிஷப யோகியராவர். உனக்கு மகப்பேற்றைத் தடுத்துவந்த கொடுவினையைத் தாங்கி யனுபவித்த பதிவ்ரதைகளில் அக்ரஜையான உன் பத்னி ஸுமதியின் கருவிற் ரேன்றியவனே இப்பத்ராயு. உன் ஆத்மஜன்.

வஜ்ர :—ஹா! ஹா! பத்ராயு! ஸுமதி! (வீழ்தல்) (பத்ராயுவும் மறைந்திருந்த ஸுமதியும் இருபுறமும் தழுவிக்கோடல்)

"கடுங்கானத் திடைதனியே நமைவிடுத்து
வரப்பணித்த கடியநெஞ்சக்
கொடும்பாவி தனைமகதன் கொல்லாம
லுயிரளித்த குமாரவீண்டு
நடுங்காமலுயிர் பொருந்தப் புல்லநீ
கருணைசெய்தாய் ஞாலமென்னை
யடுங்கால னென்பதலா லாசனென
சொலத்தகுமோ வந்தோவந்தோ."

ஹா! ஸுமதி! பத்ராயு! உங்களுக் கித்தகைய தீங்கிழைத்த இக்கொடும்பாவி இனியுயிர்வாழ்ந்திருத்தலாகாது. (தன் னுறையிலிருந்து வாளையுருவி தற்கொலைபுரிந்து கொள்ள முயலுதலும் ஸுமதி காத்தைப்பற்றிக் கொள்ளலும்)

ஸுமதி :—(பாடுதல்)

இராகம், முகாரி : தாளம், ஆதி.

பல்லவி.

மாண்டிடத் துணிந்தீரோ மன்னவரேறே (மா)

அநுபல்லவி.

ஆண்டகையோவித அன்புடையீ ரொன்னுள்ளம்
தாண்டுமுட்புழு வேபோல்துடித் திடவிடுத்துநீர் (மா)

சரணம்.

ஆண்டுகளீரெட்டும் மாண்டிடவே யும்மையான்
காண்டிடவே யாவலாய்வேண்டி னேன்திருவருள்
தாண்டவனார்பொற் பதம்பூண்டார் நம்மையொன்றிட
மூண்டதன்றோ நற்காலம் ஆண்டவரே ஈண்டுநீர் (மா)

பிராணகாந்தா! இதற்காகவோ யானிதுகாறும் உயிர் வைத்துக்கொண்டிருந்தது?

பத்ராயு :—எந்தையே ! இது தர்மமோ ?

சந்த்ரா :—மித்ரா ! இஃதென்ன வறிவீனம் ?

ரிஷபர் :—வஜ்ரபாஹூ ! ஈசனுனக்குத் தற்காலமளித் திருக்கும் பெரும்பாக்யத்தை நீத்து, இதைவிடப் பெரும் பாக்யத்தை இறந்து நீ யடையமாட்டுவையோ ?

வஜ்ர :—ஆ, ஸுமதி ! என்ன மதியினன் யான் ! அழலை யவிக்கவென்று நெய் பெய்திடுவார்போல், உங்களுக் கிழைத்த தீங்கின்பொருட்டு யான் தற்கொலைபுரிந்திடல் மீண்டு முங்களை யாருத் துயருக்காளாக்கு மன்றோ? என்னரு மைப்புதல்வ! உயிர்வாழ்க்கையும், நலமும், கீர்த்தியும் முற் றும் இழக்கவென்றிருந்த என்னைக் காத்த வுனக்கு யானியற் றுங்கைம்மாறு இதுவோ ? முனிபுங்கவ ! ஈசனருளே யுருக் கொடுவந்ததுபோன்ற தங்கள் பேருதவியைப் பொருட் படுத்ாது, தங்களுக் கென்ன அபசாரம் செய்யத் துணிந் தேன் ! மன்னித்தருளல் வேண்டும். (வாளை யுறையிலிட்டு அவரை நமஸ்கரித்தலும், ஏனையோரும் அவ்வணமே செய் தலும்)

ரிஷபர் :—ஈசனருள் வாழி ! அவனடியார் வாழி !

அங்கம் 4.

களம் 7.

இடம் :—மாவிந்தநகரம்—அரண்மனையின் விவாஹ மண்டபம்.

(வதூவரர் மாலையிடலும், யாவருமாசி கூறலும்)

ரிஷபர் :—குழந்தாய்! ஸுமதி! உன்முகத்தில் இப்பொழுதும் சிறிது வாட்டக்குறி காணப்படுவதேன்?

ஸுமதி :—தந்தையரே! கிடைத்தற்கரிய பெரும் பாக்யத்தைத் தற்காலம் யான்பெற்றுளே னாயினும், யானளவிலா வருத்தத்து ளாழ்ந்திருந்ததைச் சகியாது ஆவியை விடுத்த என்கண்மணி உக்ரஸேனன், உயிருடனிருந்து, இக்காட்சியைக் கண்டு களித்திலனே என்ற எண்ணம் என் மனத்தை யொருபுறம் வாட்டுகிறது.

ரிஷபர் :—குழந்தாய்! உன்னுடன் கஷ்டத்தை யனுபவித்த உக்ரஸேனன், இப்பொழுது, மாறுவேடத்துடன், உன் க்ஷேமத்தா லுண்டான சந்தோஷத்திலு மீடுபட்டிருக்கிறான் என்னும் ரஹஸ்யத்தை முக்காலமுமுணரும் யானறிவேனே யன்றி நீ யறியாய். ஆயினுமுன் ஸந்தேகந் தீர்ந்து நீ உண்மையை யுணர, என் ஆத்மசக்தியைத் தற்கால முனக்குதவுகிறேன். (அவள் சிரத்தில் கரத்தைவைத்தல்)

ஸுமதி :—ஹா! என் கண்மணி! உக்ரஸேனா! (ஓடிச்சென்று ஸுநயனை யணைத்தல்)

ரிஷபர் :—ஸுமதி! ஈசன் திருவுளத்தன்மை இத்தகையதென் றிப்பொழுதுணர்ந்தனையா? பொறுக்கத் தகாத

பாபக்ருத்யத்தை யுன்னிடத்திலும், உக்ரஸேனனிடத்திலும் இயற்றிய பிரேமாவதி உக்ரஸேனனது ஆவியால் பயமுறுத் தப்பட்டு தன்னைத்தானே தண்டித்துக்கொண்டாள். மற்று, ப்ரேமாவதிக்குத் துணையாய் நின்று, உங்களுக்குத் தீங் கிழைத்த காலநேமி தன்வாளால் யுத்தகளத்தில் மாளவும், உங்களிடத்தில் தான்மேற்கொண்ட அன்பே காரணமாக நிரந்தரம் உங்களுடன் சேர்ந்து வாழவும், உங்களைக் காத்த பத்மாகரனது மனங்குளிரவும், நீ என்னிடம் வேண்டிக் கொண்ட முதல்வரம் கைகூடவும் அவ்வுக்ரஸேனன் மறு பிறப்பில் ஸுநயனாய்த் தோன்றநேர்ந்தது. உன்னுடைய புத்ரனை யுயிர்ப்பிக்கப் பெற்றானதலின், உன்னால் கோரப் பட்ட இரண்டாவது வரமுங்கைகூடியது. நீயும் உன்புத் திரனும், மறுபிறப்படைந்த உக்ரஸேனனும் ஒன்றுகூடினீர் களாதலால், உனது நான்காம்வரமுங் கைகூடியது. நீ என் பால் கோரிய மூன்றுவதுவரமு முனக்குக் கைகூடிய தென் பதை விளக்க மீண்டும் என் ஆத்மசக்தியை யுனக்குதவு கிறேன். (அவள்சிரசில் கரத்தை வைத்தல்)

ஸுமதி :—ஹா பிங்களே! (ஓடிச்சென்று கீர்த்திமாலி னியை அணைத்தல்)

ரிஷபர் :—ஆ! தெரிந்துகொண்டனையா? இப் பிறப் பில் பத்ராயுகீர்த்திமாலினியாய்த் தோன்றிய இத்தம்பதி கள் முற்பிறப்பில் என்னாலநுக்ரஹிக்கப்பட்ட மந்தாரனும் பிங்களையுமே யாவர்.

ஸுமதி :—எல்லாம்வல்ல கடவுளே யோகியுருவந் தரித்து எம்மைக் காக்கவந்ததோ?

ரிஷபர் :—குழந்தாய்! இதுகாறுமுனக்கு நிகழ்ந்தன யாவும் நடத்தியவன் ஸர்வாந்தர்யாமியாமீசனே யல்லால், அணுவளவேனு மென்னாலியற்றப்பட்டதன்று. அருட் பெருங்கடலாம் அவன் உங்கள்மாட்டு இவைகளை யெல்லாம்

நிகழ்த்த யான் அவனது கருவியாய் நின்றேன்: அண்ட சராசரங்களுக்கெல்லாம் அதிபதியாம் 'அவனன்றி யோரணுவுமசையாது.' அவன், பாபகர்மங்களைப் புரிவார் மாட்டும் மிக்கவருள்பூண்டு, தக்கபடி யவரைத் தண்டித்துப் பின்னர் ஆட்கொள்ளும் இயல்புடையன். அவன் இயற்றுவன யாவும், தாய் குழவியின் நன்மையைக் கருதி மருந்தளித்திடல் போன்று, நம்க்ஷேமத்தின்பொருட்டேயாகும். இவ்வுண்மை ஞானத்தை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துள்ளவர்கள் இகத்தில் இன்புற்றவாழ்ந்து, பரத்தில் அவன் திருவடியடையப்பெறுவர்.

வஜ்ரபாஹு :—(சிவயோகியர் பாதத்தில் வீழ்ந்து) ஐயனே ! இவ்வுத்தமியை இளங்குழவியுடன் கானகத்தில் விட்டுவர உத்தரவிட்ட யான் உய்யும் வழியருளீரோ ?

ரிஷபர் :—அரசனே! உன்னிடம் யாதொரு குற்றமுமிலது. உன் மனைவி யுனக்கு மகப்பேறடைதலைத் தடுத்துவந்த கர்மாக்களின் பயனைத் தானனுபவித்து உனக்கு க்ஷேமத்தையளிக்க ஸங்கற்பித்துக் கொண்டாளாதலின், அதையநுஸரித்தே உன்னாணை யேற்பட்டது. ஆதலின், அக்குற்றம் உன்னைப் பற்றாது. ஆயினும், பிறகு உனக்கு நேர்ந்த கழிவிரக்கமும், ஹேமரதனிடம் நீயடைந்த தோல்வியும் நீ இயற்றிய கருமத்துக்கடைந்த தண்டனையென ஒருவாறு கொள்ளினுமியையும். இனி, நீ சிலகாலம் உன் பந்துமித்ரர்களுடன் இன்புற்றுவாழ்ந்து, பின்னர் வானப்பிரஸ்தாச்ரமம் புகுந்து, நிமலனடிதொழுது நற்கதி யடைவாய். சந்தராங்கதா! உனக்கு யான் ஒன்றும் கூறவேண்டுவதில்லை. வீமந்தினீ! நீ கற்பின் சக்தியைக் கண்கூடாகக் கண்டவளாதலின், உனக்கும் யான் கூறவேண்டுவது ஒன்றுமில்லை. பத்மாகரா! மந்தாமினீ! நீங்கள் ஸுமதியையும் பத்ராயுவையும் காத்து ரக்ஷித்ததில், எங்களனைவோரையுங் காத்தவராவீர். புராணங்களிற்

புகழப்படும் பாக்யத்தையு மடைவீர். பத்ராயு! எக்காம மேலீட்டினால் பூர்வஜன்மத்தில் நிவ்ருத்தி மார்க்கத்தினின்று நீ விலக நேர்ந்ததோ, அவ்விச்சை யுன்னைப் பின்தொடரா திருக்குமாறு காத்துக்கொள்வாய். சிவகவச மந்த்ரத்துக்குப் பிரதமசிஷ்யன் நீயே யாதலின், சிவகவச முள்ளளவும் உன் புகழும் இவ்வுலகத்து நீடித்திருக்கும். மாயையின் வசப்பட்டு உன் பலத்தையும் அஸ்த்ரசஸ்த்ரங்களையும் உனக்கே சத்ருக் களாக வாக்கிக்கொள்ளாதே. பாம்பின் விஷம் பாம்பிற்கே பகை யென்றறி. பசுக்களிடத்தும், தெய்வகாரியங்களிடத் தும், ஆசார்யரிடத்தும், அந்தணர்களிடத்தும் மிகவும் பக்தி யுடன் நடந்துகொள். இவைகளுக் காபத்துக்கள் வரின், உனது உயிரைத் தந்தாவது நீ காக்கக் கடமைப்பட்டவன் என்பதை யுறுதியாய்க் கொள். ஸர்வாந்தர்யாமியா மீசன் எந்தஜீவராசியின் ஹ்ருதயத்துள்ளும் வஸித்துள்ளானாத லின், அவனை யப்புறப்படுத்தும் கொடிய கொலையைத் தக்க காரணமின்றி மேற்கொள்ளாதே. ஈசன் தன் குணங்களைக் கைப்பற்றியுள்ளாரைத் தானே வலுவில்வந்து ஆட்கொள் ளும் இயல்புடையன் என்றறி. கீர்த்திமாலினீ! புண்யவதி! முன்ஜன்மத்தில் நீ கணிகையர் குலத்துதித்தும் கற்பைக் கைப் பற்றி யொழுகினை யாதலின், இப்பொழுது, ஸீமந்தினிக்கு மகளாயும் ஸுமதிக்கு மருமகளாயும் இருக்கும் நிலையில், யானுனக்குப் போதிக்கத்தக்கது யாதுளது? பத்ராயுமுத லாம் யாவரும் உன்னால் மஹிமையடைபவரேயாவர். ஸுநயா! நீ உத்தமருளுத்தமன். பத்ராயுவைச் சாயையே போன்று பின்பற்றிப் புகழும், கீர்த்தியும், நலமுமடைந்து, இறுதியி லீசனடி யடைவாய். ஈசனருள் வாழி! அவனடி யராம் நீங்கள் அனைவரும் வாழி! (அந்தர்த்தான மடைதல்)

அங்கம் 5.

களம் 1.

இடம் :—மங்களாபுரி—அரண்மனை.

பத்ராயு :—கீர்த்திமாலினி ! யான் இப்பொழுது கானகத்திற்கு வேட்டையாடச்செல்ல எண்ணமுடையவனா யிருக்கிறேன். நீ விரும்பக்கூடியது யாதாயினு முண்டோ? கூறுவையாயின், உன் விருப்பத்தைப் பூர்த்திசெய்விப்பேன்.

கீர்த்திமாலினி :—ப்ராணகாந்தா ! தாங்கள் சிலகாலமாய் அடிக்கடி வேட்டைக் கென்று கானகம் செல்கிறீர்கள். ஆதலின், நாட்டினிடத்தில் தங்களுக்கு யாது காரணம்பற்றியோ வெறுப்புண்டா யிருத்தல்வேண்டும். அன்றேல், தாங்கள் செல்லும் காட்டகத்திலாவது தங்கள் மனத்தை வயப்படுத்தும் அபாரசக்தி யிருத்தல்வேண்டும்.

பத்ராயு :—யாது கூறினாய்? நாட்டினிடம் வெறுப்பா? அஃது எள்ளளவேனு மெனக்கில்லை. மற்று, நீ கூறியபடி வனத்திலுள்ள காட்சிகள் மனோஹரமானவையே. காந்தே! அடவியில் எவ்விதக் கட்டுக்கு மடங்காமல், ஸ்வேச்சையாய், மிருகங்களும் பக்ஷிகளும் கடவுளாலவைகளுக் கருளப்பட்ட ஆகாராதிகளை யுட்கொண்டு, சுதந்தரத்துட னிருப்பதைக் காணின், கடவுள் மனிதர்களிடம் சற்று விலகியே இருப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகாயத்தை யளாவியிருக்கும் விருக்ஷங்களின் காம்பீர்யமும் நிலத்திலும், நீரிலும் காணப்படும் மலர்களின் வனப்பும், நறுமணமும், பறிப்பவ

ரின்றிக் கொத்துக் கொத்தாய்த் தொங்கிக்கொண்டிருக்கும் பழவகைகளின் காட்சியும், மலர்களினின்று பெருகும் நற விணையும் கனிகளின் ரஸத்தையும் சுவைத்துக் களிகூர்ந்து ப்ரமரங்களும் பக்ஷிகளும் ப்ரணவநாதத்தை யொத்து ஒலித் திடும் ஒலியும், நேரே அநுபவித்தாநந்திக்கத்தக்கனவே யன்றிப் பிறர்க்கு எடுத்துரைக்கத் தக்கனவாமோ?

கீர்த்திமாலினி :—ப்ராணபதி! இப்பொழு தென்னை உண்மையைக் கூற விடுகிறீர்களா?

பத்ராயு :—ப்ரியே! நீ கூறுவதை யுன்னுங்கால், வெகு காலமாய் யாதோ ஒருவிஷயம் உன்னை வருத்திக்கொண் டிருப்பதாய்த் தோன்றுகிறது. என்னிடமும் நீ ஒளிக்கக் கூடிய ரஹஸ்ய மொன்றிருக்குமாயின், அஃது ஆச்சர்யத் தினும் ஆச்சர்யமே. சீக்கிரமென்னை யறியவிடு.

கீர்த்திமாலினி :—நாதா!.....சொல்லலாமா?...

பத்ராயு :—ஏன் தயங்குகிறாய்? கீர்த்திமாலினீ! இது என்ன மழலைச்சொல்!

கீர்த்திமாலினி :—உங்களுக்கோ, ரிஷபயோகியாருளிய அபாரசக்தி யிருக்கிறது. காட்டிலோ, கஷ்ட மென்பதையே யறியாது ஜீவராசிகள் குதூஹலத்துடன் வஸித்து வருகின் றன. பகுத்தறிவில்லாத அவைகள், காரணமின்றித் தங்கள் பலத்தை யறியாது எதிர்த்துவருமாயின், தாங்களவைகளைக் கொல்வீர்களன்றோ? தாங்கள் காட்டுக்குச் செல்லல்வேண் டாம்.

பத்ராயு :—ஆ! மங்கையர்க்கரசி! என்ன காருண்யம்! என்ன தயை! என்ன இரக்கம்! இதுபோன்றதன்றோ கட் வுட்டன்மை! கீர்த்திமாலினீ! உன்னை மனைவியா யடைந்த யான் எவ்வளவு பாக்யவானா யிருந்திருத்தல் வேண்டும்?

கீர்த்திமாலினி :—ப்ராணகாந்தா ! நீங்கள் காட்டிற் கினிச் செல்லமாட்டீர்களே ?

பத்ராயு :—ப்ரியே ! எதற்கும் நீ கவலையுறல் வேண் டாம். நம் ரிஷபயோகியர் எனக்குப் பொறுமையையும் ஜீவகாருண்யத்தையும் போதித்தபின்னரேதான் பலத்தை யும் சஸ்த்ரங்களையும் அருளினர். கானகத்தில் மிருகாதி கள் என்னை இதுவரையில் எதிர்த்து வந்தனவல்ல. இனி எதிர்த்துவருமாயினும் யான் தற்காப்புச் செய்துகொள் வேனே யல்லாது அவைகளைக் கொல்லேன். என்னிடம் ஏன் உனக்கு இச் சந்தேக முதித்தது? இதுவரையில் நான் ஜீவ ஜந்துக்களை ஹிம்ஸித்ததையாவது கொன்றதையாவது நீ கண்டிருக்கின்றனையா ?

கீர்த்திமாலினி:—அங்ஙனமாயின், தாங்கள் வேட் டைக்குச் செல்வதாகக் கூறிவருகின்றீர்களே ?

பத்ராயு :—ஆ! என்ன அறிவீன மிது ? குற்றம் என் னிடமே யுளது. ப்ரியே! எனக்கு ம்ருகவேட்டத்திற் சிறிதே னும் விருப்பமில்லை. கானகத்திலுள்ள ஆனந்தக் காட்சிக் கென்றே யடிக்கடி யங்கு செல்கிறேன்.

கீர்த்திமாலினி :—ஆயின், என் ஆனந்தக் காட்சியைத் தடுத்தல் தங்களுக்கு ந்யாய மாகுமோ ? தாங்கள் என்னிட மிருக்கும்வரையன்றோ என்காட்சி? தாங்கள் என்னைவிட்டு மறைந்தீராயின்...............

பத்ராயு:—இஃதென்ன தர்மஸங்கடம்? கீர்த்திமாலினி! உன் விருப்பம் யாது ?

கீர்த்திமாலினி :—நாதா !.........காந்தா !......யானும் தங்களுடன் வருகிறேன். உமது ஆனந்தத்தை யான் தடுப் பேனு? தங்களுடன் எங்கிருப்பினும் யான் பயப்படுவே னல்லேன்.

பத்ராயு :—கீர்த்திமாலினி! பயமுறுவோர் கானகம் செல்லலாகாது. நீ கொடிய மிருகங்களின் கர்ஜனையைக் கேட்டுப் பயப்படுவாய். உன் மிருதுவான பாதம் கற்களி லூன்றி யுன்னை வருத்தும். உன்னை யழைத்துப்போவது எனக்குப் பலவிதத்திலும் விலங்குபோட்டதுபோலாகும்.

கீர்த்திமாலினி :—நாதா! தங்களன்னையார், முன்னொரு கால், தனித்துக் கானகத்தில் விடப்பட்டாளன்றோ? என் மூதாட்டியார் தமயந்தி தேவியும் தனித்துக் கானகத்தில் சில காலம் வஸிக்கவில்லையா? நான் தங்களுடனன்றோ வரு கிறேன்? என் வேண்டுகோளைத் தாங்கள் மறுக்கலாமா?

பத்ராயு :—உன் விருப்பத்தை நான் ஏன் தடுத்திடல் வேண்டும். உன்னையு மழைத்துச்செல்கிறேன்.

கீர்த்திமாலினி :—நாதா!.....(அணைத்துக் கொள்ளு கிறாள்)

பத்ராயு :—என்ன குழந்தைபாவனை! என்ன சந்தோ ஷம்! என்ன பேதைமை! ப்ரியே! தாமதம் செய்யாதே. சீக்கிரம் செல்லல்வேண்டும்.

கீர்த்திமாலினி :—செல்வோம், வாருங்கள்.

(இருவரும் செல்லல்)

அங்கம் 5.

களம் 2.

இடம் :—மங்களாபுரியைச் சார்ந்த வனம்.

பரமசிவன் :—உமா! தற்காலம் இங்கு நாம் பத்ராயுவைப் பரீக்ஷிக்கு மெண்ணத்துடன் தோன்றி யுள்ளோம். இக்கானகத்துள்ள ஜீவராசிகள்யாவும், இப்பொழுது, நான் ஏவியமாயையின் வசப்பட்டுக் காமவெறிகொண்டு தயங்கி நிலை தடுமாற்றங்கொண்டிருக்கின்றன. பத்ராயுவும் தன் பத்னி கீர்த்திமாலினியிடம் மிக்க காதல் பூண்டிருக்கிறான். உத்தமியாம் அவ்வனிதையோ, இது பிரதோஷகால மாதலின், இப்புண்யகாலத்தை நம்மை வழிபட உபயோகியாது விஷயபோகந்துய்த்தலில் செலவிடுத்தல் தகாதென்று பன்முறையும் அவனுக்குப் போதித்துவருகிறாள். ஆயின், கற்பிற் காசியாமவள், அவன் விருப்பத்திற்கு மாறாகவிருத்தற் கஞ்சி, சிறிதுநேரத்தி லவனுக்குடன்பட்டுவிடுவள். இதுவே தக்கஸமயம். அந்தண தம்பதிகளாய் நாம் வேடந்தரித்துச் செல்வோம். மாயையை வெம்புலி வடிவமாக்கி உன்னைப் பற்றிச்செல்ல விடுப்பேன். பிறகு, அவனிடங்கடிந்து பேசி, அவன்மனையாளை எனக்கு மனைவியா யளிக்கக் கேட்பேன்.

உமா :—அகிலலோகநாயகா! அவர்களிருவருடைய தற்கால வன்யோன்ய நிலையை யுத்தேசித்துத் தாங்கள் அவர்களை இக்கடின பரீக்ஷைக் குட்படுத்தாதிருக்குமாறு யான் வேண்டிக்கொள்ளுகிறேன். இப்பரீக்ஷையில் அவர்களிருவரும் அவச்யம் தோல்வியடைவார்கள்.

பரமசிவன் :—பார்வதீ! இவ்விஷயத்தில் நீ சற்றேனுங் கவலை கொள்ளல்வேண்டாம். நம் ரிஷபயோகியின் சீஷன் அவ்வளவு ஸாமான்யனல்லன். மேலும், இக்காம இச்சை காரணமாக இதற்கு முந்திய ஜன்மாவை அவன் வீணாக்கிக் கொண்டானாதலின், அவ்விச்சைக்கு அடிமையாகாதிருந்தாலன்றி, இப்பிறப்பில் நாமவனை யாட்கொள்ளல் தகாது. செல்வோம். (செல்லல்)

அங்கம் 5.

களம் 3.

இடம் :—கானகம்.

கீர்த்திமாலினி :—(பத்ராயுவை நோக்கி) பாடுதல்

இராகம், நாட்டைக்குறிஞ்சி: தாளம், ஆதி.

பல்லவி.

பொருத்தமாங் காலமிதுவே—புராரிபூஜை செய (பொ).

அநுபல்லவி.

திருத்தாரை தரித்தாடரவம் திரு
வருட்டாரை சொரிப்பாரை யடிதொழ (பொ).

சரணம்.

வெறுத்த னங்கனை யெரித்த கண்ணுதல்
செறுத்த மறலியை யொறுத்த வள்ளல்
சிரித்துத் திரிபுர மெரித்த வரைமன
திருத்தி புலனடக்கி வழிபடுத்த (பொ).

ப்ராணகாந்தா! இப்பிரதோஷவேளையில் பரமசிவன் பார்வதி தேவியாருடன் ரிஷபமீதேறித் தமது அடியாரை யாட்கொள்ளுநிமித்தம் பவனிவருவர் என்றும், அக்காலத்து மனத்தை யொருமைப்படுத்தி யவரை வழிபடுவார்க்கு நினைப்பன யாவுங் கைகூடுமென்றும் சாஸ்த்ரங்களும் புராணங்களும் முறையிடுகின்றன. அங்ஙனமின்றி, பகுத்தறி

வில்லாத ஏனைய ஜீவராசிகள்போன்று, காலதேசவர்த்தமானங்களைச் சற்றும் அநுஸரியாது, தற்காலம், நாம் காமவசத்தராய் இருத்தல் அடாது. தயைசெய்து தாங்கள் இத்தடாகத்தில் நீராடித் திருநீறணிந்து ஸந்திஸேவை செய்து வாருங்கள்.

பத்ராயு :—ஹா ! ப்ரியஸகி ! நீ கூறுவனவற்றுள் ஒன்றும் என்செவிக்கேறவில்லை. என்மனம் மன்மதபாணங்களால் மிகவும் புண்பட்டு வாடுகின்றது. என்மேல் சற்று இரக்கங்கொள்ளலாகாதா ? (பாடுதல்)

இராகம், காபி: தாளம், ஆதி.

பல்லவி.

பொறுக்கலாற்றே னடிமானே பொல்லாவிரகம் (பொ)

அநுபல்லவி.

கருப்புவில்லோன் கணையால் கண்மணிவாடா நின்றேன்
விருப்பமிக்கே யுன்னையான் வேண்டுகிறேன் தீனனாய் (பொ)

சரணம்.

மறுத்திடுவை யேலெனை மாண்டிடுவே னீதுண்மை
கருத்தொரு மித்தேஎனைக் கணித்தணைத் திடாயஎனில் (பொ)

ஆ! கீர்த்திமாலினீ !

கீர்த்திமாலினீ :—என் இறையே! என் பிராணநாயகா! சற்றே பொறுத்திருங்கள் ! தங்களுடைய க்ஷேமத்தை யுத்தேசித்து யானுவது ஈசனைத்தொழுது வருகிறேன். ஒரு தலைப்பட்ட காமம் ஸுகத்தைக் கொடுக்காத தன்றி சிற்சில ஸமயங்களில் துன்பத்தையும் விளைவிக்குமென்ற முதியோர் கூற்று தாங்களறியாத தன்றே ! சிறிதுநேரந் தாமதியுங்கள்.

கினைற்று நீரை வெள்ளம் ஈர்த்துச் செல்லாது. ஹூம். பொறுத்துக் கொண்டிருக்கமாட்டீரா? என் வேண்டுகோளைத் தாங்கள் எப்பொழுதும் மறுக்கமாட்டீரே! (பத்ராயு பெருமூச்சுவிடல்) அந்தோ! என் செய்வேன்! பெருமூச்செறிகிறீரே!

பத்ராயு :—கீர்...த்தி...மா...லினி!...ஹா!...

கீர்த்திமாலினி :—ஹா! காந்தா! கற்பகமே! கட்டழகா! என் இளஞ் சிங்கமே! அரசரேறே! இதோ தந்தேன் என்யாக்கையை. இதோ தந்தேன். என்முகத்தைச் சற்றே நோக்கும். இதோ உம் ஆவியும் மனமும் ஆகமுங்குளிர என் யௌவனத்தைப் பருகும். தங்களிஷ்டத்துக்கு மாறாகவும் யான் நடப்பேனா? தாங்கள் என் தெய்வமன்றோ? இதோ, மனமொருமைப்பட்டுத் தங்களை என்னிரு கரங்களாலு மணைக்கின்றேன். என்னை யாட்கொள்ளும். கருணாநிதியாமீசன் நம்மிருவரையும் மன்னிப்பார்.

பத்ராயு :—என் காதற்களஞ்சியமே! (அணைத்தல்) (அந்தணர் பரபரப்புடன்)

அறத்தினி லுலகங்காக்கு மாசனே யாசரேறே
மறப்புலி தொடர்ந்துகொல்வான் வருகின்ற ததனைநீயுன்
றிறப்படை யேவியாங்கே செகுத்துயிர் கவர்ந்துயாங்கள்
இறப்பது தவிர்த்தேயாவி ஈந்தெமைப் புரப்பாய்மன்னோ

ஏ அரசே! அதோ, ஒரு கொடிய வேங்கை என்னையுமென் மனையாளையும் துரத்திவருகின்றது. ஹா! அதோ! என் மனையாளருகில் வந்துவிட்டது. அப்புலி யவளைபற்றிக் கொல்லு முன் அதைக்கொன்று எங்களைக் காப்பாய்.

பத்ராயு :—ஆ! இஃதென்ன கொடியஸம்பவம்? அந்தணரே! புலி எங்கிருக்கின்றது?

அந்தணர் :—ராஜனே! தாமதியாதே! அந்தோ! புலி என்மனையாளைப் பற்றிக்கொண்டதே!

கீர்த்திமாலினி :—ப்ராணபதி! செல்வோம். அக்கொடு வரியைக் கொன்று அந்தணமாதைக் காப்பீர். தாமதிக்காதீர்.

பத்ராயு :—அந்தணரே! செல்வோம், வாரும்.

(யாவரும் செல்லல்)

அங்கம் 5.

களம் 4.

அந்தணமாது :—(புலிவாயினின்றும்) மன்னவனே! புலிவாயிலுற்றேன்! என் உயிரைக் காப்பதுன்பாரம்.

பத்ராயு :—தாயே! இதோ! இக்கணையால் புலியைக் கொன்று தங்களைக் காப்பாற்றுகிறேன்; பயப்படாதீர். (கணைவிடலும், புலி யதனுலுயிரிழக்காது அந்தணமாதின் குருதியைப் பருகத் தொடங்கலும்)

அந்தணமாது :—ஹா நாதா! ஹா சம்போ! ஜகத்பதே! இறக்கின்றேன்! (இறத்தலும் புலி யவள் சரீரத்தைப்பற்றிச் செல்லலும்)

அந்தணர் :—இருகரங்களாலும் தலையை மோதிக் கொண்டு) என்கண்மணி! ஹா! பதிவ்ரதாசிரோமணீ! அந்தோ! இனி யுன் புன் சிரிப்போடுகூடிய முகத்தை யான் எப்படிக்காண்பேன்! உன் குயிலொத்த தொனியோடுகூடிய கிள்ளை மொழிச் சொற்களை எப்படியான் இனிக்கேட்பேன்! "பார்வதி பாக்யரூபம்" என புராணங்கள் கூறுவதை யநுஸரித்தன்றோ உனக்கு அத்திருநாமமிட்டனர்! உருவத்திலும் குணத்திலும் உனக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமிலரே! உன்னைத்துணைவியா யடைந்து உன்னுடனில்லறம் குறைவற நடாத்திவந்த யான், இனி, யாவருதவியைக்கொண்டு அங்ஙன மியற்றவல்லேன். ஹா காந்தே! ஸுந்தரீ! புலி என்னைக் கவர்ந்து செல்லுமோ எனும் பீதியால் எனக்கு

முந்திச்சென்று புலிவாயுற்ற உன்னைக் காக்கமுடியாது என்னுயிரைத் தாங்கி ஏழையாய் நிற்கின்றேனே. (பாடுதல்)

இராகம், காம்போதி: தாளம், ஜம்பை.

அருந்ததியு மொவ்வாத கற்புடைய மனையவளே
பெரும்புலியின் பஹுவாயி லுயிரிழக்க விதிவசமோ
குரும்பைமுலைத் தாளநகைக் கொடியிடையுன் கொடுமைகண்டு
இரும்பனைய கொடுமனத்தே னிறவாம லிருக்கின்றேனே.

அந்தோ! அந்தணருக்குப் பின்புத்தி என்பாரே! அஃது என் விஷயத்தில் உண்மையாக வன்றோ முடிந்தது! இதுகாறும் யான் செய்துவந்த யோகத்தின் சக்தியும் தவத்தின் வலிமையும் எங்கே சென்றன! அவற்றினுதவியைக்கொண்டு இது போன்ற பல்லாயிரக்கணக்கான புலிகளையுங் கொல்லலாமே! அச்சக்தியை யானடைய உதவிபுரிந்துவந்த உன்மாட்டு அதைச்செலவிடத் தயங்கி ஏன் இந்தக் கயவனிடம்அடைக்கலம் புகுந்தேன்! ஹா! ப்ரியே! நாமிருவரும் நீடித்த காலம் சேர்ந்து வாழும் பாக்யமுடையரா யிருப்பின், இத்தேசத்தைத் தற்காலம் மனுமுறை வழுவாது காத்துவரும் பத்ராயு நமக்குத் துணைபுரிய இங்கு எதிர்ப்பட் டிருக்கலாகாதா! இக்கொடும் பாவியைப்போன்று அவன் என்னை இப்பரிதாப நிலையில் விட்டிருப்பானு! த்ரோகி! பரமசண்டாளா! வில்லும் அம்பும் அழகாய்க் கையில் வைத்திருக்கும் ஒரு தோற்பாவையென்று உன்னை மதியாது க்ஷத்திரிய குலத்துதித்த ஓர் உண்மை வீரனென யான் கொண்டேனே! நீ யாவனென் றென்னைச் சீக்கிரமறியவிடு. இதோ சபிக்கின்றேனுன்னை. நான் இதுவரையுஞ் செய்துள்ளதவ முழுவதையும் சாபமாக மாற்றி யுன்னை நசிக்கச் செய்கிறேன்.

பத்ராயு:—அந்தணேத்தமரே! யானிந் நாட்டையாளும் மஹாபாபியாம் பத்ராயுவே. இவ்வனிதை என் பத்னி கீர்த்திமாலினி யென்பாள். யானிப்புலியைக் கொல்லச் சக்தியற்றிருந்தது யாது காரணம் பற்றியோ அறியேன். இது என்ன மாயப்புலியோ! என்னைத் தாங்கள் மன்னித் தருளல் வேண்டும். தங்கள் சாபத்தைத் தாங்கும் சக்தி யெனக்கில்லது.

அந்தணர் :—பாபி! நீ பத்ராயுவா? த்ரோகி! நீயா எனக்கு இத்தீங்கிழைத்தனை?

கடுங்கானிற் புலியெனது கனங்குழையைக்
குருதியுண்ணக் கருதிநின்முன்
அடுங்காலத்த தனையுயிர் அழித்திலையேனின்
னுயிர்ப்புறங்காத் தஞ்சிநின்றாய்
கொடுங்கால தூதாடு களத்தினிற்பப்
பகைவர் வந்துகடும்போர்செய்யின்
நடுங்காது பகைதுறந்துன் அரசுநிலை
நிறுத்துவையோ நாமவேலோய்.

சீச்சீ! உனக்குப் பன்னிரண்டாயிரம் வேழ பலத்தையும் கட்கசங்காயுதங்களையும் எந்த அறிவிலி தந்தான்? உன் அளவு கடந்தபலத்தையும் சஸ்த்ரங்களையும் அந்தண ருடைய ஆபத்துக்களைக் களைய உபயோகியாது மற்றெதற் காகவோ நீ சேமித்து வைத்திருப்பது? ஹா! நீயும் ஒரு அர சனா? இவ்விதந்தானா உன்னரசை நீ காத்துவருகிறாய்? அர சன் என்பவன் ப்ரஜைகளுக்கு ஓர் ஊழியன் என்பதை நீ யறிந்திலையோ? ப்ரஜைகள் மெய்வருந்தி ஈட்டும் செல் வத்தை ஸ்வயநலத்திற் குபயோகப்படுத்திக்கொண்டு உல்லா ஸமாகப் பேதையர்களுடன் விஷயபோகமனுபவித்துக் கொண்டிருக்கும் பேதையும் ஓர் அரசனா? அடைக்கலம் புகுந்

தாரைக் காக்குந் திறமையற்றோனை ஓர் அரசன் என உயிர் வாழ்ந்திருத்தல் வேண்டும்? மூடனே !

பெண்ணாகி யந்தணர்தம் பேதையுமாய்
    நினக்கபயம் பேசினாளை
யெண்ணாது கொலும்வேங்கைக் குணவளித்துன்
    உயிர்காத்த எழைவேந்தே
மண்ணாள வெண்ணுதியோ இன்னமும் ஆ
    ருயிர்சுமந்து வலியிற்றாழ்ந்து
நண்ணார் தமிழிபுரைக்கு நடுங்கிடா
    நாபதியே நாணிலாதாய்.

ஓர் பெண், மேலும் அந்தணமாது, உன்னை யடைக்கலமும் புகுந்தாள். அவள் தன் கொழுநனைத் தனியே யலையவிட் டிறக்கமனமிராது உன்னை இறங்கி தன்னைக்காக்க வென்றுன் னிடம் ஒப்புவித்த அவளதாவியைக் குருதியுடன் கொடு வேங்கை யொன்று ஸாவதானமாய்ப் பருகிக்கொண்டிருக்க அந்நிலையினின்றவளை விடுவியாது அவளெதிரே நின்று உன் னுயிரைக் காத்து நின்றனையே ! ஐயோ ! என்வயிறு எரிகிறதே ! பேயே ! பௌருஷம் சிறதேனு மிராப்பேதாய்! பிடி சாபம் ! நீ இனியு முலகி லிருந்தாயாயின் உன்னால் உலகம் மிக்க கஷ்டத்துக் குள்ளாகும். உன்னை என் தபோ வலிமையால் ரௌரவ நரகத்தி லாழ்த்துகிறேன்.

பத்ராயு :—(அடியற்றமரம்போ லந்தணர் பாதத்தில் வீழ்ந்து) பெருந்தவத்தோரே! பொறுக்க வியலாத அபரா தத்தைத் தங்கள் மாட்டியற்றியதன் பலனாக யான் நரகத் தில் வீழ்கின்றேன். என்னுதீனத்துள்ள ராஜ்யமும் செல்வ மும் மற்றும் யாவும் தங்களுடையனவாக ஒப்புவிக்கிறேன். தயைகூர்ந் தங்கீகரித்தருளல் வேண்டும். தற்காலம் தங்க ளுக்கு நிகழ்ந்த இக்கொடிய ஸம்பவத்திற்கு யான் சற்றுங்

கருவியாயிருந்தேனில்லை யென்பது ஈசன் திருவுளமறியும். இனி தங்களது குறையைத் தீர்க்கு நிமித்தம் தாங்கள் வேண்டுவது யாதேயாயினும் தங்கள் சித்தத்தின்படி நடந்து கொள்ளக் காத்திருக்கிறேன். அருளுடையாய்! திருவாய் மலர்ந் தருளல்வேண்டும்.

அந்தணர் :—அரசனே! மனைவியையிழந்த என் துயரை உன் ராஜ்யமும் செல்வமும், அளவு கடந்தன வாயினும், எங்ஙனமாற்றும். அவைகளை யான் வேண்டேன். என் துயர் ஒருவாறு நீங்கி, ஆவியை இக்கூட்டின்கண் நிறுத்தி, தவங்களைக் குறைவறச்செய்வனே யான் இயற்றிவரவேண்டு வதை நீ யுண்மையிற் கோருவையாயின், உன்னுடைய தர்மபத்னி கீர்த்திமாலினியை எனக்கு இல்லத்துணைவியா யுதவல் வேண்டும்.

கீர்த்திமாலினி :—ஹா! ஹா! மறைவல்லாரே! இது ஈசன் திருவுளச்சம்மதமாமோ? மன்னிப்பீர்! என்பொருட்டு சாந்தத்தை மேற்கொள்ளும். தங்களுடைய பத்னியார் இறந்ததுபோன்று யானிறக்கும்படி செய்வதே இக்குற்றத்திற்கு யாங்களிருவரு மேற்றுக்கொள்ளத்தக்க தண்டனையாகும். உங்களிருவர் முன்னிலையில் என்னை யொருவேங்கைப் புலிக்குணவாக்குங்கள். அன்றேல்,தங்கள் திருவுளத்தின்படி எங்ஙனம் யான் கொல்லப்பட வேண்டுமோ அவ்விதமதை யடைய யான் ஸம்மதப்படுகிறேன். ஹா! பிராணகாந்தா! அந்தோ! தங்களது மனக்குறையையுந் தீர்த்திலேனே! என்னுவி துடிக்கிறதே! ஹா! ப்ரதோஷபதீ! இது உம் திருவுளச் சம்மதமாமோ?

பத்ராயு :—பிராம்மணோத்தமரே! உமதுவிருப்பமும் அதிசயிக்கத்தக்கதே! க்ஷத்திரிய குலத்திற் பிறந்தவர்க்குத் தமது பத்னியைப் பிறர்க்களித்தலைவிட இழிவான கருமம்

வேறிலது. ஆயினும், வேதசாஸ்த்ராதிகளின் உண்மைப்பொருள் முகத்தே ஜ்வலிக்கப்பெற்ற தங்களைப்போன்ருர்க்குப் பிரான்மணயாளிடம் மனப்பற்ருத லுண்டானதையும், பன்னீராயிரம் குஞ்சரபலத்தோனை என்கரத்தினின்று விடுபட்ட அம்பு ஒரு அற்ப புலியைக்கொல்லச் சக்தியற்றிருந்ததையும் யோசிக்குங்கால்,ஈசனைப் பூஜித்தற்குரித்தான இப்பிரதோஷகாலத்தே காமவெறிகொண்டு யான் மதிமயங்கியிருந்ததே இவைகளிரண்டிற்கும் காரணமாய் நின்றதெனக் காண்கிறேன். என் ஆத்மசக்தியையுங் குன்றச்செய்த இக்கொடுங் காமத்தைக் கொன்றேன். அக்காம மயக்கத்தை யான் கொள்ளக் காரணமாயிருந்த இக்கீர்த்திமாலினியை அவள் விரும்பும் வண்ணம் ......கொல்லத்துணி வேனுயினும்...... நீவிர்விரும்பியமையின் .... அந்தணரே ! .... உமக்குத் தந்தேன். தந்தேன். தந்தேன். (கீர்த்திமாலினியை நோக்கி) தாயே! இவ்வந்தணருடன் சென்று அவர் மனங்கோணுதவாறு அவரிடம் நடந்துகொண்டு நீர் ஸுகமே வாழ்வீராக! (பத்ராயு செல்லல்)

கீர்த்திமாலினி :—ஹா! ஈசா ! (மூர்ச்சித்தலும், அந்தணர் மறைதலும்)

அங்கம் 5.

களம் 5.

பத்ராயு :—(சிதையில் தீ வளர்த்தி) யான் புகழடைந்து இன்புற்றுவாழ்தற்பொருட்டு எனக்குப் பற்பலவிதத்தும் உதவிபுரிந்து வந்த என் பந்துமித்ரர்க ளனைவோரும் என்னை மன்னிப்பாராக! உடல்பொருளாவி மூன்றையும் புனிதமாக்க வல்ல ஞானோபதேசத்தை எனக்கருளிய தேசிகனார் என்னை மன்னிப்பாராக! வீரங்குன்றி புகழ்குன்றிப் பழியும் பாபமு மென்னை யாட்படுத்திய இந்நிலையில் உயிருடனிருத்தல் தர்ம மன்றாதலின் யான் அழலில் வீழ்கிறேன். மலையான்மகளுக் கிடப்பாக மீந்த என்னிறையே! அருட்பெருஞ் சோதியாம் நீ ரென்னை யாட்கொள்வீர்! (அழலில் விழப்போதல்)

கீர்த்திமாலினி :—ஹா! அழலில் வீழ்கின்றாரே!

பத்ராயு :—அம்மணி! தாங்கள் அந்தணரை நீத்து என் இங்கு வந்தீர்?

கீர்த்திமாலினி :—அந்தோ! என்ன கடுஞ் சொற்கள். அரசரே! நான் அந்தணரை நீத்துவரவில்லை. அந்தணர் எங்கோ மறைந்தனர். யானவரைத் தேடிக்கொண்டிருக்கு நிலையிலேதான் தங்களைக் காண நேர்ந்தது. தாங்கள் உயிரி ழக்க வேண்டாம்! ஈசா! யான் உயிரிழக்க லாகாதா!

பத்ராயு :—அம்மணி! யான் உலகத்தின் இழிபுரைக் கஞ்சி என்னுயிரை மாய்த்துக்கொள்ளுகிறேன். இது தர் மத்திற்கு விரோதமன்றாதலின் தாங்கள் தடை செய்யல் வேண்டாம்.

கீர்த்திமாலினி:—அரசே! வேண்டாம்! அழலை நெருங்காதீர்!

பத்ராயு:—ப்ரக்ருதியே! நீ என் என்னை இவ்விதம் பின் தொடர்ந்து வருத்துகின்றாய்? நான் ஈசனார்க்கு முற்றிலுமாட்பட்டேனாதலின் என்னை இனியும் பின் பற்றுதலுனக்குத் தர்ம மன்று.

(தீர்மானத்துடன் அழலில் விழப்போதல்)

கீர்த்திமாலினி:—அரசே! ஈசா! ஈசா!......

பரமன்:—(பார்வதி தேவியாருடன்) குழந்தைகாள்! உங்கள் பக்திக்கும் நீங்கள் கைவிடாது பற்றிச்செல்லும் தர்மநெறிக்கும் மெச்சினோம். நாங்களே உங்களிருவரையும் பரீக்ஷிக்கவந்த அந்தண தம்பதிகள்.

பத்ராயு:—அருட்பெருங் கடலே! என்னே எமது பாக்கியம்!

"தேவாதி தேவனைச் சிற்குணனை யற்புதனை
மூவா முதலாய் முழுப்பொருளாய் நின்றானை
காவாய் பிறவிக் கடனீந்தி க்கையிளைத்தேன்
நாவா யெனவேநின் னுண்மலர்த்தாள் பெற்றேனே"

கீர்த்திமாலினி:—

"உண்ணு நறையா வுவட்டாத் தெள்ளமுதாய்
மண்ணு மணியாய் மறைப்பொருளாய் நின்றானை
யெண்ணு லளவுபடாத் துன்பத் திடருழந்தேம்
கண்ணு லுறநோக்கிக் கையாற் றொழுகின்றேம்"

பரமன்:—ஏ பத்ராயு! கீர்த்திமாலினீ! உங்கள் தோத்திரத்திற்கு மனமுவந்தோம். நீங்கள்கோரும் வரங்களைக் குறைவின்றியளிக்கும் சித்தமுடையோ மாதலின் நீங்கள் கோருவன யாவோ?

பத்ராயு:—இரு ஜன்மங்களில் எமக்குக் குருவாய் நின்று யாம் இயற்றிய கர்மாக்களின் பலனைத் தம் ஆசிர்வாத சக்தி யால் எங்களை எளிதிலநுபவிக்கச் செய்து, புனிதராக்கி, ஞானத்தைப் புகட்டித் தங்களுடைய வானந்தக் காட்சியை யும் யாம் பெற வருள்புரிந்த எம் தேசிகனுர்க்கு யாங்கள் முற்றிலுங் கடமைப்பட்டுளோம். எல்லையிலா வானந்தத்துள் யாமே யாழ்ந்துளோமாதலின், எங்களை இந் நிலையடையச் செய்த அவரைத் தாங்கள் தக்கவா ருட்கொள்வ தெவ்வித மென்பது தங்கள் திரு வுளமொன்றே யறியும். மற்று, யானும், கீர்த்திமாலினியும், எங்களிருவோரின் தாய் தந்தை யரும், பத்மாகரனும், அவன் மனைவியும் மைந்தனும், நிரந் தரம் தங்கள் பாரிசத் திருந்துகொண்டு ஆனந்தவாரிதி யிலாழ்ந்திருக்க வாமருளல் வேண்டும். இதுவன்றி யாம் வேண்டுவது யாதொன்றுமிலதே.

பரமன் :—குழந்தாய்! நீ கோருவதற்கு மாறுபாடின்றி யான் நிரந்தரம் உங்களுடன் இருந்து ஆனந்தப்படுத்தி இறுதியிலுங்களை யாட்கொள்ளுகிறேன். நீ இராஜ்யத்திற் குத் திரும்பவும் சென்று கற்பிற்கரசியாம் கீர்த்திமாலினி யுடன் பதினுயிரமாண்டு நீதி வழுவாது அரசுபுரிந்து, இப் புவியைப் பாலனஞ்செய்துவருவதை என தாஞ்ஞையாகக் கொள். இதைமறக்காதே. (பார்வதியும் பரமனும் மறைதல்).

பத்ராயு :—கீர்த்திமாலினீ !

கீர்த்திமாலினி :—ப்ராணகாந்தா !

(இருவருமொருவரை யொருவரணைத்தல்).

சுபம்.

மத்ராஸ் லா ஜர்னல் பிரஸ், மயிலாப்பூர்